# பெண்ணியத்தில் என் கதைகள்

## நிர்மலா ராகவன்



# பெண்ணியத்தில் என் கதைகள்

நிர்மலா ராகவன்

சிறுகதைகள்

**மின்னூல் பெயர்:**
பெண்ணியத்தில் என் கதைகள்

**வகை :** சிறுகதைகள்

**ஆசிரியர் பெயர்:** நிர்மலா ராகவன்
**ஆசிரியர் மின்னஞ்சல் முகவரி:**
nirurag@gmail.com

**மின்னூலின் காப்புரிமை:** Creative Commons Attribution -NonCommercial-ShareAlike ( யாரும் பகிரலாம், விற்பனை கூடாது)

**அட்டைப்படம், மின்னூலாக்கம் :** த. சீனிவாசன்

tshrinivasan@gmail.com

**வெளியீடு** : FreeTamilEbooks.com , கணியம் அறக்கட்டளை

பதிவிறக்கம் செய்ய : https://freetamilebooks.com/ebooks/stories-on-feminism/

## முன்னுரை

பெண்ணியம் என்ற வார்த்தையைக் கேட்டாலே, பலவிதமான குரல்கள் எழும். `ஐயோ' என்னும் பழமைவாதிகளான ஆண்களும், `சீச்சீ!' என்று மறுத்து, `காலம் கெட்டுக்கிடக்கு!' என்னும் முதிய பெண்களும் இதில் அடக்கம்.

பெண்ணியம் ஆணை மட்டம் தட்டும் முயற்சி இல்லை. சிவ-சக்தியைப்போல் ஆண், பெண் இருவரும் இணைந்தால்தானே குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்?

“இப்படி எழுதறாங்களே என்று ஆத்திரப்பட்டிருக்கிறேன். என் மகளுக்குக் கல்யாணம் ஆனதும்தான் நீங்க சொல்றது எவ்வளவு சரின்னு புரியுது!' என்று

ஒத்துக்கொண்டார் ஒரு பத்திரிகை ஆசிரியர்.

தம்மாலும் தவறு செய்யமுடியும் என்று நேர்மையுடன் ஒத்துக்கொள்ளும் ஆண்கள், `உங்கள் எழுத்தால் என் இல்வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக ஆகியிருக்கிறது,' என்று நன்றி தெரிவித்திருக்கிறார்கள்.

இம்மாதிரியான கதைகளின் தொகுப்பு இது. படித்தவுடன் சிலருக்குக் கோபம் வரக்கூடும். நன்கு யோசித்தால், இவற்றிலுள்ள உண்மை தெரியவரும்.

நன்றி.

நிர்மலா ராகவன்

# பொருளடக்கம்

1 ஓர் எழுத்தாளர் மனைவி ஆகிறாள்...............11

2 நாற்று........................................................34

3 பெண்மை என்பது.........................................61

4 அடிபட்டவர் கை...........................................86

5 குழந்தையின் பெயர்...................................105

6 அம்மா பிள்ளை...........................................116

7 முகநூலும் முத்துலட்சுமியும் .....................132

8 பெயரின் முதல் எழுத்து.............................146

9 நான் பெண்தான்........................................166

10 புழுவல்ல பெண்.....................................185

11 நாளும் கோயிலும்...................................208

12 பெண்ணியம் யாருக்காக?.........................227

13 நிர்மலா ராகவன்......................................257

14 FreeTamilEbooks.com பற்றி..................262

15 கணியம் அறக்கட்டளை..........................287

தொலை நோக்கு – Vision........................287

பணி இலக்கு – Mission...........................288

தற்போதைய செயல்கள்...........................288

கட்டற்ற மென்பொருட்கள்.....................289

அடுத்த திட்டங்கள்/மென்பொருட்கள்.....291

வெளிப்படைத்தன்மை............................295

நன்கொடை.............................................296

# 1 ஓர் எழுத்தாளர் மனைவி ஆகிறாள்

**(பெண் முன்னேறினால் மிரளும் ஆண்)**

அப்போதுதான் வீட்டுக்குள் நுழைந்திருந்தார் நடராஜன்.

“என் நாடகத்தைப்பத்தி எல்லாரும் என்ன சொன்னாங்க?” எரிச்சலூட்டும் கேள்வி, மனைவியிடமிருந்து.

“அதான் ரேடியோக்காரங்க ஏத்துக்கிட்டு, பணமும் குடுக்கறாங்கல்ல? அப்புறம் என்ன? சும்மா தொணதொணத்துக்கிட்டு..!” கணவர் களைப்புடன் வீடு திரும்பியவுடன் தான் சுயநலத்துடன் பேச்சுக்கொடுத்தது தவறுதான் என்று, உடம்பைக் குறுக்கிக்கொண்டு உள்ளே போனாள் வசந்தா.

சிறிது நேரத்தில் அவள் கொண்டுவைத்த தேத்தண்ணீரை வெறித்துப் பார்த்தார் நடராஜன். அவர் உள்ளம் அதைவிட சூடாக இருந்தது.

மனைவி நாடகம் எழுத, அவளுடைய கற்பனையில் உருவான ஐந்து பாத்திரங்களில் தானும் ஒரு சிறிய அங்கமாக நடித்ததுகுறித்து அவமானம் ஏற்பட்டது.

அவளுடைய பெயர்மட்டும் சற்று உரக்க அறிவிக்கப்பட்டதோ?

`என்னங்க, நடராஜன்! பேருக்கு ஏத்தமாதிரி, சக்திக்கு அடங்கின சிவனா ஆயிட்டீங்களே! இனிமே நீங்கதான் பேரை மாத்தி வெச்சுக்கணும் — மிஸ்டர் வசந்தா அப்படின்னு!' வேடிக்கையாகச் சொல்வதுபோல், சகநடிகர்கள் உசுப்பேற்றினார்கள்.

அந்தக் கைலாய பரமசிவன் தன் உடலில் பாதியை பார்வதியுடன் பகிர்ந்துகொண்டு, அவளுடன் ஒன்றாக இயங்கினாராம். யாரோ புராண காலத்துக்குப் போய் பார்த்தமாதிரிதான்!

அட, அந்தக் காலத்திற்கு அது சரியாக இருந்திருக்கலாமோ, என்னவோ! இப்போதோ, ஆணுக்கு நிகராக உரிமை கொண்டாடும் வசந்தா போன்ற பெண்களால்தான் குடும்ப நிம்மதியே போய்விடுகிறது. நண்பர்களுக்குத்தான் எவ்வளவு கேலிப்பொருளாக ஆகிவிட்டோம்!

கோலாலம்பூரில், அங்காசாபுரி (ANGKASAPURI) என்ற பெரிய

வளாகத்துள் எதிரெதிரே இருந்தன மலேசிய தொலைகாட்சி, வானொலி நிலையங்கள்.

நாடகத்தில் நடித்து முடித்ததும், எப்போதும்போல் காண்டீனில் அமர்ந்து, அரட்டையே முக்கிய குறிக்கோளாய், ஆனால் மீ பிரட்டலை (நூடுல்ஸ்) சாப்பிடுவதுபோல் பாவனை செய்ய இன்று அவர் மனம் ஒப்பவில்லை.

பிறரது தலையை உருட்டும்போது இருக்கும் சுவாரசியம், `நான் அவர்களைவிட மேலானவன்!’ என்று அப்போது எழும் கர்வம், தானே பிறரது வாய்க்கு அவலாக மாறும்போது கிடைப்பதில்லையே!

அவர்களிடமிருந்து கத்தரித்துக்கொண்டு வந்தாலும், தன்னையும், வசந்தாவையும்பற்றித்தான் பேசுவார்கள் என்று நன்றாகவே தெரிந்திருந்தது நடராஜனுக்கு.

என்ன பேசுவார்கள்? `இவரும்தான் முப்பது வருஷமா `நடிகன்'னு பேரை வெச்சுக்கிட்டு காலந்தள்ளறாரு! பளபளப்பான சட்டையும், அதிலே எக்கச்சக்கமா செண்டும் போட்டுக்கிட்டு, நாலுபேர் கூடற எல்லா எடத்துக்கும் தப்பாம வந்து, ஏதாவது சண்டை இழுத்து, அதனாலேயே எல்லாருக்கும் தன்னைத் தெரியறமாதிரி செய்துக்கிட்டிருந்தா ஆச்சா?' என்று

பழித்துவிட்டு, அதே மூச்சில், `அதுவே, அந்தம்மா இருக்காங்களே! குடத்துக்குள்ளே இருக்கிற விளக்கு!' என்று வசந்தாவை எங்கோ கொண்டு வைப்பார்கள்.

அவர்கள் பேசுவதை இவர் ஒன்றும் கற்பனை செய்து பார்க்க வேண்டியிருக்கவில்லை. சாடைமாடையாக, இவர் எதிரிலேயே பல முறை பேசி வந்ததுதானே!

வசந்தா முதன்முதலாக எழுத ஆரம்பித்தபோது, `இவள் என்ன பெரிசா கிழிச்சுடப்போறா!' என்று தான் அசிரத்தையாக இருந்தது தப்பு என்று இப்போது, காலங்கடந்து யோசனை வந்தது.

அப்போதெல்லாம் அவரிடமே பிறர் அவளைப் பாராட்டிப் பேசியபோது, பெருமையாகத்தான் இருந்தது. நண்பர்களுடையதைவிட விலை அதிகமான விளையாட்டுச் சாமான் தன்னிடம் இருப்பதற்காகப் பெருமை கொள்ளும் சிறுவனது மனநிலைக்கு ஆளானார். மனைவி தன் உடைமை. ஆகவே, தான் அவளைவிட மேலானவன் என்பதுபோல் நடந்துகொண்டார். அதுவும் பொறுக்கவில்லை பிறருக்கு. பலவாறாகத் தூபம் போட்டார்கள்.

`உன் மனைவி பேரும் புகழுமாக இருந்தால், அதில் அவளுக்குத்தான் பெருமை. உனக்கென்ன வந்தது?’ `நீ இப்படியே அவளை வளரவிட்டால்,

நாளைக்கு உன்னையே மதிக்கமாட்டாள், பார்!’

நடராஜனுக்குப் பயம் வந்தது.

இப்போது இவள் எழுதி என்ன ஆகவேண்டும்? அலுவலக உத்தியோகத்துடன், அவ்வப்போது மேடை, வானொலியில் நடிப்பதாலும் தனக்குக் கிடைப்பதே போதாது?

அட, பணத்தைப் பெரிதாக எண்ணியா தான் நடிக்கப் போனோம்?

எல்லாரையும்போல, `கலைக்குத் தொண்டு செய்கிறேன்!’ என்று வெளியில் மிதப்பாகச்

சொல்லிக்கொண்டாலும், செய்யும் தொண்டு தனக்கேதான்; தன் பெயர் பிரபலமாக வேண்டும் என்ற சுயநலத்தால்தான் என்று அவருக்கும் தெரிந்துதான் இருந்தது. இதில் என்ன கேவலமாம்? எல்லாம் வல்ல இறைவனே புகழ்ச்சிக்கு அடிமை! கடவுளைப் புகழ்ந்து வேண்டுபவருக்குத்தான் நல்லது நடக்கிறது. அவனுடைய படைப்பான தான் மட்டும் எப்படி வித்தியாசமாக இருக்க முடியும் என்று தன்னைத்தானே சமாதானமும் செய்துகொண்டார்.

அபூர்வமாக, எவளாவது, `நான் உங்கள் விசிறி!' என்று இளிச்சவாய்த்தனமாக

சொல்லும்போது, என்னவோ கடவுள் ஸ்தானத்துக்கே உயர்ந்துவிட்டமாதிரி பிரமை ஏற்படும் நடராஜனுக்கு. மெனக்கெட்டு வருவித்துக்கொண்ட பெரியமனிதத்தனத்துடன், தலையைச் சற்றே அண்ணாந்து, எங்கோ பார்த்தபடி ஓரிரு வார்த்தைகள் பேசுவார்.

வீட்டுக்கு வந்ததும், வாய் ஓயாமல், தன்னைப்பற்றி தன் ரசிகைகள் என்ன நினைக்கிறார்கள், என்னவெல்லாம் சொன்னார்கள் என்று ஒன்றைப் பத்தாக்கி மனைவியிடம் கூறுவார். அவர் எது சொன்னாலும், புன்னகையுடன் கேட்டுக்கொள்வாள் வசந்தா.

இப்போதும், நண்பர்கள் தன்னை ஓயாது மட்டந்தட்டுவதைச் சொன்னார், மிகுந்த ஆற்றாமையுடன் — `விழுந்துட்டேம்மா!' என்று தாயிடம் வந்து அழும் குழந்தையைப்போல.

“விட்டுத் தள்ளுங்க!” என்றாள் வசந்தா.

“நானும் அதான் நினைச்சேன். அவங்க பெண்டாட்டி எல்லாம் ஒரே மக்கு. அதான் அவங்களுக்கு வயத்தெரிச்சல்!” என்றவர், “எனக்கு அதிர்ஷ்டம்! ஒன்னைமாதிரி புத்திசாலியான பெண்டாட்டி வாய்ச்சிருக்கு!”

வசந்தாவுக்கும் பூரிப்பாக இருந்தது. இன்னும் நிறைய எழுதி, கணவனுடைய பெருமையை உலகுக்குக் காட்ட வேண்டும் என்று நிச்சயித்துக்கொண்டாள்.

வேலை முடிந்து, அப்போதுதான் வீடு வந்திருந்தார் நடராஜன்.

“பிளாஸ்கில் டீ வெச்சிருக்கேன்,” என்ற குரல் அசரீரியாகக் கேட்டது.

தன்னைக் கவனிக்காது, தன்பாட்டில் எழுதிக்கொண்டிருந்த மனைவியின் போக்கு உறுத்தியது. கட்டின கணவனைவிட இவளுக்கு எழுதுவதால் கிடைக்கும் பெயரும், புகழும்தானே பெரிதாகிவிட்டன

என்ற ஆத்திரத்துடன், “அந்த டீயை நீ வந்து எடுத்துக் குடுத்தா கொறைஞ்சு போயிடுவியோ?” என்று கத்தினார்.

எதுவும் பேசாது, பேனாவை மூடி வைத்துவிட்டு எழுந்தாள் வசந்தா. அன்றையிலிருந்து அவர் பார்க்க அவள் எழுதவில்லை. ஆனால், அவளுடைய எழுத்துப் படிவங்கள் என்னமோ வெளியாகிக்கொண்டுதான் இருந்தன.

நடராஜன் தன் அணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டார்.

“வீணா ஒடம்பைக் கெடுத்துக்காதேம்மா. இந்த தள்ளிப்போன நாட்டில, எழுதறதுக்கு ஒரு பயல் காசு குடுக்கறதில்ல. அப்புறம் எதுக்காக எழுதறது? கண்ணுக்குக் கீழே எப்படிக் குழி விழுந்துபோச்சு, பாரு!” என்றார், அன்பு சொட்டச் சொட்ட. அவருடைய கரிசனம் வசந்தாவுக்கு வேண்டியிருந்தது. ஆத்திரப்பட்டவர் இப்படி மாறி விட்டாரே!

“பொழுது போகணுமே!” என்றாள் அப்பாவித்தனமாக.

“சினிமா, கச்சேரின்னு நாலு எடத்துக்குப் போயிட்டு வா. இல்லே, ஓய்வா, வீட்டிலேயே வீடியோ பாரு!”

சில நாட்கள் கணவர் சொன்னதுபோல் செய்துபார்த்தாள் வசந்தா. மனதில் ஏதோ வெறுமை. எதையோ இழந்ததுபோல் இருந்தது. என்னவாக இருக்கும் என்று யோசித்து, மீண்டும் எழுத முயன்றாள்.

இப்போது ஏதேதோ பயம் எழுந்தது. கணவர் வீடு திரும்புவதற்குள் எழுதி முடிக்கவேண்டும். அவருக்குச் சுடச்சுட தேநீர் போட்டால்தான் பிடிக்கும். இல்லையேல், மௌனமாக அமர்ந்து, பெருமூச்சாலேயே தான் கவனிப்பாரின்றி வாடுவதை உணர்த்துவார். அவளுக்கு அவரை அப்படிப் பார்க்க பரிதாபமாக

இருக்கும். தான் தன் கடமையிலிருந்து தவறிவிட்டோம் என்ற உறுத்தல் உண்டாகும்.

இப்போது ஒவ்வொரு வரி எழுதியபிறகும், கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டாள். உருப்படியாக எதுவும் எழுத முடியவில்லை.

இரவில் அவர் தூங்கியபின் எழுதினால், இந்தக் குழப்பங்கள் எழாது என்று தீர்மானித்தாள்.

தூக்கக் கலக்கத்தில் கையை விசிறிப் போட்டபோதுதான் அவள் தன் பக்கத்தில் இல்லாததை உணர்ந்தார் நடராஜன். தூக்கம்

கலையாமலேயே, அசைந்து அசைந்து அவளைத் தேடி வந்தார்.

“இப்படித் தனியா படுக்கிறதுக்கா வசந்தி, ஒன்னைக் கட்டிக்கிட்டேன்?” என்று அவர் கேட்டது அவள் காதில் இன்னும் ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது.

வசந்தாவுக்கு இப்போது குழப்பமில்லை. அவளுக்குப் புரிந்தது.

ஆண்’ என்பவன் உருவத்தில் மட்டும் பெரிதாக வளர்ந்திருக்கும் குழந்தை!

சிறு வயதில் அம்மாவின் ஏகபோக கவனிப்புக்காக தம்பி, தங்கைகளுடன் போட்டி போட்டதைப்போல, இப்போது மனைவியின் பரிபூரண கவனிப்பும், அக்கறையும் தன் ஒருத்தனுக்காகவே இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கும் புத்தி அவனுக்கு!

அத்துடன், ஒரு பெண் தனக்கு அடங்கி இருப்பதைத்தான் சராசரி ஆண் விரும்புகிறான். இது கற்காலத்திலிருந்து வரும் நியதி. கொடிய விலங்குகளைத் தனியே எதிர்க்கும் சக்தியின்றி, தன்னைப் பாதுகாக்கும் பொறுப்பை ஆணிடம் ஒப்படைத்தாளே, பெண்! அப்போது

அவனுக்கு ஏற்பட்ட பெருமிதம் இன்றும் அவனுக்குத் தேவைப்படுகிறது.

தன்னை நாடாது, தன்னை மீறி அவள் ஏதாவது செய்ய ஆரம்பித்தால், அடிப்படை ஆண்மையிலேயே சந்தேகம் தோன்ற, அந்த எண்ணத்தின் பயங்கரத்தில் அவள் வீழ்ச்சி காண வழி வகுக்கிறான்.

இப்போதெல்லாம் யாராவது வசந்தாவை, “பத்திரிகைகளிலே ஒங்க கதைகளைப் பாக்க முடியறதில்லியே?” என்று உள்ளூர மகிழ்ச்சியுடன், ஆனால் வார்த்தைகளில் கரிசனம் சொட்டக்

கேட்கும்போது, `ஆமா! ஒரு காசுக்குப் பிரயோசனம் இல்லை இதால! (100 ஸென் (காசு) = 1 மலேசிய ரிங்கிட்). நேரம்தான் தண்டம்,' என்று தனக்குள் சொல்லிக் கொள்கிறாள்.

உரக்க, "எங்கே! வீட்டு வேலையே சரியா இருக்கு. அதோட, எங்க வீட்டுக்காரரர் கைப்பிள்ளை மாதிரி. அவருக்குத் தேவையான ஒவ்வொரு காரியத்தையும் நான்தான் பாத்துப் பாத்து செய்யணும்!" என்று பெருமை பேசுகிறாள்.

தன்னைப்போன்று, `குடும்பமே பெண்ணாகப் பிறந்ததின் லட்சியம்' என்ற கொள்கையுடைய மற்ற பெண்களுடன் சேர்ந்து வெளியே

போகிறாள், அரட்டை அடிக்கிறாள். அவர்களைப்போல் இல்லாது, கணவரை மீறிக்கொண்டு புகழ் பாதையில் பீடுநடை போடும் யாராவது அபூர்வமான பெண்ணைப்பற்றி மட்டந்தட்டிப் பேசுகையில், ‘நல்ல வேளை, எனக்குப் புத்தி வந்ததே!’ என்று திருப்திப்பட்டுக் கொள்கிறாள்.

# 2 நாற்று

## (பிள்ளை பெற்றால்தான் பெண்ணா?)

நான்கு குறைப் பிரசவங்கள். பின்னர், சோதனைக்குழாய்வழி வயிற்றில் வளர்ந்த கருவும் மூன்றே மாதங்களில் வெளிப்பட்டு விட்டது. `தத்து எடுக்கலாம்,' என்று அவர் சொன்னதற்கும் அவள் செவி சாய்க்கவில்லை. குழந்தை அவள் உதிரத்தில்தான் உதிக்க வேண்டுமாம். ஒருவரையும் ஏறிட்டுப் பார்க்க விரும்பாது, சுவற்றுப்புறம் திரும்பி விசும்பிக் கொண்டிருந்த ஆசைமனைவியின் முகத்தில்

சிரிப்பைக் காண
வேண்டுமென்றால்,
தமிழ்நாட்டுக்கென்ன, உலகின்
எந்தக் கோடிக்கானாலும் அழைத்துப்
போகலாமே என்ற யோசனை
வந்தது அந்தச் செல்வந்தருக்கு.

`மனசைத் தளர விடாதேம்மா.
இன்னும் ஒரு வழி இருக்கு. இதைப்
படிச்சுப் பாரு!' என்று ஒரு
பத்திரிகையில் வந்திருந்த
கட்டுரையைக் குறிப்பிட்டுக்
காட்டிவிட்டு அப்பால் சென்றார்.
பல பெண்களின் பேட்டியுடன்
வந்திருந்ததை ஒரு கதையாக
நினைத்துப் படித்தாள்.

“தே! நீ என்னா சொல்றே? இப்ப தலையைத் தலையை ஆட்டிட்டு, யார் பிள்ளையோ என் வயத்திலே வளர்றதைப் பாக்கிறப்போ, ஒன்னால அதை ஏத்துக்க முடியுமா?”

ஆட்டோ ஓட்டிப் போனபோது ஏற்பட்ட விபத்தில் இடுப்புக்குக்கீழ் சுவாதீனம் அற்றுப்போய், காலமெல்லாம் மனைவியின் கையை எதிர்பார்க்க வேண்டும் என்ற நிலை வந்தபோதுகூட ராசப்பா அவ்வளவு குழம்பவில்லை. எதுவும் சொல்லத் தெரியாது, அவளையே பார்த்தான். அவனைக் கணவனாக வரித்த கொடுமை, இப்போது குடும்ப பாரத்தைச் சுமக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவளுக்கு. எந்த

இளம்பெண் எப்போது நிர்க்கதியாக நிற்பாள் என்று காத்திருந்தவர்போல, அவர்கள் வாழ்க்கையில் நுழைந்திருக்கிறாரே இந்த மனிதர்! இப்படியெல்லாம்கூடவா பணம் சம்பாதிப்பார்கள்!

“ஒங்களுக்கென்ன! ஒங்க பேரைச் சொல்ல லட்டுமாதிரி பிள்ளை இருக்கு. எத்தனை பேருக்குக் கிடைக்கும் இந்த பாக்கியம்!” என்று நைச்சியமாக ஆரம்பித்த தரகர் பூபதி, “சில பேருக்கு, கல்யாணமாகி பத்து, பதினஞ்சு வருஷமானாலும் பிள்ளை பாக்கியமே இல்லை, பாவம்!” என்று பொய்யாகப் பரிதாபப்பட்டார். பின், அவர்களை

ஒரு பார்வை பார்த்துவிட்டு, "எல்லாத்துக்கும் கொடுப்பினை வேணுமில்ல!" என்று கொக்கி போட்டார். அவர் மேலும் சொன்னதைக் கேட்டு, நாகம்மாதான் வெகுவாக அதிர்ந்து போனாள்.

யாருடைய கர்ப்பப்பையிலோ வளரவேண்டிய கருவை அவளுடைய வயிற்றில் விதைப்பார்களாம். அதை முழுமையாக வளரவிட்டு, பெற்றெடுத்து, அதற்கு உயிர் கொடுத்தவர்களிடமே கொடுத்துவிட வேண்டுமாம்!

"சும்மா இல்ல. மாசாமாசம் ஆயிரம் ரூபாய் குடுப்பாங்க. பிள்ளை

பிறந்ததும், சுளையா இன்னொரு அம்பதாயிரம்!" நைச்சியமாகச் சொன்னார் பூபதி. பணத்தாசைக்கு மசியாதவர் யார் என்று எண்ணித்தான் அவர் அந்த இடத்துக்கு வந்திருந்தார்.

ஆனால் நாகம்மா வேறு ஒன்றை யோசித்தாள்: `என் வயத்தை வாடகைக்குக் கேக்கறாங்க!' உடலை விற்றுப் பிழைப்பதுபோல் ஆகிவிடாது?

இவளை அதிகம் யோசிக்கவிட்டால் ஆபத்து என்று பூபதி மேலும் தூபம் போட்டார். "இதெல்லாம் முப்பது, நாப்பது வருஷமா அமெரிக்காவில இருக்கிற நடைமுறைதான்.

இல்லாதவங்களுக்கு இருக்கிறவங்க குடுக்கிற தானம்! அதோட.., நீங்க ஒண்ணும் சும்மா குடுக்கப்போறதில்ல!”

தன்னை எதற்குக் குறிவைத்தார் இந்த மனிதர்? வெளிப்படையாகவே கேட்டாள் நாகம்மா.

“அது வந்தும்மா..,” சற்று யோசனையில் ஆழ்ந்தார். “பிறக்கப்போற குழந்தைக்கு நீங்க அம்மா இல்லியா? கண்ட கழிசடை எல்லாம் அம்மா ஆகிட முடியுமா? அதான், ஒங்களைமாதிரி.. நல்ல விதமா குடும்பம் நடத்தி, ஒரு பிள்ளையாவது பெத்துக்கிட்டவங்களாப் பாக்கறோம்.

வயசு.. ஒரு இருபத்தஞ்சிலேருந்து முப்பதுக்குள்ளே இருந்தா, பிரசவத்திலும் குளறுபடி இருக்காது”.

இன்னொரு உயிரா! வீட்டிலிருக்கிற மூன்று பேருக்கே அவள் கூலிவேலை செய்து கொண்டு வருகிற சொற்ப வருவாயில் அரை வயிறுகூட நிரம்புவதில்லை.

அவளது மன ஓட்டத்தைப் புரிந்துகொண்டவராக, “பேசினதைத் தவிர, ஒங்களுக்கு ஆகிற சாப்பாட்டுச் செலவு, பால், பழம், உடை எல்லாத்துக்கும் தனியா குடுப்பாங்க. நீங்க வேலைக்குப்

போக வேணாம்,” என்று மேலும் ஆசை காட்டினார்.

நாகம்மாவுக்கு ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. அழுகைதான் வந்தது. அதைப் பார்க்கப் பொறாதவனாய், முதன்முறையாக ராசப்பா பேசினான்: “யோசிச்சுச் சொல்றோங்க ஐயா!”

“ஒங்க இஷ்டம்!” என்றபடி எழுந்தார் பூபதி. வாசலுக்கு வந்தவர், தன்னையும் அறியாது மூக்கைப் பிடித்துக்கொண்டார். ஆறெனப் பெருகி ஓடும் சாக்கடை. அதையே நீச்சல் குளமாகப் பாவித்து, மனமகிழ்ந்து, எம்பி எம்பிக் குதித்துக்கொண்டிருந்த பன்றிகள்.

`எப்படித்தான் இந்த நாத்தத்திலே சாப்பிட்டு, தூங்கி, குடும்பம் நடத்தறாங்களோ!' அருவருப்புடன் உதட்டைச் சுழித்துக்கொண்டார். `இந்த லட்சணத்தில, சுலபமா சம்பாதிக்க வழி காட்டினா, அதுக்கு ஆயிரம் யோசனை!' இயலாமையில் ஆத்திரம் பிறந்தது அவருக்கு.

மீண்டும் ஏதோ நினைத்துக்கொண்டவராய், குடிசையினுள் நுழைந்து, சாணி போட்டு மெழுகியிருந்த தரையில் அமர்ந்தார். "முக்கியமான ஒண்ணைச் சொல்ல மறந்துட்டேனே! இதில தில்லுமுல்லு ஏதுமில்ல. ரெண்டு தரப்புக்கும் வக்கீல் வெச்சு ஒப்பந்தம் எழுதுவாங்க டாக்டரம்மா.

ஒங்களுக்கும், பிள்ளையை வாங்கப்போறவங்களுக்கும் எந்த சம்பந்தமும் இருக்காது. இருக்கக்கூடாது!” என்று அழுத்திச் சொன்னவர், அந்த ஏற்பாட்டால் தனது பொருளாதாரம் கணிசமாக உயரப்போவதை கற்பனை செய்து மகிழ்ந்தார்.

ராசப்பாவுக்கும் ஆசை பிறந்தது. கைநிறையப் பணம் கிடைத்தால், தான் இப்படி படுக்கையே கதி என்று இருக்க வேண்டாம். ஒன்றுக்குப் போக, குளிக்க என்று எந்த ஒன்றுக்கும் பிறர் கையை எதிர்பார்க்க வேண்டாம். எத்தனை நாட்கள்தான் முகம் சுளிக்காமல் செய்வாள் நாகம்மா!

“இன்னும் என்ன யோசனை, நாகு! ஐயா சொல்றதுபோல, இது ஒரு வியாபாரம்னு நெனச்சுக்கயேன்,” என்றான்.

அடைத்த குரலில் நாகம்மா பூபதியைக் கேட்டாள்: “அந்தப் பிள்ளை எப்படி..?”

அவர் நெற்றியில் அடித்துக்கொண்டார். “முக்கியமானதைச் சொல்லாம விட்டுட்டேன், பாருங்க!’ என்று பெரிதும் நொந்துகொண்டவராக, “இது மத்த பிள்ளைங்களைப்போல இல்ல. அம்மா ஒடம்புக்கு வெளியே உருவாகுது. அப்பாவோட உயிரணு, அம்மாகிட்டேயிருந்து சினைமுட்டை

ரெண்டையும் டாக்டரே ஒண்ணா சேர்த்து..,” என்று உற்சாகமாக ஆரம்பித்தவர், இந்தப் பாமரர்களுக்கு விஞ்ஞான ரீதியில் விளக்கம் எதற்கு என்று நிச்சயித்தவராக, “மண்ணிலே விதை போட்டா, செடி முளைக்கிற மாதிரிதான்னு வெச்சுக்குங்களேன். கரு உருவாகிடுச்சுன்னு உறுதி ஆனப்புறம், ஒங்க வயத்தில அதை விதைச்சுடுவாங்க. ஏன்னா, அந்த அம்மா வயத்தில கரு தங்கறதில்லே!”

“நாத்து நடறமாதிரி!” என்றாள் நாகம்மா. அவளுடைய முகத்தில் தெளிவு. தான் அறியாத அந்தப் பணக்காரப் பெண்மணியின்மேல்

இரக்கம் சுரந்தது. தான் அவளைவிட ஒரு விதத்தில் மேலானவள்! அச்சமயம் பார்த்து, சிறுவன் வேலு தூக்கத்திலிருந்து எழுந்தான். நேராக நடந்து வந்து, தாயின் மடியில் அமர்ந்துகொண்டு, “பசிக்குதும்மா,” என்று முனகினான். இன்னும் கொஞ்ச காலத்துக்காகவாவது அவள் குடும்பத்தினர் வயிறாரச் சாப்பிடுவது அவள் கையில்தான் இருக்கிறது. அதைப்போய் தடுப்பானேன்!

பெருமூச்சுடன் அவனை அணைத்து, “ஒனக்குத் தம்பிப்பாப்பா பொறக்கப்போறாண்டா!” என்றாள்.

மாதங்கள் உருண்டன.

தாயின் பருத்திருந்த வயிற்றைத் தொட்டுப்பார்த்தான் வேலு. கரு உருண்டு, இன்னொரு கோடிக்குச் சென்றது. நாகம்மா கனிவுடன் வயிற்றைத் தடவினாள். சுகமான சுமை. யாருடைய உயிராக இருந்தால் என்ன!

இப்போதெல்லாம் இந்தப் பிள்ளைக்காகவே அவள் சாப்பிடுகிறாள், தூங்குகிறாள்! இந்தக் குழந்தைக்கு செடிகளைப் பிடிக்கும், இசையில் ஆர்வம் என்று தன் மனதில் எழும் நெகிழ்ச்சியால் புரிந்து போகிறது அவளுக்கு. வீட்டின் பின்புறமுள்ள தோட்டத்திலேயே நாளின் பெரும்பகுதியைச்

செலவழிக்கிறாள். குழந்தை அதிர்ந்துவிடப்போகிறதே என்ற கரிசனத்துடன், சினிமாப் பாடல்களைத் தவிர்க்கிறாள். மலேசிய வானொலியில் கேட்டிருந்த பழம்பாடல்களையும், பக்திப் பாடல்களையும் வாய் ஓயாது முணுமுணுக்கிறது. ஸ்ருதி, ஸ்வரம் போன்ற வார்த்தைகள் அவளது அகராதியில் கிடையாது. ஏதோ, தனக்குத் தெரிந்தவரை கள்ளக்குரலில் கீச்சுமூச்சென்று பாடுகிறாள். அவள் வயிற்றுக் கருவும் அதில் திளைத்து ஆனந்தப்படுவதாகத்தான் தோன்றுகிறது அவளுக்கு.

வேலுவை உண்டாகி இருந்தபோது இப்படி ஆழ்ந்து யோசித்ததாக நினைவில்லை. எதுவுமே கைநழுவிப் போய்விடும் என்ற நிலை வரும்போதுதான் அதன் மீதுள்ள ஆசை அதிகரிக்குமோ என்று யோசிக்க, கலக்கம் பெருகியது.

தன்னுடலின் ஒரு பாகமாக பத்து மாதங்கள் இருந்த பிள்ளை. அது ஆணா, பெண்ணா, கறுப்பா, சிவப்பா, தலைமயிர் சுருட்டையா, அடர்த்தியா என்றெல்லாம்கூட அவள் பார்க்கக்கூடாதாம்!

நாகம்மாவுக்கு அழுகை வந்தது. “அம்மா!” என்று விம்மினாள்.

“அம்மான்னு இப்போ கத்தக்கூடாது. அப்புறம், குழந்தை ஒன்னை விட்டுவர மனசில்லாம தவிக்கும்!” பிரசவ வலி எடுத்திருந்தவளைத் தாதி மிரட்டுகிறாள்.

“குழந்தைக்கும் தன்னை விட்டுத் தனியாகப் பிரிய மனம் வராதா?’ லேசான திருப்தி நாகம்மாவுக்குள். உடனே, தன் மனம் போன போக்கிற்காகத் தன்மேலேயே கோபம் எழுகிறது. `இது என்கூட இருக்கப்போவது இன்னும் சில நாட்களே!’ என்று தான் உருகியதோடு போகட்டும். அருமையாக வளர்த்த இக்கருவும் துயரப்பட வேண்டாம். வலி தாளாது, கண்களை இறுக மூடி, வாயை

மட்டும் கோணுகிறாள்.
திடீரென ஒரு நிம்மதி, உடல் லேசாகியதுபோல். தொடர்ந்து, பூனைக்குட்டி கத்துவதுபோல ஓர் ஒலி!

குழந்தை பிறந்துவிட்டது என்று உணர்ந்தபோதே அச்சமும் அலைக்கழைத்தது. அவசரமாகக் கண்ணைத் திறந்தாள். சமநிலைக்கு வந்திருந்த வயிற்றைத் தன்னிச்சையாகத் தடவினாள். பக்கவாட்டில் கண் போயிற்று. வெறுமை — அவள் வயிற்றிலும், பக்கத்திலும். நாகம்மா விம்ம ஆரம்பித்தாள்.

“இப்போ எதுக்கு அழுவறே? மொதல்லேயே எல்லாம் கேட்டுட்டுத்தானே ஒத்துக்கிட்டே? பேசாம தூங்குவியா!” பச்சைப்பிள்ளைக்காரி கண்கலங்கி, அவள் உடம்பு கெட்டுவைத்தால், தனக்கு வேலை அதிகமாகுமே என்ற எரிச்சல் தாதிக்கு.

கண்ணை மூடிக்கொண்டாள் நாகம்மா. குழந்தையின் ஈனஸ்வரமான அழுகைக் குரல் இன்னிசையாக அவள் காதில் ஒலித்துக்கொண்டே இருக்க, அப்படியே உறக்கத்தில் ஆழ்ந்தாள்.

“என்ன ராசப்பா? சக்கர நாற்காலி வாங்கிட்டாப்பல இருக்கு!

சாப்பாட்டுக் கடை வெச்சிருக்கியா? நடக்கட்டும், நடக்கட்டும்,” ஆரவாரமாகப் பேசியபடி வந்தார் தரகர் பூபதி. “ஒன் பொஞ்சாதி எங்கே? கூப்பிடு!”

வெந்த இட்லிகளைத் தட்டில் கொட்டிக்கொண்டிருந்த நாகம்மா அவர் குரலைக் கேட்டதும் பாய்ந்து வெளியே வந்தாள். “பிள்ளை எப்படிங்க ஐயா இருக்கு?”

“அதுக்கென்ன! பெரிய இடத்துப் பிள்ளை! அதைப் பெத்தவங்க ஒங்களை தெய்வமாத்தான் நினைச்சுக்கிட்டு இருக்காங்க,” என்று அளந்தார்.

குரலைக் கனைத்துக்கொண்டு, “அதே மாதிரி இன்னொரு கேசில்ல! இதை நீங்க ஒத்துக்கிட்டா, பெரிய ஹோட்டலே வெச்சுடலாம்,” என்று ஆரம்பித்தார்.

ராசப்பாவின் முகத்தில் லேசான ஆசை படர்ந்தது. விளங்காத பயலென்று தன்னை இப்போது பழிப்பவர்கள் தான் ஹோட்டல் முதலாளியானால் எப்படி மரியாதை செய்வார்கள் என்று கற்பனை பாய, உடல் நிமிர்ந்தது. சற்றே கெஞ்சலான பார்வையை மனைவியின்மேல் ஓடவிட்டான்.

யாரும் சற்றும் எதிர்பாராவண்ணம், நாகம்மா தரகர்மேல் பாய்ந்தாள்.

“ஒங்களுக்கு ஒரு பெரிய கும்பிடு, சாமி. இந்த எடத்தைவிட்டுப் போயிடுங்க. என்னோட வயத்திலே சுமந்து, சுமந்து யாருக்கோ தூக்கிக் குடுக்க என்னால முடியாது. `தம்பிப் பாப்பா எங்கம்மா?’ன்னு எம்பிள்ளை கேக்கறப்போ எல்லாம் நான் துடிக்கிற துடிப்பு ஒங்களைமாதிரி ஆம்பளைங்களுக்கு எங்க புரியப்போகுது!” என்று நேரிடைத் தாக்குதலில் இறங்கினாள்.

“நாகு!” தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியவரிடம் மரியாதைக் குறைவாகப் பேசுகிறாளே என்ற பதைப்புடன் அவளை அடக்க முயன்ற கணவனின் குரல் அவள் காதில்

விழவில்லை. தன்பாட்டில் பேசிக்கொண்டே போனாள்.

“அன்னிக்கு நாத்துன்னு சொன்னேன். ஆனா, நான் மண்ணில்லே. அது இப்பதான் புரியுது!” என்று விம்மியவள், “ஒரு செடியைப் பிடுங்கி நடறப்போகூட வேரோடக் கொஞ்சம் தாய்மண்ணையும் சேர்த்துத்தான் எடுப்போம். எனக்கு அந்த கொடுப்பினைகூட இல்லாம போச்சே! பிள்ளை முகத்தைக்கூட பாக்க முடியாத பாவி ஆயிட்டேனே!” என்று பெரிதாக அழ ஆரம்பித்தாள்.

அவளுடைய ஆத்மாவின் ஓலத்தைப் புரிந்துகொள்ள முடியாது, “ஏதோ

குழப்பத்திலே இருக்கீங்கபோல! நான் போயிட்டு, அப்புறமா வரேன்,” என்று எழுந்தார் தரகர்.

“வராதீங்க. போங்க! பிள்ளை பெத்ததும், மாரிலே பால் கட்டிக்கிட்டு நான் துடிச்ச துடிப்பு ஒங்களுக்குப் புரியுமா?” வெறிபிடித்தவளாகக் கத்தினாள் நாகம்மா. “எங்களுக்கு இனிமே சோத்துக்குப் பஞ்சம் இல்லாம இருக்கலாம். ஆனா, நான் சாகிறவரைக்கும், `என் வயத்திலே சுமந்து பெத்த பிள்ளை எங்கே இருக்கோ, எப்படி இருக்கோ! அதைப் பாக்கக்கூட முடியலியே!’ன்னு என்னோட அடிமனசு குமுறிக்கிட்டே இருக்குமே! ஒங்க பணத்தால அதைச் சமாதானப்படுத்த முடியுமா?

ஏன்யா? ஏழைங்கன்னா, பணந்தான் கிடையாது. உணர்ச்சிங்ககூட இருக்காதா?” வார்த்தை குழற முடித்துவிட்டுக் கதறினாள்.

`படிச்சுட்டியா? சென்னைக்குப் போக ரெண்டு டிக்கெட் புக் பண்ணட்டுமா, டியர்?’ மனைவியின் முகம் தெளிந்திருக்கிறதே என்ற உவகையுடன் கேட்டார் செல்வந்தர்.

‘நாடு விட்டு நாடு போய், வாடகைத் தாயெல்லாம் வேணாங்க. நம்ப மகிழ்ச்சிக்காக இன்னொரு பொண்ணை அழவிடறது நியாயமில்லே. இங்கேயே ஒரு குழந்தையை தத்து எடுக்கலாம்!’

# 3 பெண்மை என்பது

**(நீண்ட காலத்திற்குப்பின், தன் உரிமையை நிலைநாட்டிக்கொள்ளும் பெண்)**

“அம்மா! நீங்க ரொம்ப அழகாப் போயிட்டீங்க!” வளர்ந்த மகனது பாராட்டு துர்காவுக்கு வெட்கத்தை உண்டாக்கியது.

“போடா!” என்று பிணங்கினாலும், இப்படித் தனது அழகில் கவனம் செலுத்தி எத்தனை காலமாயிற்று என்ற எண்ணம் எழ, மலைத்தாள்.

எதுவுமே நிலைக்காது என்ற தருணம் வரும்போதுதான் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளத் தோன்றுமோ!

பெரிய கண்ணாடிமுன் அமர்ந்திருந்தாலும், துர்க்காவின் கண்கள் அவளுடைய உருவத்தைத் தாண்டி எதிலேயோ நிலைத்தன.

அது ஏன், இத்தனை வருடங்களாக, `ரசிக்க வேண்டியவரே ரசிக்கவில்லை, அழகு என்ன வேண்டிக் கிடக்கிறது!' என்று அலட்சியமாக இருந்தோம்? எல்லாருமே ஆண்களைக் கவருவதற்காகவா தம்மை அழகுபடுத்திக் கொள்கிறார்கள்?

கல்யாணமாகும் முன்னர் பெண்கள் அலங்கரித்துக் கொள்வதில்லையா, என்ன?

தனக்கு அழகோ, அறிவோ அல்லது பாராட்டக்கூடிய வேறு எதுவுமே இல்லை என்று தானே ஏற்கும்போதுதான் பிறரும் தன்னை ஏளனமாக நடத்த வழிவகுக்கிறாள் ஒரு பெண் என்ற உண்மை காலங்கடந்து புரிந்தது துர்காவுக்கு.

நம் சமுதாயம் பெண்கள் விஷயத்தில் ரொம்பத்தான் கடுமையாக இருக்கிறது. தன் நலன் பேணாது, பிறரைக் காக்க வேண்டுமாம்! சுவர் இருந்தால்தானே சித்திரம்? அதோடு,

தனது பிம்பத்தைக்கூட ரசிக்க உரிமையில்லாதவளுக்கு சுயமதிப்பு எப்படி ஏற்படும்?

அறுவைச் சிகிச்சை முடிந்து ஓராண்டு ஆகியிருக்குமா? அதற்குள் எவ்வளவு மாறிவிட்டோம் என்று பெருமையும், பிரமிப்பும் ஏற்பட்டது அவளுக்கு.

“நாளை மறுநாளே ஒங்களுக்கு ஆபரேஷன் செய்யணும். புற்றுநோய் ரொம்ப முத்திடுச்சு!” டாக்டரின் குரலில் உண்மையான ஆதங்கம் தொனித்தது. “ஒங்களுக்கு எப்பவோ தெரிஞ்சிருக்கு. அலட்சியமா விட்டுட்டீங்களே!”

`எல்லோருக்கும் என்னிடம் குறை காணத்தான் தோன்றுகிறது!' என்ற எண்ணம் எழ, அது கோபமாக மாறியது. இந்த டாக்டர் என்ன, பெரிய கடவுளா, இவர் சொல்வதெல்லாம் சரிதான் என்று ஏற்றுக்கொள்ள? வீம்புடன் கேட்டாள்: "ஆபரேஷன் செய்யாட்டி?"

"உயிரையாவது காப்பாத்த இதைவிட்டா வேற வழியில்ல!" இனி மார்பகங்களைக் காப்பாற்ற இயலாது என்று குறிப்பாக உணர்த்தினார்.

மரண பயம் மேலெழ, யார் மார்பிலாவது முகத்தைப் புதைத்துக்கொண்டு

அழவேண்டும்போல இருந்தது துர்காவுக்கு. உரிமை உடையவரே பொறுப்பற்று நடக்கும்போது, யார்தான் துணை?

உடனே, மகன் ஞாபகம்தான் வந்தது அவளுக்கு.

அப்பாமாதிரி தானும் ஆகிவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தான் குமார். வயதுக்கு மீறிய பொறுப்புணர்ச்சி அவனுடைய பெருஞ்சொத்து.

"இதில யோசிக்க என்னம்மா இருக்கு? இந்த டாக்டர் சொன்னா சரியாத்தான் இருக்கும். எத்தனை வருஷ அனுபவம் அவருக்கு!"

“பயம்மா இருக்குடா, குமார்,” என்றாள் தாய், சிறு குழந்தையைப்போல். “உடம்பை வெட்டி எடுத்தப்புறம், வேற எங்கேயாவது கான்சர் வந்துவெச்சா? ஒவ்வொண்ணா வெட்டிப் போடுவாங்களா?”

“ஐயோ அம்மா! அது நடக்கிறப்போ பாத்துக்கலாம். பாலம் வர்றதுக்கு முந்தியே நதியைக் கடக்கிறது எப்படின்னு என்னம்மா யோசனை?”

புதிதாகச் சேர்ந்திருந்த வேலையில் விடுப்பு கேட்டுவிட்டு, பெற்றவளை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போனான் குமார். ஏதோ சொல்ல விரும்பியவளாக, அவனை நிமிர்ந்து

பார்ப்பதும், தலையைத் திருப்பிக் கொள்வதுமாக இருந்தாள் அவள்.

“என்னம்மா?”

“வந்து.. அப்பா எங்க இருக்காருன்னு விசாரிச்சுப் பாரேன்!”

எப்போதும் கனிவாக இருக்கும் முகத்தில் ஆத்திரம். “எதுக்கு? ஒடனே பதறியடிச்சுக்கிட்டு ஓடி வந்து, ஒங்க படுக்கையைவிட்டு நகராம இருந்திடப்போறாரா?” என்று படபடத்தவன், “ஸாரிம்மா!” என்று உடனடியாக மன்னிப்பும் கோரினான்.

ஒரே மனைவி, மகன் என்று நிறைவு அடையாமல், பல பெண்களை

அடிமைப்படுத்துவதுதான் தன் பணபலத்துக்கு அடையாளம் என்பதுபோல் விட்டேற்றியாக நடந்துகொண்ட தந்தையிடம் அவனுக்குப் பாசம் அற்றுப்போயிருந்தது. தாய்மேல் ஏற்பட்ட இரக்கம் தந்தைமீது வெறுப்பாக மாறி விட்டிருந்தது.

துர்க்காவின் முகம் கோணியது, அழ ஆயத்தம் செய்வதுபோல். அதற்குள் நர்ஸ் வர, “நான் இங்கேயேதான் இருப்பேன். நீங்க எதுக்கும் கவலைப்படாதீங்கம்மா!” என்று விடை கொடுத்தனுப்பினான் குமார்.

“நல்ல பையன்!” என்று பாராட்டிவிட்டு, “எனக்குக்கூட ஒங்க

மாதிரிதான். ரெண்டையும் எடுத்துட்டாங்க!” என்றாள் நர்ஸ்.

துர்க்காவின் கண்கள் அகன்றன.

“அது ஆச்சு, மூணு வருஷம். என்னதான் தினமும் இந்த நோயைப் பாத்தாலும், நமக்கே அது வந்தா, வேறதான். இல்லீங்களா?” ஒரு பெருமூச்சுடன், பழைய நினைவுகளில் சில வினாடிகளைக் கழித்துவிட்டு, புத்துணர்ச்சியுடன் தொடர்ந்தாள் அவள். “அப்ப எங்க வீட்டுக்காரரர் சொன்னார், `நான் என்ன, ஒன்னை ஒன்னோட மாருக்காகவா மன் கட்டிக்கிட்டேன்?’ அப்படின்னாரு!”

இது என்ன பெயர் என்று அந்த நிலையிலும் சற்று வியந்து, அவளுடைய சட்டையில் குத்தப்பட்டிருந்த பெயரைப் பார்த்தாள். யியோ கார் மன் (YEO KAR MAUN) என்றது பிளாஸ்டிக் தகடு.

துர்க்காவுக்குத் தன்னிச்சையாகக் கணவரின் ஞாபகம் வந்தது.

பெண்மையின் வளைவுகளில் ரப்பர் வைத்துக் கட்டிய தமிழ்த் திரையுலகத் தாரகைகளையும், கண்ட கண்ட ஆபாசப்படங்களையும் சற்றும் வெட்கமின்றி, வெளிப்படையாகவே ரசித்துவிட்டு, `நீயும் இருக்கியே! ஒன் முடியைக் கட்டையா வெட்டி, சட்டையும்

மாட்டினா, ஆம்பளையா, பொம்பளையான்னு தெரியாது!’ என்று எத்தனை முறை பழித்திருப்பார்!

நர்ஸ் கார் மன்னின் விவேகம் கலந்த குரல் அவளைக் கடந்தகாலக் கசப்பிலிருந்து காப்பாற்றியது. “நான் ஒண்ணு சொல்றேன், கேட்டுக்குங்க. ஆஸ்பத்திரியில இருக்கிறப்போவே ஒங்க முழு ஒடம்பையும், டாக்டர் போட்ட தையலோட, ஒங்க வீட்டுக்காரர்கிட்ட காட்டிடணும். உடை எதுவும் வேணாம். இல்லாட்டி, எப்பவாச்சும் ஒங்களைப் பாக்கறப்போ அதிர்ச்சியா இருக்கும்”. சற்று நிறுத்திவிட்டுத் தொடர்ந்தாள்:

“எங்களைமாதிரி சீனருங்க, ஏன், மலாய்க்காரங்ககூட இதை ஏத்துக்கறாங்க. ஆனா.., நான் சொல்றேன்னு நீங்க வருத்தப்படக் கூடாது. இந்திய ஆம்பளைங்க இதை என்னமோ அவமானமா நினைக்கறாங்க. மார்பு இல்லாட்டி பொம்பளை இல்லியா?”

துர்காவிற்கு கணவரை நினைத்துப் பார்க்கவும் பிடிக்கவில்லை. பேச்சை மாற்ற, “ஏங்க இந்த வியாதி வருது?” என்று கேட்டுவைத்தாள்.

“ஏன் வரலேன்னு மொதல்லே சொல்றேன். இது நாம்ப செய்யற பாவத்தினால இல்ல,” அழுத்தந்திருத்தமாக வந்தது பதில்.

“இப்பல்லாம் மூணில ஒருத்தருக்கு கான்சர். நூறு வருஷத்துக்கு முந்தி எண்பதில ஒருத்தர்தானாம். என்ன செய்யறது! நம்ப சுற்றுப்புறத்திலேயும் தூய்மை இல்ல, சாப்பாட்டிலேயும் கலப்படம்!” யாரோ சிலரது பேராசையினால் எத்தனை பேர் அவதிப்பட வேண்டியிருக்கிறது என்று நினைத்தவளாய், சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டுத் தொடர்ந்தாள். “அட, நாம்ப தேவலை. ஆஸ்திரேலியாவிலேயும், ரஷ்யாவிலேயும் ரெண்டு பேரில ஒருத்தர் கான்சரால செத்துக்கிட்டு இருக்காங்க. உலகம் இந்தக் கதியில போனா, எல்லாருக்கும் வியாதி வராம என்ன செய்யும்?”

விரக்தியோடு சொன்னவள், “ஒங்களுக்கு ஒண்ணும் ஆகாதும்மா. நானும் மொதல்ல பயந்து போயிட்டேன். இப்ப என்னைப் பாருங்க!” என்று தைரியம் அளித்தாள். போகிற போக்கில், “நமக்கு வேணுங்கிற சாமானெல்லாம் இங்கேயே மருந்துக்கடையில கிடைக்கும்,” என்று தெரிவித்தாள்.

தரிசு நிலமாக இருந்த மார்பில் `கப்’ வடிவிலிருந்த, ரப்பாராலான பொருளை அணிய வேண்டியிருந்தது. அதை வாங்குகையில், `இதில்கூட என்ன கஞ்சத்தனம்!’ என்ற நினைப்பில்

எழுந்த புன்னகையுடன், சற்றுப் பெரிதாகவே வாங்கினாள்.

கதிர்சிகிச்சையில் தலைமுடி பொலபொலவென்று கொட்டிப் போயிருந்தது. வழுக்கை வெளியே தெரியாதிருக்க, `விக்' – போலி முடி. உணவு விஷயத்திலும் கவனமாக இருந்ததில், உடலில் புது மெருகு ஏறியிருந்தது. இப்போது அவளை ஒரு முறை பார்த்தவர்கள் திரும்பிப் பார்த்தது துர்காவிற்கு ஒரு இனிமையான, புதிய அனுபவம்.

கார் மன்னுடன் போய், ஆஸ்பத்திரியிலிருந்த மற்ற மார்பகப் புற்றுநோயாளிகளுக்குத் தைரியம் அளித்தாள். அதனால்

அவளுக்கே ஆறுதலும், தெம்பும் ஏற்பட்டதைக் கண்டு அதிசயித்தாள்.

துர்காவிற்கு எப்போதாவது கணவர் நினைவு வரும். `அவர் இப்போது என்னைப் பார்க்க வேண்டும். நாற்பத்து ஐந்து வயதுக்காரியாகவா நான் இருக்கிறேன்!'

உடனே கோபமும் எழும். `இருக்கிறாயா, செத்தாயா?' என்று கேட்காத இவரெல்லாம் ஒரு கணவர்! மாதாமாதம் செலவுக்குப் பணம் அனுப்பினாற்போல ஆயிற்றா?

கோபம், வருத்தம் எல்லாம் தன் உடல்நிலையைத்தான் பாதிக்கும் என்ற ஞானம் எழ, `ஏதோ, நாம்

செய்த புண்ணியம், அனுசரணையான மகனும், சிநேகிதிகளும் வாய்த்தார்கள். எத்தனையோ பேருக்கு இதுகூட கிடையாது. சில கணவன்மார்கள் மார்பகத்தை இழந்த மனைவியை விவாகரத்து செய்துவிட்டு, இளம்பெண்ணாக எவளையாவது தேடி, மறுமணம் செய்துகொண்டு விடுகிறார்களாமே! சே! என்ன ஆண்கள்!' என்று மாறி மாறி யோசித்தாள்.

தன் உடல்நிலை ஆரோக்கியமாக இருக்கும்போதே தன்னை விலக்கி வைக்கப்போவதாக கணவர் மிரட்டியதும், `நீங்க ஒங்க இஷ்டம்போல இருங்க. என்னை

மட்டும் இந்த வீட்டைவிட்டுத் துரத்திடாதீங்க. நான் எங்கே போவேன்?' என்று அவர் காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்சியதும் இப்போது நினைவில் எழுந்தது. அவர் தன்னை மதிக்காமல் போனதற்கு ஒரு விதத்தில் தானும் காரணம்தான் என்று தோன்றியது.

அவளுடைய நினைவலைகளால் தாக்கப்பட்டதுபோல், என்றும் இல்லாத அதிசயமாக, பரசுராமன் வீட்டுக்கு வந்தார். மனைவியின் புதுப்பொலிவைக் கண்டு மிரட்சி ஏற்பட்டது. "யாருக்காகடி இத்தனை அலங்காரம்?' என்று வார்த்தைகளால் தாக்கினார்.

“இன்னொருத்தருக்காக பண்ணிக்கிட்டாதானா?” எதிர்க்கேள்வி கேட்கும் இவள் பரசுராமன் அறியாதது. பயம் அதிகரித்தது.

“எங்க வந்தீங்க இப்போ?” அலுப்புடன் கேட்டாள் துர்க்கா.

“இதென்னடி கேள்வி! என் வீட்டுக்கு நான் வந்தேன். அது சரி. ஏதாவது சமைச்சு வெச்சிருக்கியா? பசி கொல்லுது!” குரல் சற்றுத் தணிந்திருந்தது.

“எனக்கெப்படித் தெரியும் நீங்க வரப்போறீங்கன்னு?” ஆதரவு வேண்டியிருந்தபோது அருகில்

இல்லாமல், இவ்வளவு தாமதமாக வந்ததுமின்றி, துளிக்கூட அன்பில்லாமல் நடந்துகொள்கிறாரே!

“சனியன்! வார்த்தைக்கு வார்த்தை எதிர்த்துப் பேசத்தான் தெரியும்! போ, போய் எதையாவது செய்து எடுத்துக்கிட்டு வா!”

இந்த மனிதருடன் எதற்காக, எப்படி இவ்வளவு காலம் சேர்ந்து வாழ்ந்தோம் என்ற கசப்பு மிக, அவர் சற்றும் எதிர்பாராவிதமாக தனது டீ-சட்டையைத் தூக்கிக் காட்டினாள் துர்க்கா.

மார்பின் குறுக்கே தடிமனான வடு. பெண்மைக்கே உரிய வளைவுகளுக்குப் பதில் சமமான மார்புப் பிரதேசம்.

பார்த்தவர், தன்னையும் அறியாது பின்வாங்கினார்.

“இதுக்கே பயந்தா எப்படி?” துர்க்காவின் குரலில் கேலி கலந்திருந்தது. கை தலைக்குப் போயிற்று. நேர்த்திக்கடன் செலுத்தியவள்போல மழுங்கச் சிரைக்கப்பட்ட தோற்றம்.

அதற்கு மேலும் தாக்குப்பிடிக்க முடியாது, அருகிலிருந்த சோபாவில்

`பொத்’தென்று, விழாத குறையாக உட்கார்ந்தார் பரசுராமன்.

“ஏ...ஏன்? எதனால இப்படி..?”

“கான்சர்!”

“தொத்திக்கற வியாதி இல்ல!” தனக்குத்தானே தைரியம் சொல்லிக்கொண்டார்.

துர்காவின் முகத்தில் வெறுப்பு படர்ந்தது. இப்போதுகூட, ரொம்ப வலிக்கிறதா, சிகிச்சையின்போது யார் கூட இருந்தார்கள் என்று கேட்கத் தோன்றவில்லையே!

தான் அவமதிக்கப்பட்டபோதெல்லாம்

அதைத் தன் குறைபாடு என்று எண்ணி பொறுத்துப்போனவளுக்கு, `பெண்மை' என்பது வெறும் உடலழகிற்கு அப்பாற்பட்டது, அது மேன்மையானது என்று புரிந்துபோக, துணிச்சல் எழுந்தது. “இப்போ சொல்லுங்க. எதில கையெழுத்து போடணும்?” என்றவளின் குரலில் வருத்தமில்லை. தீர்மானமாக ஒலித்தது. “நாம்ப எதுக்காக இன்னும் வேஷம் போடணும்? பிரிஞ்சு போறதுதான் ரெண்டுபேருக்கும் நல்லது”.

`நான் இவளுக்குக்கூட வேண்டாமல் போய்விட்டேனா!' என்ற அதிர்ச்சி தாக்க, அந்த நிராகரிப்பை ஏற்க

முடியாது, “ஒன் அருமை புரியாம நான் ஒன்னை ரொம்ப கஷ்டப்படுத்திட்டேம்மா. இனிமே என்னை மாத்திக்கறேன்! நம்பு!” என்று, அவள் மனதை இளக்கும் முயற்சியில், விம்மி விம்மி அழ ஆரம்பித்தார் அந்த ஆண்மகன்.

# 4 அடிபட்டவர் கை

**(பெண்ணியத்திற்கு மதிப்பு கொடுத்து நடக்கும் மகன், அதை எதிர்க்கும் தந்தை)**

“பிரபா எங்கடா? இன்னுமா வரலே?”

அலட்சியமாகப் பதிலளித்தான் மகன். “ரெண்டு பஸ் மாத்தி வர கொஞ்சம் முந்திப் பிந்திதான் ஆகும். அதான் சமைச்சு வெச்சுட்டுப் போயிருக்கா, இல்லே?”

கிழவருக்கு என்னமோபோல் இருந்தது. ஏதோ கரிசனத்தில் கேட்டதாகத்தான் அவர் நினைத்தார். ஆனால், `தன் பெண்டாட்டியை அப்பா என்ன குறை சொல்வது?' என்ற எரிச்சலுடன் இவன் வக்காலத்து வாங்குகிறானே!

ஐந்து மணிக்கு வேலை முடிகிறது. இப்படியா ஒருத்தி வீட்டு நினைப்பே இல்லாது, ஏழரை மணிக்குமேல் ஆகியும், ஊர் சுற்றிக்கொண்டிருப்பாள்!

ஒரு குடும்பப் பெண் சந்தியாகாலத்தில் குத்து விளக்கு ஏற்றி வைக்க வேண்டாம்? பின்

எப்படி லட்சுமி வீட்டுக்குள் நுழைவாள்?

சே! தன்னோடு வாழ்ந்த நாற்பத்து ஐந்து வருடத் தாம்பத்தியத்தில் என்றாவது இப்படி ஒரு அநியாயம் பண்ணியிருப்பாளா அன்னம்மா? பாவம், ஒரே ஒரு தடவைதான் சின்னத் தப்புப் பண்ணிவிட்டாள்!

அந்த நிகழ்ச்சியின் ஞாபகம் இப்போது சற்று பெருமையாகவும், இனம் புரியாத தாபத்தையும் உண்டாக்கியது.

“அண்ணி முறுக்கு பிழிய வரச் சொன்னாங்க. மத்தியானம் திரும்பி வந்துடுவேங்க. போகட்டுமா?”

காலையிலேயே அவருடைய உத்தரவைப் பெற்றுத்தான் சென்றிருந்தாள் அன்னம்மா.

சாயந்திரம் இவர் வந்தபோது, அவள் இன்னும் வீடு வந்து சேரவில்லை என்று தெரிந்ததும் ஆத்திரம் பீறிட்டது. மத்தியானம் வந்துவிடுவதாகத்தானே சொல்லிப் போனாள்? அது என்ன, அண்ணன் வீட்டில் சீராடல் வேண்டிக் கிடக்கிறது, வேலை முடிந்து வீடு திரும்பும் கணவருக்குத் தண்ணி கலக்கிக் கொடுக்க வேண்டுமே என்ற அக்கறைகூட இல்லாமல்!

ஏதோ அனாதரவாக விடப்பட்டதுபோல பயம், கலக்கம்.

ஒவ்வொரு முறை சுவர்க்கடிகாரத்தில் கண் பதிந்தபோதும், இவருடைய வெப்பம் அதிகரித்தது.

ஒரு வழியாக, எட்டு மணிக்கு வாடகைக்காரில் வந்து இறங்கினாள் மனைவி. “எவனோடடி சுத்திட்டு வர்றே?” தெருக்கதவை மறைத்தபடி இவர்.

எதிர்பாராத அதிர்ச்சியில் அவளுக்கு வாயடைத்துப்போயிற்று.

எண்ணெய்ப் புகை பொறுக்க முடியாது, வாந்தியும், மயக்கமுமாக இருந்ததை எங்கே சொல்லவிட்டார்! இரவு முழுவதும்,

வார்த்தைகளாலேயே குதறி எடுத்தார். அவள் எந்தவித எதிர்ப்பும் காட்டாது, எல்லா அவமானங்களையும் ஏற்றது அவருக்குத் திருப்தியாக இருந்தது.

இதுபோல பல சம்பவங்கள்.

“பிரபா வர்றபோதே பசியோட வருவா, பாவம்! எல்லாத்தையும் சுட வைக்கணும்,” என்றபடி, உள்ளே போனான் பாலு.

கிழவர் உதட்டைச் சுழித்துக்கொண்டார்.

அடுப்பின்மேல் சீனிச்சட்டியை (வாணலி) வைத்தவன், பேச்சுக்குரல் கேட்டு, காஸ் அடுப்பைச் சிறியதாக

எரியவிட்டு, அவசரமாக வெளியே வந்தான்.

அவன் பயந்தபடியே, “ஏம்மா? மழையும் சாரலுமா இருக்கில்ல? ஏதாவது கனமான புடவையைக் கட்டிட்டுப் போயிருக்கக் கூடாது?” என்றவாறு மருமகளை வரவேற்றுக் கொண்டிருந்தார் கிழவர்.

`இப்படி உடல் தெரிய நைலக்ஸ் புடவை கட்டிக்கொண்டு, அதிலும், தலைப்பை ஒற்றையாக விட்டுக்கொண்டு இருக்கிறாயே! எல்லாத் தடியன்களுடைய பார்வையும் ஒரே மாதிரி இருக்குமா?’ என்று மனதுக்குள் அவர்

திட்டிக்கொண்டது அவளுக்கா புரியாது!

எதுவும் பேசாது, மாமனாரை முழுவதாக ஏறிட்டுப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு, உள்ளே போக யத்தனித்தாள். கணவனைக் கண்டதும், அவளது புன்னகை விரிந்தது. “சாப்பாட்டைச் சுட வைச்சுட்டீங்களா? அப்பாடி! பசி கொல்லுது,” என்றபடி சாப்பாட்டு மேசைமுன் நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தாள்.

கிழவரின் உணர்ச்சிகள் கொந்தளித்தன.

ஆண்பிள்ளையாய் லட்சணமாய், தான் அவனுடைய அம்மாவை `வைக்க வேண்டிய இடத்தில்' வைத்திருந்ததைப் பார்த்து வளர்ந்திருந்த பிள்ளை! இன்று பெண்டாட்டிக்குக் குடை பிடிக்கிறான்!

இந்தக் காலத்துப் பயலுகளே மோசம்! வெட்கம் கெட்டவனுங்க!

கிழவரின் கைகள் இறுகி, வலித்தன.

“அப்பா! சாப்பிட வர்றீங்களா?”

ஏதோ, இப்போதாவது அப்பா ஞாபகம் வந்ததே!

எந்தக் காலத்தில் அவர் சாப்பிடுமுன் அவர் மனைவி சாப்பிட்டு இருக்கிறாள்! கல்யாணத்தன்று மட்டும், `சம்பிரதாயம்’ என்ற பெயரில், இருவரையும் ஒன்றாக உட்காரச் சொல்லி, சாப்பிட வைத்தார்கள். அவ்வளவுதான்.

ஹூம்! காலம்தான் எவ்வளவு கெட்டுவிட்டது! இன்று, இந்த சின்னப்பெண் முதலில் உட்கார்ந்துகொண்டு, அதிகாரமாய் சாப்பிடுகிறது, வீட்டுக்குப் பெரியவன் நான் -- ஒரு ஆண்பிள்ளை -- பசியோடு இருப்பேனே என்கிற பயமோ, மரியாதையோ கொஞ்சமும் இல்லாமல்!

வேண்டாவெறுப்புடன் உள்ளே போனவருக்கு, கையை மட்டும் கழுவிவிட்டு பிரபா சாப்பிட்டுக்கொண்டிருந்தது கண்ணை உறுத்தியது. அடக்க மாட்டாது, “ஏம்மா, பிரபா! வெளியில அலைஞ்சுட்டு வந்தது கசகசன்னு இல்லே? குளிச்சிருக்கலாமே!” என்று அவளைக் கேட்டபோது, தன்மேலேயே கோபம் எழுந்தது. கேவலம், ஒரு பெண்ணுக்கு மரியாதை கொடுத்துப் பேசவேண்டி வந்துவிட்டதே என்று குன்றிப்போனர்.

பட்டென்று அவள் புத்தியில் உறைக்கிறமாதிரி, `பொம்பளையா, லட்சணமா, வீட்டுக்கு வந்ததும்

புருஷனையும், மாமனாரையும் கவனிச்சுக்கறதை விட்டுட்டு, இப்படி ஊர் சுத்திட்டு, அதிலும் வெக்கமில்லாம, கட்டின புருஷனையே வீட்டு வேலை செய்ய விட்டுட்டு, என்னமோ மகாராணிமாதிரி சாப்பிட ஒக்காந்துட்டியே! எழுந்திருடி, சரிதான்!’ என்று பொரியத் துடித்தார்.

ஆனால், `மகன்’ என்ற பெயரில் யமன் அல்லவோ அவருக்கு வாய்த்திருந்தான்! கல்யாணம் ஆவதற்கு முன்பே அவருக்கு வாய்ப்பூட்டு போட்டிருந்தான்: `நீங்க ஒங்க காலத்தையே நெனைச்சுக்கிட்டு, வர்றவளையும்

விரட்டிக்கிட்டு இருக்காதீங்க. எனக்குப் பிடிக்காது!'

சிறு வயதிலேயே முரடன் அவன். அன்னம்மா சாம்பாரில் அதிகமாக உப்பு போட்டுவிட்ட குற்றத்துக்காக அவளை அடிக்க இவர் கையை ஓங்க, பதினாறு வயதுப் பையனாக இருந்த அவன், ஓங்கிய கையை இறுகப் பிடித்துக்கொண்டு, `அம்மாமேல இன்னொரு தடவை ஓங்க கை பட்டுச்சோ.., அதை வெட்டி எறிஞ்சுடுவேன், ஆமாம்!' என்று உறுமியவன் ஆயிற்றே!

வயதான காலத்தில், வருவாயோ, வேறு போக்கிடமோ இல்லாத நிலையில், இவனைப்

பகைத்துக்கொண்டால், யாருக்கு நஷ்டம்?

தலையை அளவுக்கு மீறி குனிந்தபடி சாப்பிடுவதாகப் பாவனை செய்தாலும், அந்தத் தம்பதியரிடையே உண்டான சங்கேதக் குறிப்புகளும், கண் சிமிட்டலும் அவருக்குத் தெரியாமல் போகவில்லை.

தன் தாம்பத்தியத்தில் மட்டும் ஏன் இப்படி -- நினைத்து, நினைத்து ஆனந்தப்படும்படி -- எதுவுமே நிகழவில்லை?

அன்னம்மா ஏன் இந்த ஒரு விஷயத்தில் மட்டும்

ஒத்துழைக்கவில்லை? மற்ற எல்லா விதத்திலும் அனுசரித்துப்போனாளே?

`உங்களால் என் உணர்ச்சிகளைக் கிளற முடியாது!' என்று வீம்பு பிடித்தவள்போல், மரக்கட்டையாய் படுக்கையில் கிடந்த மனைவி அவருடைய ஆண்மைக்கே சவால் விடுவது போலிருந்தது. அவளுடைய அப்போக்கு பொறுக்காதுதானே நொந்த மனதுக்கு ஆறுதல் தேடி, கண்ட பெண்களை நாடிப் போனார்!

அப்பெண்களும் அவரது ஸ்பரிசத்துக்காக ஏங்கிக் காத்திருந்ததுபோல் நடந்துகொண்டது தான் அள்ளிக்

கொடுத்த காசுக்குரிய நடிப்பாக இருக்கும் என்று அவர் நம்பத் தயாராக இல்லை. இதமாகத்தான் இருந்தது.

தனக்கு மனைவியாக வாய்த்தது பெண் ஜன்மமே இல்லை என்று குமுறினார். அவள்மேல் விளைந்த இளக்காரமும், அது தோற்றுவித்த பலாத்காரமும் மேலும் வலுப்பட்டன.

கை கழுவியபடியே பிரபா திரும்பினாள். “இன்னிக்கு ஒரு வேடிக்கை,” என்று கணவனிடம் ஆரம்பித்தாள். “எங்கூட வேலை செய்யற ஜெயா இல்லே, அவ வீட்டுக்குப் போன் பண்ணினா -- பிள்ளைகூட பேச. அதுக்கு மூணு

வயசு. அம்மாகூட பேசமாட்டேன்னு அது அடம் பிடிக்க, இவ திரும்பத் திரும்ப போன் போட்டுக் கெஞ்ச..!” பிரபாவுக்குச் சிரிப்பு பொங்கி வந்தது.

“அதிஷ்யமா இருக்கே!” வாயில் போட்டிருந்த கவளத்தை விழுங்காமலே அவளுடைய கதையில் ஆர்வம் காட்டினான் பாலு.

“ஆமா!” நொடித்தாள். “கண்டிப்புங்கிற பேரிலே இவ ஓயாம அந்தப் பையனை அடிப்பாளாம். அதை எங்க எல்லார்கிட்டேயும் தினமும் பெருமையா சொல்லிக்கறது இருக்கே! இப்ப இவளுக்கு வேணும்கிறபோது, `ஓடி

வந்து என் கழுத்தைக் கட்டிக்க’ன்னா?”

கிழவருக்குச் சட்டென்று புரையேறியது.

இந்தச் சின்ன விஷயம் ஏன் தனக்குப் புரியாமல் போய்விட்டது? பெற்ற குழந்தையாக இருந்தால் என்ன, கட்டிய மனைவியாக இருந்தால்தான் என்ன, அன்பை நாம் முதலில் கொடுத்தால்தானே அதைத் திரும்பப் பெறமுடியும்!

மனைவியின் போக்கை நிர்ணயித்ததே தான்தான் என்று புரிந்தபோது, அந்த வேதனை அவ்வயோதிகர் முகத்தில் படர்ந்தது.

அடிவயிற்றிலிருந்து இரும
ஆரம்பித்தார்.

மெதுவாச் சாப்பிடுங்க, மாமா,"
என்றாள் பிரபா கனிவுடன்.
"சாப்பிடறபோது நான்
பேசியிருக்கக்கூடாது!"

# 5 குழந்தையின் பெயர்

**(பெண்ணியத்தைக் கடைப்பிடிப்பவளைக் கண்டு மிரளும் இன்னொரு ஆண்)**

“குழந்தைக்கு என்ன பேர் வைக்கலாம்?”

“நீங்கதான் சொல்லுங்களேன்!” பிரசாத்தை ஒரு முறை பார்த்துவிட்டு, தலையைக் குனிந்துகொண்டாள் பிரபா. முகத்தில் வெட்கமோ, புன்னகையோ

இருக்கவில்லை. எதையோ யோசிப்பதுபோல் இருந்தாள் என்றுதான் பட்டது அவனுக்கு.

முதலிலேயே யோசித்துவைத்திருந்தது நல்லதாகப்போயிற்று என்ற மகிழ்வுடன், “விட்டல், இல்லாட்டி கோகுல்,” என்று சற்று உரக்கவே சொன்னான்.

“கிருஷ்ணர் பேரா,” என்று இழுத்தாள்.

“அதேதான்!”

“அவருக்கு நிறைய பெண்களோட சகவாசமில்ல?”

அவனுக்குப் பெருமையாக இருந்தது. பிறக்கப்போகிற மகன் உத்தமபுத்திரனாக இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறாள். இதில் என்ன தவறு?

கிருஷ்ணன் இல்லாவிட்டால் ராமன். “ராமசந்திரன்,” என்றான் அழுத்தமாக.

“MGR வாத்தியாரா?”

“இல்லே. தசரதகுமாரன். ராமாயணத்திலே..”.

“எனக்கும் தெரியும்”. சற்று சூடாக வந்தது அவள் பதில்.

“ராமர்தான் ஏகபத்தினி விரதன்,” என்றான் சமாதானமாக.

“சுகமா அரண்மனையில இருக்கிறதை விட்டுட்டு, அப்பா சொல்றார்னு காட்டுக்குப்போய் கஷ்டப்பட்டாரே! அதைச் சொல்லமாட்டீங்களே!” என்று சாடினாள். “கொஞ்சம் சொந்த புத்தியை உபயோகிச்சிருக்கவேண்டாம்?”

மகாபாரதம், ராமாயணம் ஆகிய இரண்டின் நாயகர்களும் சரிப்படவில்லை. வேறு யாரைச் சொல்லலாம்?

“நடராஜன்?”

“சிவன் பேரு. ஒங்களுக்கு பஸ்மாசுரன் கதை தெரியுமில்ல?”

`இவள் எங்கே போகிறாள்?’ என்று சற்று அயர்ந்தான் பிரசாத்.

அவளே சொன்னாள்: “தன்னோட கையை யார் தலையில வெச்சாலும் அவங்க சாம்பலாகணும்னு வரம் கேட்டானாம் அந்த அசுரன். யார்கிட்டே? சிவன்கிட்டே”.

சுவாரசியமாக இருந்தது கதை.

“எவ்வளவு கெட்ட குணம்!” என்று அவளை ஊக்கினான்.

“ரொம்ப யோசிக்காம, சிவனும் அவன் கேட்டதைக் குடுத்துடரார்.

நைச்சியமா பேசறவங்களுக்கு ரொம்ப யோசிக்காம எதையாச்சும் குடுத்தா, குடுக்கறவங்களுக்குத்தான் கஷ்டம்”.

சிவன் அப்படி என்ன கஷ்டத்தை அனுபவித்தார் என்று கேட்கவேண்டும்போல இருந்தது அவனுக்கு. `இதுகூடத் தெரியாதா!’ என்று ஏளனம் செய்துவிடுவாள். வேண்டாம்.

“முருகன்? சிவகுமார்னு வெச்சா, நாகரிகமா இருக்கும்”. அவன் குரல் பலகீனமாக ஒலித்தது. இதற்கு என்ன ஆட்சேபம் தெரிவிக்கப்போகிறாளோ!

“சின்ன விஷயத்துக்கெல்லாம் கோபிச்சுக்கிட்டு, பெத்தவங்களை விட்டு எங்கேயாவது போயிடுவான். ரெண்டு பொண்டாட்டிவேற!”

அவன் மௌனமாக இருந்தான்.

“வேற ஏதாவது பேசலாமா?” என்றாள்.

அவன் வாயே திறக்கவில்லை.

அவளே கேட்டாள்: “பிறக்கிறது பெண்குழந்தையா இருந்தா?”

“சீதா,” என்று சொன்னவன், அவள் முகத்தைப் பார்த்துவிட்டு நாக்கைக் கடித்துக்கொண்டான். பழங்காலப் பெயராக இருக்கிறது என்பாளோ?

“ஜானகின்னு பேர் வெச்சுட்டு, ஜானுன்னு செல்லமா..,” என்றவனை இடைமறித்தாள். “கட்டினவர் காட்டுக்குப் போனபோது, அவ எதுக்கு அவரோட கல்லிலேயும் முள்ளிலேயும் போய் திண்டாடினா? `நான் எங்கப்பா வீட்டுக்குப் போறேன்’னு போயிருக்க வேண்டியதுதானே?”

அதற்குமேல் அவனுடைய கற்பனை ஓடவில்லை.

மறுபடியும் அவளே கைகொடுத்தாள். ”பார்வதி புத்திசாலி. சிவனோட ஒடம்பிலே பாதி அவளுக்கு. சக்தி இல்லாட்டி சிவன். ஒரு பொண்ணு இப்படித்தான் இருக்கணும். துணை

இல்லாம நான் இல்லேன்னு ஒவ்வொருத்தனும் தவிக்கணும்".

"ஏண்டா பிரசாத்து? ரெண்டுபேரும் ரொம்ப நேரம் பேசிட்டு இருந்தீங்களே! `ஒங்க பொண்ணை எங்களுக்கு ரொம்ப பிடிச்சிருக்கு' அப்படின்னு தரகர்கிட்ட சொல்லிவிடவா?" தாய் கேட்டாள்.

"எனக்கு இந்தப் பொண்ணு வேண்டாம்மா".

"அதான் ஏன்னு கேக்கறேன். `நான் நாகரிகமானவ. தமிழெல்லாம் படிக்கிறதில்லே'ன்னு சில அரைகுறைங்கமாதிரி அலட்டிக்காம, ஆன்மிகப்

புத்தகங்களெல்லாத்தையும் கரைச்சுக் குடிச்சிருக்கா. ரொம்ப புத்திசாலிடா!”

“எனக்கு இவ்வளவு புத்திசாலியான பொண்ணு வேண்டாம்மா. பெண்ணியம் பேசறா. எல்லாத்தையும் அலசறா”.

“அதான் டாக்டர் பட்டம் வாங்கியிருக்கா”. அழுத்தமாகச் சொன்னாள் அம்மா.

“அவளோட ஆராய்ச்சியை வேலையோட வெச்சுக்கட்டும். கோயிலுக்குப் போனோமா, சாமி கும்பிட்டோமா, பிரசாதம் வாங்கிச் சாப்பிட்டோமான்னு இருக்கிற

சராசரி பொண்ணுதான் எனக்குச் சரிப்படும்”.

மனதுக்குள் சொல்லிக்கொண்டான், `கல்யாணம் ஆகி, பிறக்கப்போகிற குழந்தைக்குப் பெயர் வைப்பதில்கூட எங்களுக்குள் ஒற்றுமை இல்லையே! இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் எதிரும் புதிருமாக இருந்தால் வாழ்க்கை நரகமாக இருக்காதா!’

# (ஆண்களை அடக்குவது பெண்ணியத்தின் குறிக்கோள் இல்லை)

பூங்கோதையின் அருகே சிறியதொரு மரக்கட்டிலில் கண்ணை மூடிப் படுத்திருந்தது அவனது முதல் சிசு.

`அது இனி கண்ணைத் திறந்தாலும் ஒன்றுதான், மூடினாலும் ஒன்றுதான்!' என்று நினைக்கும் போதே ஏதோ நெஞ்சை அடைத்துக்கொண்டது.

“ஒங்களுக்கு நான் என்ன கொறை வெச்சேன்? இப்படிப் பண்ணிட்டீங்களே!” யாராவது ஏதாவது கேட்டால், ஓரிரு வார்த்தைகள் மட்டும் பேசும் பூங்கோதை அன்றுதான் முதன்முதலாக அவ்வளவு ஆக்ரோஷத்துடன், சுயமாகப் பேசினாள். அதுவும் கணவனிடமே!

அவளுக்கு விடையளிக்கும் திறனின்றி, தங்கராசு தலைகுனிந்த படி, ஆஸ்பத்திரி அறையை விட்டு வெளியேறினான்.

அறைக்கு வெளியே நின்றிருந்த கோமளம் கண்ணில் வேதனையுடன் வெளிநடந்த மகனைப் பார்த்தாள்.

`ஒன்னை எவ்வளவு ஒசத்தியா நினைச்சிருந்தேன்! சீ!' அவள் மனதில் நினைத்தது அவனுக்குக் கேட்டது.

மனைவி இருக்கையிலேயே கேடுகெட்ட  பெண்களை தேடிப் போயிருக்கிறான்!

பத்து வயதுவரை தன் மடியிலேயே வைத்துக் கொஞ்சிய மகன்!

"ஒங்கப்பா மாதிரி நீயும் என்னை விட்டுட்டுப் போயிடாதே, தங்கம்!" சிறுவயதில் அம்மா ஓயாது அரற்றியது அவனுக்குப் புரியத்தான் இல்லை. அப்பா அவர்களுடன் தானே இருந்தார்?

குழப்பத்தினூடே, தனக்கு ஒவ்வொன்றையும் பார்த்துச் செய்யும் அம்மாவின் மேல் பரிதாபம் உண்டாயிற்று. அவளுடைய கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டான்.

எல்லாரும் கடவுளுக்குப் படையல் செய்தால், அம்மாவுக்கு அவன் தான் தெய்வம். அவள் எது சமைத்தாலும், அவன் சாப்பிட்டுப் பார்த்ததும், `பிடிச்சிருக்கா தங்கம்?' என்று பல முறை கேட்டு, தன் சம்மதத்தைக் காட்ட அவன் தலையாட்டினால் தான் இன்னொரு முறை அதைச் செய்வாள்.

ஒரு முறை, ஏதோ நூதனமான உணவுப் பண்டத்தைத் தயாரித்து, அதை இவன், `நல்லாவே யில்லையே!' என்று சொல்லிவிட, அவள் துடித்ததைப் பார்த்து, இனி அம்மா மனம் நோக எதையும் சொல்லக்கூடாது என்று நிச்சயித்துக் கொண்டான்.

அன்றையிலிருந்து, எது சொல்வதற்கு முன்பும், `நான் இப்படிச் சொன்னால், அம்மா எப்படி எடுத்துக்கொள்வாள்?' என்று யோசித்துப் பேச ஆரம்பித்தான். அதனால் பேசுவதே அபூர்வமாகிப் போயிற்று.

தட்டில் அம்மா என்ன போட்டாலும், எவ்வளவு போட்டாலும், சாப்பிட்டான். `குண்டு' என்று சகமாணவர்கள் கேலி செய்தபோது, `எங்கம்மாவுக்கு நான் இப்படி இருந்தாத்தான் பிடிக்கும்!' என்று மறுமொழி அளிப்பான், வீம்பாக.

அதிசயமாக ஒருமுறை, "எங்க ஸ்கூல்ல எல்லாரையும் உல்லாசப் பயணம் கூட்டிட்டுப் போறாங்கம்மா. நாலு நாள்! நானும் போறேனே!" என்று அம்மாவின் கழுத்தைக் கட்டிக் கொஞ்சியபோது, "என்னைத் தனியா விட்டுட்டுப் போக ஒனக்கு அவ்வளவு ஆசையா, தங்கம்?" என்று அழுகைக்குரலில் கேட்ட கோமளம், அன்று பூராவும் எதுவும் பேசாது,

எதையோ பறிகொடுத்ததுபோல
வெறித்துப்
பார்த்துக்கொண்டிருந்தாள்.

மறுநாள் எல்லா மணவர்களும்
பெயரைப் பதிவு செய்யும்போது,
“ஏன் தங்கராசு, நீ வரலே?” என்று
அதிசயப்பட்டுக் கேட்டாள் ஆசிரியை.

“அவன் அவங்கம்மாவை விட்டு
எங்கேயும் வரமாட்டான், டீச்சர்!”
யாரோ ஒருவன் துடுக்காகச்
சொல்ல, எல்லாரும் சிரித்தார்கள்.

இந்த மாதிரி ரௌடிகளுடன் ஊர்
சுற்றுவதற்கு, வீட்டு வாசலில்
தனக்கென்று அம்மா வாங்கிப்

போட்டிருந்த ஊஞ்சலில் உட்கார்ந்து பொழுதைக் கழிக்கலாம்!

இவன் ஒதுங்க ஒதுங்க, மற்ற பையன்களின் தொல்லை அதிகமாயிற்று. போதாத குறைக்கு, இப்போதெல்லாம் அப்பாவும் சேர்ந்துகொண்டார்.

தானுண்டு, தன் நண்பர்கள் உண்டு என்றிருந்தவருக்கு அப்போது தான் தனக்கு ஒரு மகன் இருக்கிறான் என்ற பிரக்ஞையே வந்திருந்தது.

“இந்தா! அவனை அவன் வயசுப் பசங்களோட பழக விடு. இப்படி, வீட்டிலேயே பிடிச்சு வெச்சுக்கிட்டு!” பொங்கிய ஆத்திரத்தில் பல்லைக்

கடித்துக்கொள்ள, முணு முணுப்பாக வந்தது குரல்.

அதுவே பொறுக்கவில்லை கோமளத்திற்கு. “எல்லாம் எனக்குத் தெரியும். வீட்டிலேயே தங்காம, கூட்டாளிங்களோடேயே பொழுதைக் கழிக்க.., ஒங்கொருத்தரைப்போல, என் மகன் ஒண்ணும் சூதாடியோ, குடிகாரனோ இல்லே!”

சூதாட்டம் தந்த போதையில், `இதைவிட வேறு சுகமில்லை!’ என்று தோன்றிப் போயிருந்தது அவருக்கு. திருமணமாகிய சில வருடங்களிலேயே, மனைவியை நாடுவதில் நாட்டம் அறவே போயிற்று. அதனாலேயே

அவளுடைய ஏளனத்துக்கும், வெறுப்புக்கும் தான் பாத்திரமாகியிருந்தது அவருக்குத் தெரிந்துதான் இருந்தது.

இப்போது தான் அதிகம் பேசினால், தன் குறையை உரக்க விமர்சித்து விடுவாளோ என்ற பயம் எழ, வாய் அடைத்துப் போயிற்று. `அம்மாவும், பிள்ளையும் எப்படியோ தொலையட்டும்!' என்று கைகழுவிவிட்டார்.

மகனையொத்த இளைஞர்கள் காதல், கீதல் என்று அலைந்து, தான்தோன்றித்தனமாக எவளையோ கல்யாணம் செய்துகொண்டு பெற்றோரைப்

புறக்கணித்து விட்டுப் போவதைப் பார்க்கையில், கோமளத்திற்கு அவனைப் பற்றி அபாரப் பெருமை எழும்.

`எங்க தங்கத்தைப்போல உண்டா! படிச்சான், வேலையில சேர்ந்தான். `இந்தாங்கம்மா,'ன்னு அப்படியே சம்பளப் பணத்தை என் கையில குடுத்துடறான். ஒரு சிகரெட்டு பிடிச்சிருப்பானா, இன்னி வரைக்கும்!' எதிரில் யாரும் இல்லாவிட்டாலும் கூட  தானே மகன் பெருமையைப் பேசிக் கொண்டிருப்பாள், சலிக்காது.

தங்கராசு நிச்சலனமாக இருந்தான். அம்மா சொன்னால் மகன் முடி

வெட்டிக்கொள்ளப் போனான். எந்தக் கடையில் எப்படிப் பேரம் பேசி சாமான் வாங்க வேண்டும் என்று ஒவ்வொரு முறையும் உபதேசம் நடக்கும்.

அம்மா இல்லாத ஒரு உலகத்தைக் கற்பனை செய்யக்கூட தங்கராசுவுக்குப் பயமாக இருந்தது. அம்மாவே பார்த்து முடித்த பெண்ணின் கழுத்தில் தாலி கட்டினான், அசட்டுச்சிரிப்போடு.

அவனுக்குத் தெரியாது, பலரும் கோமளத்திடம், `ஒனக்கு வயசாகலே ஒரு மருமக வந்தா ஒனக்கு நல்லதுதானே?' என்று கேட்டதன் விளைவு அது என்று.

மகனுடைய அன்புக்காக மருமகளுடன் போட்டி போட வேண்டியிருக்குமே என்று முதலில் பயந்த கோமளம், மிகவும் சாதாரணமான ஒருத்தியைத் தேர்ந்தெடுத்தாள்.

பூங்கோதை அம்மா மாதிரியே தெரிந்தாள் தங்கராசுவுக்கு.

முரட்டுத்தனமாகப் பேசியோ, நடந்தோ அவளை நோகடிக்கக்கூடாது என்று தோன்றிப்போயிற்று. ‘வேறொரு பெண்ணை — என்னதான் அவள் மனைவியாக இருந்தாலும் — நான் நாடினால், அம்மாவுக்கு வருத்தமாக

இருக்காது? என்ற குழப்பம் வேறு எழுந்தது.

கல்யாணமாகி இரண்டு வருடங்களுக்குப் பிறகுதான் தன்னிடம் ஏதோ குறை இருக்கக்கூடும் என்ற சந்தேகம் எழுந்தது. ஏதோ வேகத்தில், உடன் வேலை செய்யும் ராமுவிடம் சொல்ல, மன்மதக்கலையைத் தொழிலாகக் கொண்டிருந்த பெண்களின் அறிமுகம் கிடைத்தது. அந்த அனுபவம் அளித்த வேகத்தில் மனைவிக்குக் கணவனாக இயங்க முடிந்தது.

தான் தகப்பனாகப் போகிறோம்! தங்கராசுவுக்குள் ஒரு நிறைவு.

முதன்முறையாக, அம்மா சொல்லிக் கொடுக்காமல் ஒரு காரியத்தைச் செய்திருக்கிறோம்!ஆனால், அந்தப் பெருமையும், பூரிப்பும் நிலைக்கவில்லை.

“குழந்தைக்குப் பிறவியிலேயே பார்வையில்லை. கருவிலேயே காம நோயால் பாதிக்கப்பட்டு..,” என்று டாக்டர் கூறிக்கொண்டே போனபோது, தங்கராசுவுக்கு ஒன்றுதான் புரிந்தது. தன்னால் எதையுமே உருப்படியாகச் செய்ய முடியாது.

“எனக்கு ஒண்ணுமே தெரியாதும்மா. ராமுதான் சொல்லிக்குடுத்தான்!” என்று சிறுபிள்ளையாகவே ஆகி,

பயத்தில் திக்கியபடி அவன் கூறியபோது, கோமளத்தின் இதழ்களில் ஒரு சிறு புன்னகை.

மகனைப் பிறரிடம் இழந்து, தனிமைக்கு ஆளாகி விடுவோமோ என்ற பயம் இனி கிடையாது. அவன் என்றும் அவள் குழந்தை தான்!

# 7 முகநூலும் முத்துலட்சுமியும்

**(கணினியுகம் பெண்களைப் படுத்தும் பாடு)**

அன்று மத்தியானம் பொழுதே போகாது, முகநூலுக்குள் நுழைந்தாள் அமிர்தா.

பழைய கதைதான். தங்களுடைய குடும்பத்தோடு இணைந்த புகைப்படம், உறவினரின் அறுபதாவது அல்லது எண்பதாவது பிறந்தநாளை ஒட்டி நடத்திய விழா.

இதெல்லாம் முன்னேபின்னே பார்த்தறியாத `நண்பர்'களுக்காக.

பிடிக்கிறதோ, இல்லையோ, எல்லாவற்றையும் அவர்களும் பாராட்டிவைப்பார்கள். அப்போதுதானே, நாளைக்கு அவர்கள் எதையாவது வெளியிடும்போது பிறர் புகழ்வார்கள்!

பேசத் தெரிந்தவுடன் பாடும் குழந்தையின் மழலைப் பாட்டைக் கேட்டதும், `இவ்வளவு சிறு வயதிலேயே ஒரேயடியாகக் கொண்டாடினால், உலகமே தனக்காகத்தான் இயங்குகிறது என்பதுபோல் கர்வப்பட்டு, யாரையும்

மதிக்காமல் போய்விடாதா!' என்று அவள் யோசனை போயிற்று.

சலிப்புதான் வந்தது அமிர்தாவுக்கு. `இவர்களுக்கெல்லாம் எங்கிருந்து இவ்வளவு நேரம் கிடைக்கிறது?' என்று, பொறாமையுடன் கலந்த ஆச்சரியம் எழ, கணினியில் தான் பார்த்துக்கொண்டிருந்த வேலைக்குத் திரும்ப ஆயத்தம் செய்தபோதுதான் அந்த கடிதம் கண்ணில் பட்டது.

`ஒரு வேண்டுகோள்,' என்று ஆரம்பித்திருந்தாள் முத்துலட்சுமி என்று யாரோ ஒருத்தி.

ஏதாவது பண உதவியோ? இந்தக் கஷ்டகாலத்தில்தான் பலருக்கும் வேலை போய்விட்டதே!

சுவாரசியம் எழ, அமிர்தா படித்தாள்.

நூற்றுக்கு மேற்பட்டவர்கள், `உங்கள் நண்பராக விரும்புகிறேன்,' என்று எனக்கு எழுதுகிறீர்கள் — அனுதினமும்.

அந்த வார்த்தைக்கு உங்களுக்கு அர்த்தம் தெரியுமா? அழகான வார்த்தையைக் கொச்சைப்படுத்தாதீர்கள்.

அத்துடன் முடித்திருந்தாள்.

அப்படி என்ன நடந்திருக்கும் அந்த – அவள் பெயர் என்ன? –ம்.. முத்துலட்சுமிக்கு?

அவளை நேரில் பார்த்துக் கேட்டால் தனக்கு நல்லதொரு சமாசாரம் கிடைக்குமே என்ற ஆசை எழுந்தது அமிர்தாவுக்கு.

அவளுடைய தொலைபேசி எண் கிடைத்தது. தன் ஃப்ரெண்டா அவள்?

எப்போதோ, `முப்பது வயதுக்கு மேலிருக்காது’ என்று, அவளுடைய புகைப்படத்தைப் பார்த்துவிட்டு, தானும் அவளுடைய நட்பை நாடியிருக்கிறோம்! வேடிக்கைதான்!

முத்துலட்சுமியை அழைத்தாள். பதிலுக்குப் பேசியவள் குரல் கரகரப்பாக இருந்தது.

தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டாள் அமிர்தா.

சிறிது நேரம் பேசிவிட்டு, “இதே ஊரிலதானே இருக்கே? நேரிலேயே வாயேன்!” என்று முத்துலட்சுமி அழைத்தபோது, ஒருமாதிரி இருந்தது அமிர்தாவுக்கு. எவ்வளவு மரியாதைக்குறைவாகப் பேசுகிறாள்!

மரியாதையெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்க இது சமயமில்லை

என்று மறுநாளே அவளைச் சந்திக்கப் போனாள்.

“வாம்மா. அமிர்தாதானே? டி.வியில ஒன்னை நிறையப் பாத்திருக்கேன்,” என்று வரவேற்ற மாதுவுக்குக் குறைந்தபட்சம் எழுபது வயதாவது இருக்கும். கூடவே, “நான்தான் முத்துலட்சுமி,” என்று அறிமுகப்படுத்திக்கொண்டாள்.

அமிர்தா அடைந்த அதிர்ச்சி முகத்தில் தெரிய, முத்துலட்சுமி மாமி சிரித்தாள்.

“நீ என்னை எதிர்பாக்கலே, இல்லே?” என்றவள், “என்ன செய்யறது? பொண்கள் இளவட்டமா

இருந்தாத்தானே மத்தவா கண்ணிலே படறது!” என்று தன் பொய்யை ஒத்துக்கொண்டாள்.

“இங்க, வீட்டில, நாங்க ரெண்டே பேர். தினம் வெளியே போக முடியறதா! பொழுது போகணுுமே! அதான், ஃபேஸ்புக்கில சேர்ந்தா, நாலு பேரைத் தெரிஞ்சுக்கலாம்னு தோணித்து”. பேசுவதற்கு யாரும் கிடைக்காமல் இருந்தவளுக்கு நேரிலேயே, அதுவும் பிரபலமான ஒரு பெண்ணைப் பார்த்ததும் குஷியாகிவிட்டது. படபடவென்று கொட்டினாள்.

அதற்கு மேலும் தாக்குப்பிடிக்க முடியாது, “அது ஏன் அப்படி

எழுதியிருக்கீங்க? யாராச்சும் தொந்தரவு பண்ணினாங்களா?” என்று கேட்டாள் அமிர்தா.

“அதை ஏன் கேக்கறே!” என்று அங்கலாய்த்தாள். “ராத்திரி பத்து மணிக்கு எந்தத் தடியனோ ஃபோன் பண்றான், நீங்க ரொம்ப அழகா இருக்கீங்கன்னு. அவங்கிட்ட சொல்ல முடியுமா, முக அழகைப் பாத்து நட்பு வரதில்லேடான்னு?”

“சரியாச் சொன்னீங்க!” என்று ஊக்கினாள் அமிர்தா.

“எங்காத்துக்காரரோ சந்தேகப் பேர்வழி. `அர்த்த ராத்திரியில எவன்கூடப் பேச்சுன்னு?’ கேட்டா?

அதான் ஃபோனை பட்டுனு வெச்சுட்டேன்!” பெரிதாகச் சிரித்தாள்.

“மழை காலத்திலே காளான் மொளைச்சமாதிரி, சில நாளிலேயே நூத்துக்கணக்கில ஃப்ரெண்ட்ஸ். அவா அத்தனை பேருக்கும் காலை வணக்கம், இரவு வணக்கம்னு சொல்லிண்டே இருக்கணும்னா எப்படி? எனக்கு வேற வேலையே கிடையாதா?”

முதியவளைப் பேசவிட்டு, அமிர்தா மௌனமாக இருந்தாள். தான் ஊக்குவிக்காவிட்டாலும் அவள் பேசுவதை நிறுத்தப் போவதில்லை என்று அதற்குள் புரிந்திருந்தாள்.

“ஒரு நாளைக்கு நாப்பது பேருக்குப் பிறந்தநாளாம். நான் HAPPY BIRTHDAY சொல்லி என்ன ஆகப்போறது!”

“நானே பேசிண்டு இருக்கேனே! நீ என்ன விஷயமா என்னைப் பாக்க வந்தியோ!” என்று சற்று நிறுத்தினாள் முத்துலட்சுமி.

“சும்மாத்தான், மாமி!”

காபி குடித்துவிட்டுத்தான் போகவேண்டும் என்ற அன்புக் கட்டளையை மறுக்கத் தோன்றவில்லை அமிர்தாவுக்கு.

சமையலறையில் உரையாடல் தொடர்ந்தது.

“அன்னிக்குப் பாரு, ஒருத்தன் அவனோட போட்டோ அனுப்பியிருந்தான். எப்படிங்கிறே? மேலே சட்டை போடாம, என்னமோ அழகுப்போட்டிக்குப் போஸ் குடுக்கிறமாதிரி. அது அவனோட போட்டோவாகவே இருக்காது. எவனோடதையோ எடுத்து, என்னை இம்ப்ரெஸ் பண்ண அனுப்பியிருக்கான். எதுக்கு? நாளைக்கு, `நீயும் இந்தமாதிரி ஒண்ணு அனுப்பேன்,’னு கேக்கத்தான்!”

தழைந்த மார்பகத்துடன் இருக்கும் தன் முகநூல் சிநேகிதியைப் பார்த்து அவன் எவ்வளவு அதிர்ச்சி

அடைவான்! சிரிக்காமலிருக்கப் பாடுபட்டாள் அமிர்தா.

“இவருக்கு நான் படறபாடு புரியறதா! `ஒனக்கென்ன! புதுசு புதுசா, நிறைய ஃப்ரெண்ட்ஸ்!’ அப்படின்னு என் வயத்தெரிச்சலைக் கொட்டிக்கிறார்”.

அதற்கு மேலும் தாக்குப்பிடிக்க முடியாது, கலகலவென சிரித்தாள் அமிர்தா.

தன் மனதில் இருந்ததையெல்லாம் இன்னொரு ஆத்மாவுடன் பகிர்ந்துகொண்டுவிட்ட நிம்மதியில், மாமியும் சிரித்தாள்.

அடுத்த வாரம், `தெரிந்த முகமாக இருக்கிறதே!’ என்று பார்த்தாள் அமிர்தா.

அதன் கீழ்: முத்துலட்சுமி என்னும் எனது இன்றைய போட்டோ இது. எனக்கு எழுபத்தைந்து வயது!

# 8 பெயரின் முதல் எழுத்து

**(ஆணாதிக்க மனப்பான்மை கொண்டவரும் அவரது மகளும்)**

“அம்மா! நான் பட்டம் வாங்கறச்சே, எல்லாரோட அப்பா அம்மாவும் யூனிவர்சிடிக்கு வந்திருந்தா. எனக்கு மட்டும்..,” எப்பவோ நடந்ததை நினைத்து, அஞ்சனா பெருமூச்சு விட்டுக்கொண்டாள்.

“நான் வேலை செஞ்சாத்தான் நாம்ப சாப்பிட முடியும், ஒன்னைப்

படிக்கவைக்க முடியும். ஒனக்குத் தெரியாதா, அஞ்சனா?” கங்காவின் குரல் கெஞ்சியது.

“நான் ஒன்னைக் குத்தம் சொல்லலே. இன்னிக்காவது சொல்லிடும்மா. நெத்தியிலே பொட்டு இட்டுக்கறே. கழுத்திலேயும் இருக்கு. ஆனா, ஒனக்குத் தாலி கட்டினவரை நான் பாத்ததே இல்லே. அப்படி ஒத்தர் இருக்காரா, இல்லே..”.

கங்கா பதறினாள். “என்ன வார்த்தை சொல்றே! நான் அப்படிப்பட்டவ இல்லேடி. சட்டப்படி என்னை ஒத்தர் கல்யாணம் பண்ணிண்டார். அவருக்குப் பிறந்தவதான் நீ.”

“பின்னே ஏன் அவர் நம்பகூட இல்லே?”

“என்னத்தச் சொல்ல! எங்க கல்யாணம் முடிஞ்ச மறுநாளே அவருக்கு என்னப் பிடிக்காம போயிடுத்து”.

“நீ அப்படி என்ன பண்ணினே?”

“நான் ஒரு தப்பும் பண்ணலே”. மகள் சற்றும் எதிர்பாராவிதமாக, கங்கா தன் புடவையைத் தூக்கினாள். “பாத்தியா? இதுதான்..!” அவள் சுட்டிய இடத்தில் சருமத்தின் நிறம் மாறியிருந்தது.

“`குஷ்டரோகம் இருக்கிற பொண்ணை எல்லாருமா சேர்ந்து

என் தலையிலே கட்டியிருக்கேள்!’ அப்படின்னு கத்திட்டுப் போனவர்தான். எங்கப்பா, `இவளுக்குச் சின்ன வயசிலேருந்து இப்படி ஒரு தழும்பு இருக்கு. இது வியாதியில்லே, மாப்பிள்ளை,’ அப்படின்னு அவர் காலைப் பிடிச்சுண்டு எவ்வளவோ கெஞ்சினார். அந்த மனுஷன் மசியலியே!"

தனக்கு வேறு எந்த விவரமும் தெரியாதே என்று நினைவிலெழ, “முக்கியமானதை விட்டுட்டியேம்மா. ஒன்னை நிர்கதியா விட்டுட்டுப் போனவரோட பேரு?”

கங்கா மௌனம் சாதித்தாள்.

அஞ்சனா மேலும் துருவினாள். “என் பேருக்கு முன்னாடி G ன்னு தலைப்பெழுத்து போட்டியே. அது ஒன்னோட பேரோட முதல் எழுத்துதானே?”

“அவரோட பேரும் அதிலதான் ஆரம்பிக்கும்”. சொல்லியபடியே முகத்தைத் திருப்பிக்கொண்டாள் கங்கா, இதற்குமேலும் இதைப்பற்றிப் பேசத் தான் தயாரில்லை என்பதை உணர்த்துவதுபோல்..

அதற்குமேலும் அம்மாவைக் கஷ்டப்படுத்த மனம் வரவில்லை அஞ்சானாவுக்கு. “இன்னிக்கு ஏதாவது சினிமா பாத்துட்டு,

அப்படியே வெளியில சாப்பிட்டுட்டு வரலாமா?” என்று பேச்சை மாற்றினாள்.

`அதுக்கெல்லாம் காசு கொட்டியா கெடக்கு?’ என்று முன்போல் சொல்ல முடியவில்லை கங்காவுக்கு. அவர்கள் உரையாடலால் அவள் மனமும் தத்தளித்துக்கொண்டுதான் இருக்கும். பாவம்!

“இரு. புடவையை மாத்திண்டு வரேன். நீயும் பௌடர் அடிச்சுண்டு வா,” என்று சிரிக்க முயன்றாள்.

அஞ்சனாவின் மனம் படத்தில் செல்லவில்லை.

G என்ற எழுத்தில் என்னென்ன பெயர்கள் இருக்கும் என்ற யோசனையில் ஆழ்ந்தாள். கணேசன், கணபதி? கங்காதரன்?

அதற்குமேல் யோசிக்க முடியவில்லை.

படத்தில் கதாநாயகன் நாலைந்து தடியன்களை அடித்து உதைத்துக்கொண்டிருந்தான். பின் எப்படித்தான் கதாநாயகியின் மனதில் இடம் பிடிப்பது?

அஞ்சனா முகத்தைச் சுளித்தாள். இந்த காதல், கத்தரிக்காய் எல்லாம் திரையில் பார்க்கத்தான் சுவாரசியமாக, கிளுகிளுப்பாக

இருக்கும். நடைமுறையில் அம்மா மாதிரி எத்தனை பெண்கள் கஷ்டப்படுகிறார்களோ!

“ஒரே சத்தமா இருக்கு,” என்று முணுமுணுத்துவிட்டு, மெல்ல எழுந்தாள். இருண்டிருந்த தியேட்டரின் கதவிலிருந்து வெளிப்பட்டவளுக்கு ஒரு சிறு கும்பல் கண்ணில்பட்டது.

`என்ன நடக்கிறது இங்கே?’

ஒருவர் தரையில் கிடந்தார். முகம் நீல நிறமாக மாறியிருந்தது. கைகள் விறைத்திருக்க, கண்கள் என்னவோ திறந்தபடிதான் இருந்தன.

அருகில் வேதனை தோய்ந்த முகத்துடன் நின்றிருந்தவர் அவரது நண்பர் போலும்! “இருதயச் சிகிச்சை நடந்து ஒரு மாசம்கூட ஆகல,” என்று பொதுவாகத் தெரிவித்தார்.

“நகருங்கள், ப்ளீஸ். என்னால் உதவ முடியும்,” என்றபடி, அவர் அருகில் சென்றாள் அஞ்சனா.

அவர்களிருவரும் வீடு திரும்புகையில், கங்கா விசாரித்தாள்: “பாதி படத்திலே எங்கேடி போயிட்டே?”

“நான் போனதும் நல்லதாப்போச்சு. ஒரு உசிரைக் காப்பாத்தினேன்”.

நடந்ததை விவரித்தாள். “இந்த reflexology-யால ஒடனே பலன்! அவர் கையில சில எடங்களை அழுத்திப்பிடிச்சேன். ரத்த ஓட்டம் சீராகி, எழுந்து நடந்து போனார். `பை’ அப்படின்னு கையை ஆட்டினார்னா பாத்துக்கயேன்!”

“அப்படியே புண்ணியம்!” தாய் மெச்சிக்கொண்டாள். “அவர் யாருன்னு கேக்கலியா நீ?”

“யாரா இருந்தா என்னம்மா? அவர் எழுந்து நடந்ததும், அங்கே இருந்தவாளெல்லாம் என்னைப் பாத்து சிநேகமா சிரிச்சதே சந்தோஷமா இருந்தது! ஒண்ணும் பேசாம நடந்துட்டேன்”.

வேடிக்கை பார்த்தபடி பேரங்காடியில் நடந்துகொண்டிருந்த அஞ்சனா குரல் வந்த திசையில் திரும்பினாள்.

“ஹலோ! அன்னிக்கு பேர்கூடச் சொல்லாம அவசரமா போயிட்டீங்களே! எனக்கும் கேக்கத் தோணல”.

அவள் முகத்திலும் சிரிப்பு படர்ந்தது. பெயரைச் சொல்லிவிட்டு, “சௌக்கியமா?” என்று விசாரித்தாள்.

“ஒங்க புண்ணியத்தால நல்லா இருக்கேன். வாங்களேன், காபி சாப்பிட்டுக்கிட்டே பேசலாம்”.

“ஒங்க பேரைச் சொல்லலியே, ஸார்?”

“கௌரிசங்கர்”.

G - யில் ஆரம்பிக்கும் பெயர்! இவருக்கும் தன் அப்பா வயதுதான் இருக்கும். ஒரு கணம் திகைத்தவள், தன்னையே கடிந்துகொண்டாள்.

இது என்ன பைத்தியக்காரத்தனம்?

`வேண்டாம்’ என்று அம்மாவைத் துரத்தியவரைப்பற்றி எதற்காக ஓயாது யோசித்து மூளையைக் குழப்பிக்கொள்வது? அந்த மனிதர் எங்கே, எவளுடன் இருக்கிறாரோ!

“மத்தவங்க எல்லாரும் வேடிக்கை பாத்துக்கிட்டு நின்னப்போ, நீதான் என்னை.,” மார்பில் கையைப் பதித்துக்கொண்டார். “ஒங்க அம்மாவும் அப்பாவும் ஒன்னை நல்லபடியா வளத்திருக்காங்க அஞ்சனா”.

ஏதோ சொல்லவந்தவள், தன்னை அடக்கிக்கொண்டாள். `எனக்கு அம்மா மட்டும்தான்’ என்பதை கண்டவரிடமெல்லாம் சொல்லிக்கொண்டிருப்பானேன்!

“மனுஷனாப் பிறந்து ஒருத்தருக்கு ஒருத்தர் உதவி செய்யட்டா எப்படி?” என்றாள் அடக்கத்துடன்.

“எனக்கு யாருமேயில்ல,” குழந்தைபோல, சுயபரிதாபத்துடன் கூறினார். “ரெண்டு கல்யாணம். ஒண்ணும் நிலைக்கலே”.

ஒரு முறை அவரை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, தலையைக் குனிந்துகொண்டாள். இவ்வளவு பெரியவரிடம் எப்படித் துருவித் துருவிக் கேட்பது!

தன் மனப்பாரத்தை யாரிடம் கொட்டுவது என்று காத்திருந்தவர்போல் அவரே தொடர்ந்தார்: “ஒருத்திக்குத் துரோகம் பண்ணினேன். தீர விசாரிக்காம அவளைத் துரத்தினேன்”.

அவரே பேசட்டும் என்று அஞ்சனா காத்திருந்தாள்.

“பெருநோய் அவ்வளவு லேசா பரவற வியாதியில்ல. ரொம்ப நாள், அதுவும் நெருக்கமா
இருக்கிறவங்களுக்குத்தான் அந்த வியாதி வர வாய்ப்புண்டு. அது தெரிஞ்சதும், குத்த உணர்ச்சி உறுத்திக்கிட்டே இருந்திச்சு. எனக்கு அவசர புத்தி”.

`இப்போது இந்தப் பேச்சு எதற்கு?’ என்று அஞ்சனா கேட்கவில்லை.

“இன்னொருத்தியை ஏத்துக்க முடியல. அவ கேஸ் போட்டா. எனக்கு..,” தலையைக்

குனிந்துகொண்டார். “நான்..
ஆம்பளையே இல்லேன்னு!”

அஞ்சனாவுக்கு அதற்குமேலும்
சந்தேகம் இருக்கவில்லை.

`நீங்கள் ஆண்மகன்தான்.
உங்களுக்குப் பிறந்த பெண் நான்!’
என்று கூறிவிடலாமா?

`எதற்காக?’ என்று அவள் மனம்
இடக்கு செய்தது.

துரோகமாம், குற்ற உணர்ச்சியாம்!
என்னமாக அளக்கிறார்!
பிரயாசைப்பட்டுத் தேடியிருந்தால்
அம்மா இருக்கும் புதிய இடத்தைக்
கண்டுபிடித்திருக்க முடியாதா?

இத்தனை வருடங்களாக அம்மா எத்தனை அவமானங்களைச் சந்தித்திருப்பாள்! ஏன், தானே கேட்கவில்லையா, `நீ முறையாகக் கல்யாணம்
செய்துகொண்டவள்தானா?’ என்று?

இந்த மனிதர் நன்றாகத் துடிக்கட்டும்.

சே! இவருக்கா உதவி செய்தேன்! மற்றவர்களைப்போல, வேடிக்கை பார்த்துவிட்டு நகர்ந்திருக்கலாம்.

“என்னம்மா அஞ்சனா எழுந்துட்டே?”

“எனக்கு அவசரமா ஒரு எடத்துக்குப் போகணும். மறந்தே போயிட்டேன்,” என்றபடி அஞ்சனா அங்கிருந்து விரைந்தாள்.

அவள் போன திசையையே பார்த்தபடி இருந்தவருக்கு ஏதோ புரிந்தாற்போல் இருந்தது. இவளைப் பெற்றவள் தான் கைவிட்ட கங்காதான். அதே சாயல்! வேறு ஒருவரை மணந்து, இவளைப் பெற்றிருக்கிறாள்.

தாலி கட்டிய பெண்ணுக்குத் துரோகம் செய்துவிட்டதாக எண்ணி இவ்வளவு காலமும் துடித்தோமே! எல்லாம் வீண்.

கௌரிசங்கருக்கு அழுகை வரும்போல இருந்தது.

வீடு திரும்புகையில், அஞ்சனா பலவாறாக யோசித்தாள்.

`அம்மா! நான் அப்பாவைப் பாத்துப் பேசினேன்’.

`அவர் யார் தெரியுமா? அன்னிக்கு ஒரு நாள் தியேட்டரில..’

அம்மா என்ன சொல்வாள்?

`கையோட அப்பாவை அழைச்சிண்டு வந்திருக்கமாட்டியோடி?’ என்பாள். கண்களில் ஆர்வம் கொப்புளிக்கும்.

அவர் வந்தால், அம்மாவின் உலகத்தில் அவரும், அவருடைய உலகத்தில் அம்மாவும்தான் இருப்பார்கள், கடந்தகால இழப்பைச் சரிசெய்வதுபோல். இனி, அவளை யார் கவனிக்கப்போகிறார்கள்!

வேண்டாம். யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொள்வதுபோல் ஆகிவிடும். எனக்கு அம்மா வேண்டும்.

“எங்கே போயிட்டே, அஞ்சனா? ரொம்ப இருட்டிப்போயிடுத்தே! வேலை அதிகமா இன்னிக்கு?” அம்மாவின் உண்மையான கரிசனம் ஒரு கணம் அவளை நிலைதடுமாறவைத்தது. சட்டென்று மனதைத் திடப்படுத்திக்கொண்டாள். `ஆமாம்மா. ரொம்ப வேலை!” என்றாள், முகத்தைப் பரிதாபமாக வைத்துக்கொண்டு.

# 9 நான் பெண்தான்

**(பெண்ணாகத் துடிக்கும் ஆண்)**

என்றாவது வீட்டைவிட்டு வெளியேற வேண்டியிருக்கும் என்பது எதிர்பார்த்திருந்ததுதான்.

இன்றா, நேற்றா, முதன்முதலில் பெரியக்காவின் பாவாடை சட்டையை எடுத்து அணிந்துகொண்டு, கண்ணாடிமுன் நின்றபடி அழகுபார்த்தானே, அன்றே அவன் மனதில் அந்த எண்ணம் புதைந்துவிட்டது.

“நாலு பொம்பளைப் புள்ளைங்களுக்கப்புறம் ஒரு ஆம்பளைப் புள்ளையாவது பொறந்திச்சேன்னு நான் எவ்வளவு சந்தோசப்பட்டுக்கிட்டு இருக்கேன்! நீ இப்படி ஒரு காரியம் செஞ்சுட்டு நிக்கிறயேடா!” நடக்கக் கூடாதது நடந்துவிட்டமாதிரி அம்மா அழுகைக்குரலில் அதட்டியபோது, எதுவும் விளங்காது விழித்தான்.

தான் எதைக் கேட்டாலும் மறுக்காத அம்மா இப்போது தனக்கு மகிழ்ச்சி தரும் இந்தக் காரியத்தால் ஏன் தானும் மகிழவில்லை? அந்த மூன்று வயதுக் குழந்தைக்குப் புரியத்தான் இல்லை.

அம்மா அதோடு நின்றிருந்தாலாவது தேவலாம். “இங்க வந்து பாருங்க இந்த அநியாயத்தை!” என்று அப்பாவையும் அல்லவா துணைக்கு அழைத்தாள்!

எப்போதும்போல, அம்மா கோபித்தால் அப்பாவும், அப்பா திட்டினால் அம்மாவும் பரிந்து பேசுவார்கள் என்ற நம்பிக்கையுடன், சிறுவன் புன்சிரிப்பு மாறாமல் நின்றுகொண்டிருந்தான்.

ஆனால், நடந்ததென்னவோ..!

அம்மா வாய் வார்த்தையாகத்தான் திட்டினாள். அப்பாவோ, ரோத்தானால் (ROTAN, மலாய்

மொழியில், மெல்லிய பிரம்பு) கண்மண் தெரியாது அடித்து நொறுக்கினார், “இன்னொருவாட்டி இப்படிச் செய்வியா? செய்வியா?” என்று கத்தியபடி.

`அப்பா, அம்மா இருவருக்குமே என்னைப் பிடிக்கவில்லை!’ அந்த வடு மனதின் ஆழத்தில் பதிந்தது அன்றுதான். அச்சம்பவத்தால் வயதுக்கு மீறிய சூட்சுமம் பிறந்தது: நான் பெண்மாதிரி இருந்தால், யாருக்குமே பிடிக்காது!

பிறருக்குப் பிடித்ததோ, இல்லையோ, அவனுக்கு அதுதான் வேண்டியிருந்தது. அதனாலேயே தனித்துப் போனான். பெற்றோர்

மற்ற குழந்தைகளை சினிமா, லேக் கார்டன்ஸ் என்றெல்லாம் அழைத்துப் போனபோது, ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி, வீட்டிலேயே தங்கிவிடுவான். அம்மா அவிழ்த்துப் போட்டிருந்த புடவையைக் கட்டிக்கொள்ள இதைவிட நல்ல சந்தர்ப்பம் ஏது!

`பதின்மூன்று வயதில்தான் எத்தனை பாடுபட்டோம்!' நினைக்கும்போது இன்றும் உடல் நடுங்கியது.

இடுப்பை ஆட்டி ஆட்டி நடப்பதும், கழுத்தை ஒடித்து மிகையான கையசைவுடன் பேசுவதும் அவனது இயல்பு. இதை ஏன் பிறர்

புரிந்துகொள்ள மறுக்கிறார்கள் என்ற தாபம் எழுந்தது. தனக்கு மட்டும் மார்பகம் பெரிதாக வளரவில்லையே என்று பெண்களின்மேல் பொறாமை.

`நான் பெண்தான்! எனக்கு ஏன் பொருத்தமில்லாமல் இந்த ஆண் உடம்பு!' சுயவெறுப்பு கிளர்ந்தது. இரவில் காமக்கனா கண்டு எழுச்சி ஏற்பட்டபோது தற்கொலை செய்து கொள்ளலாம்போல இருந்தது. காலிடுக்கில் துணியை இறுகக் கட்டிக்கொண்டு தூங்கப்போனான். இந்த அவலம் யாருக்கும் தெரியாமல் இருக்க வேண்டுமே என்ற பதைப்பு வேறு.

சின்னக்கா அரைத்து வைத்திருந்த மருதாணியை சுண்டு விரல் நகத்தில் ஆசையோடு இட்டுக்கொண்டான். ஒரு வளையலை எப்போதும் தன் புத்தகப் பையில் வைத்திருந்து, அதை அவ்வப்போது அணிவதில் அற்ப சுகம் ஏற்பட்டது.

அவனது போக்கை முதலில் கண்டித்த ஆசிரியர்கள்கூட அவன்மேல் எழுந்த பரிதாபத்தாலோ, இல்லை அவன் நன்றாகப் படித்ததாலோ, அவனைச் சும்மா விட்டுவிட்டார்கள்.

ஆனால், சகமாணவர்களும், ஏன், ஆசிரியர் ஒருவருமே கண்ணை

விஷமமாகச் சிமிட்டியபடி, அவனைத் `தொட்டுப் பார்க்க' விரும்பியபோது, `செத்துப் போய்விடலாமா!' என்ற விரக்தி எழுந்தது.

மகனை இனி மாற்ற முடியாது என்பது திட்டவட்டமாகப் புரிந்துபோக, `தங்களுக்கு ஒரு மகன் பிறக்கவே இல்லை' என்பதுபோல் நடந்துகொண்டார்கள் அவனைப் பெற்றவர்கள். அவனுடைய அத்தியாவசியமான செலவுகளைக் கவனித்துக் கொண்டதுடன் தம் பொறுப்பு தீர்ந்துவிட்டதுபோல நடந்து கொண்டார்கள். குடும்பத்தினருடன் பேச்சு வார்த்தை அறவே அற்றுப் போக, `எனக்கு

யாருமேயில்லையே!’ என்று அவன் மனம் அழுதது.

ஒருவழியாக பள்ளிப் படிப்பு முடிந்துபோக, `சுதந்திரம்’ என்று உள்ளம் ஆர்ப்பரித்தது. எப்போது வீட்டைவிட்டு வெளியேறுவோம் என்று, அந்த நன்னாளை எதிர்பார்த்து ஏங்கியிருந்தவன்தானே! எவரிடமும் சொல்லிக் கொள்ளாது புறப்பட்டான்.

இவனைப் போன்ற பலர் கோலாலம்பூர் மத்தியில், ஒரு காலத்தில் `லிட்டில் இண்டியா’ என்று அழைக்கப்பட்ட நீண்ட கடைவீதி ஒன்றில் அடுக்கு மாடியில் குடியிருந்தனர்.

“இங்கே ஒன் இஷ்டப்படி இருக்கலாம். இனிமே ஒன்னைத் திட்டவோ, அடிக்கவோ யாருமில்லை!” என்று உற்சாகப்படுத்திச் சிரித்தான் நண்பன்.

ஆணுமில்லாது, பெண்ணுமில்லாததால் அடையாளக் கார்டு வாங்க முடியாது. வேலை கிடைப்பதும் எளிதாக இல்லை. வேறு வழி இல்லாது, அங்குள்ள பலரும் உடலை விற்றுப் பிழைத்தனர். ஏதோ, அவர்களால் முடிந்தது! வயிறு என்ற ஒன்று இருக்கிறதே!

அழகு நிலையம் ஒன்றில், இவனைக் கேள்வி எதுவும் கேட்காமல் சேர்த்துக் கொண்டார்கள். வேலை முடிந்து அறைக்குத் திரும்பியதும், முதல் வேலையாக, தான் வாங்கிச் சேர்த்திருந்த பெண்கள் உள்ளாடைகளை அணிந்து அழகு பார்த்தான்.

“எனக்கு இந்த ஒடம்பு வேணாம்டி. எப்பவுமே இப்படி பிரா போட்டுக்கிட்டு, சூடிதாரும், சேலையும் உடுத்த முடிஞ்சா எவ்வளவு நல்லா இருக்கும்!” என்று பெருமூச்செறிந்தான்.

அதற்கு ஒரே ஒரு வழிதான் இருந்தது. உடல் ரீதியில் பெண்ணாக வேண்டும்.

நடக்கிற காரியமா? பல்லாயிரக்கணக்கான பணத்திற்கு எங்கே போவது! ஒரு வழிதான் புலப்பட்டது.

“ஏண்டா! இப்படியே இருந்திட்டுப் போவியா! சினிமா, ஹோட்டலுன்னு பணம் செலவழிக்காம, ஏதோ தவம் பண்றாப்போல சேமிக்கிறியே! ஒரு நாளைக்கு ஒரே வேளை சாப்பிட்டுக்கிட்டு இருந்தா, செத்துத்தான் போவே!” என்று அக்கறையுடன் அவனையொத்த

நண்பர்கள் கூறியபோது, அவன் மனம் தளரவில்லை.

அவனுடைய முதல் வெளிநாட்டுப் பயணம் மலேசிய நாட்டின் வட எல்லையைத் தாண்டியவுடன் இருந்த ஸோங்க்லா என்ற ஊருக்கு. தாய்லாந்தில் அவனைப் போன்றவர்கள் சர்வ சாதாரணமாக இடுப்புக்குக் கீழே முழு நிஜாரும், இடுப்புக்கு மேல் நின்றுவிடும் டி-சர்ட்டுமாக, வயிறு தெரிய உடுத்தி இருந்தனர். முகத்தில் நாடகத்தில் நடிக்கப் போவதுபோல் மிகையான ஒப்பனை. ஆனால் குரல் மட்டும் ஆணைப் போன்றது.

`இவர்களும் மனிதர்கள்தாம்!' என்று பிறர் அவர்களிடம் வித்தியாசம் பாராட்டாமல் நடந்துகொண்டதைப் பார்க்க மகிழ்ச்சியும், `நானும் இந்த சொர்க்கத்தில் பிறந்திருக்கக் கூடாதா!' என்ற ஏக்கமும் ஒருங்கே எழுந்தன.

`என் துயரெல்லாம் முடியும் நாள் தூரத்தில் இல்லை!' என்ற நம்பிக்கையோடு கழித்தான் அடுத்த சில வருடங்களை.

காசு சேரச் சேர, அவ்வப்போது அங்கு அறுவைச் சிகிச்சைக்காகப் போய்வந்தான். அந்த வசதி அவன் பிறந்த நாட்டில் இருக்கவில்லை.

உடல் மாற்றத்துடன், கூடவே பெண்களுக்கான ஹார்மோன்களும் உடலில் ஏற்றப்பட்டன.

பிறந்ததிலிருந்து முப்பது ஆண்டுகளாக அனுபவித்த குழப்பமும் வேதனையும் விலக, அளப்பரியா நிம்மதி பிறந்தது.

இப்போது தான் சாந்தினி!

தலையைப் படியப் படிய வாரி, நிறையப் பூ வைத்துக்கொண்டாள் சாந்தினி. வண்ண வண்ண வளையல்கள், தங்கமாகவே மின்னிய நெக்லஸ், வெள்ளிபோல் ஜொலித்த கொலுசு, நைலக்ஸ்

புடவை என்று பேராசையுடன் எல்லாமே வாங்கிக்கொண்டாள்.

ஆனாலும் மனதில் ஒரு வெறுமை. அது ஏன் என்று அதிகம் யோசிக்க வேண்டியிருக்கவில்லை.

தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, “அம்மா! நான்தாம்மா பேசறேன்,” என்று தொலைபேசியில் அழைத்தாள் ஒருமுறை.

பத்து வருடங்களுக்குமேல் ஆனதினாலோ, அல்லது எத்தனையோ பயிற்சியின் பயனாக பெண் குரலில், மேல் ஸ்ருதியில் பேசினதாலோ, தாய்க்கு முதலில்

புரியவில்லை. “யாருங்க?” என்றாள், குழப்பத்துடன்.

“நான்தாம்மா… சோமு..,” சொல்லும்போதே அடிநாக்கில் கசந்தது. அவசரமாக, “இப்ப நான் சோமு இல்ல. சாந்தினி. பேரில மட்டுமில்லம்மா, ஒடம்பாலேயும் பொண்ணாயிட்டேன்!” என்று பெருமையுடன் தெரிவித்தாள்.

அம்மா அடைந்த அதிர்ச்சி தொடர்பு உடனடியாகத் துண்டிக்கப்பட்டதில் தெரிந்தது.

தான் அப்படிப் பிறந்தது தன் குற்றமா?

வாய்விட்டு அழுதாள் சாந்தினி. `அம்மா! அம்மா!' என்று கதறியபோது, தான் என்றுமே அம்மாவாகவும் ஆக முடியாது என்ற உண்மை உரைக்க, அந்தப் பெண்ணின் அழுகை பலத்தது.

(1960-களின் இறுதியில், சிங்கப்பூரில் இருபது முறைகளுக்குமேல் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு, அவரிடம் மன்றாடிய ஓர் ஆணை -- நீண்டகால மனோதத்துவ பரிசோதனைகளுக்குப் பிறகு -- முதன் முதலாக அறுவைச் சிகிச்சைவழி பெண்ணாக ஆக்கிய டாக்டர் ரத்னம் என்பவருடன் நான்

நிகழ்த்திய பேட்டியின்பின் உதித்த கதை).

# 10 புழுவல்ல பெண்

**(இரு தலைமுறைகளில் பெண்கள்)**

“வேலையிலிருந்து வீடு திரும்ப இவ்வளவு நேரமா? ஆறரை மணிக்குப் பள்ளிக்கூடம் விடுது. இப்போ என்ன மணி, பாத்தியா?”

இரண்டு பஸ் பிடித்து, இரவு எட்டு மணிக்குமேல் வீடு வந்திருக்கும் மனைவிக்கு வழியில் என்ன அசௌகரியமோ என்ற ஆதங்கம் கிஞ்சித்தும் இல்லை

கேசவனிடத்தில். `இவள் எப்போது சமையல் ஆரம்பித்து, நான் எப்போது சாப்பிடுவது!' என்ற வயிற்றுப்பசியே அப்போது பிரதானமாகப்பட்டது.

ஒன்றும் பேசாது, அவனெதிரிலேயே நின்றபடி இருந்தாள் விமலா, தன் நைலக்ஸ் புடவையின் நுனியைத் திருகிக்கொண்டு.

வார்த்தைக்கு வார்த்தை எதிர்பேச்சுப் பேசும் மனைவியா இது!

நம்ப முடியாது அவளைப் பார்த்தான் கேசவன்.

துடிக்கும் கீழுதட்டைப் பல்லால் கடித்தபடி, மெல்ல நிமிர்ந்தாள் விமலா. “என்னை டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போறீங்களா?” தீனமாக ஒலித்தது குரல்.

“எதுக்கு? தலைவலி, காச்சலுக்குத்தான்..,” அவன் மேலே எதுவும் சொல்வதற்குமுன், முகத்தைப் பொத்திக்கொண்டு அழ ஆரம்பித்தாள்.

அவளுடைய கரங்களிலிருந்த நகக்கீறல்கள் அப்போதுதான் அவன் கண்ணில் பட்டன.

`நடக்கக் கூடாதது நடந்துவிட்டது!’

வலுக்கட்டாயமாக அந்த நினைப்பை ஒதுக்கிவிட்டு, “யாராவது கைப்பையை பறிச்சுக்கிட்டுப் போயிட்டாங்களா?” என்று தனக்குத்தானே சமாதானம் செய்துகொள்வதுபோல் கேட்டவனுக்கு, விமலாவின் பலத்த அழுகைதான் பதிலாகக் கிடைத்தது.

“உட்காயம் எதுவுமில்லே. ரெண்டு தையல் போட்டிருக்கேன். ஒரு ரிபோர்ட் குடுக்கிறேன். நல்லவேளை, உடனே வந்திருக்கீங்க. போலீசிலேயும் புகார் குடுத்துடுங்க!” அறிவுரை கூறிய டாக்டரை ஒரு அலட்சியப் பார்வை பார்த்தான் கேசவன்.

ஏன், நாளைக்கே எல்லா மொழி தினசரிகளிலும் தலைப்புச் செய்தியாக வருவதற்கா!

`என் மனைவியை எவனோ கெடுத்துவிட்டான்!' என்று தமுக்கா அடிப்பார்கள்?

"பின் சீட்டில ஒக்காந்துக்க!" உத்தரவு பிறப்பிப்பதுபோல வந்த வார்த்தைகளைக் கேட்டு விமலா துணுக்குற்றாள்.

பார்க்கப்போனால், இவளுடைய சம்பாத்தியம் இல்லாவிட்டால், அவன் கார் வாங்கி இருக்க முடியுமா? ஆனால் அவளைப் பஸ்ஸில் போகச் சொல்லிவிட்டு,

அவன் காரைத் தனதாக்கிக் கொண்டிருக்கிறான்!

(`ஏங்க? நானும் கார் ஓட்டக் கத்துக்கட்டா? ஆசையா இருக்கு!’

`அந்தப் பேச்சே வேணாம். அப்புறம், எனக்குத் தனியா ஒரு காடி வாங்கிக் குடுன்னு கேப்பே!’)

இப்போது அவனருகில் உட்காரும் அருகதையைக்கூட இழந்துவிட்டோமா! கண்ணாலும், மூக்காலும் அவளுடைய துயரம் வெளிப்பட்டது.

“ஏய்! என்ன சும்மா மூக்கை உறிஞ்சிக்கிட்டு! நடந்தது நடந்திடுச்சு. வெளியே தெரிஞ்சா

ஒனக்குத்தான் அவமானம். இதைப்பத்தி யார்கிட்டேயும் மூச்சு விடப்படாது, சொல்லிட்டேன்,” என்று மிரட்டியவன், “பாதி முதுகும், வயிறும் தெரிய, சினிமாக்காரி மாதிரி மெலிசான புடவை கட்டிட்டுப்போனா அது யாரோட தப்புன்னு ஒன்னைத்தான் ஏசுவாங்க!” என்று அவளே வலியப்போய் எவனோ ஒருவன் கையைப் பிடித்து இழுத்ததுபோலப் பேசினான்.

பயத்தால் உறைந்து போனவளாய், விமலா பின்னால்

சாய்ந்துகொண்டாள்.

வீடு திரும்பியதும், சாப்பிடும் எண்ணமே எழவில்லை இருவருக்கும்.

"நான் வெளியே போயிட்டு வரேன். என்கிட்ட சாவி இருக்கு!"

வாரத்தில் ஐந்து நாட்கள் கேட்கும் வாக்கியங்கள்தாம். முன்பெல்லாம், `இப்படி ஓயாமல் சிநேகிதர்களுடன் சேர்ந்து கொட்டமடித்து, குடித்துக் குடித்து, காசோடு, உடலையும் பாழாக்கிக்கொள்கிறாரே!' என்று ஆத்திரப்பட்டு இரையும் விமலாவுக்கு அன்று நிம்மதியாக இருந்தது.

ஏன் இப்படி ஒருவனைத் தனக்குக் கட்டி வைத்தார்கள் என்று பெற்றோர்மேல் ஆத்திரப்பட்டாள்.

எவனோ ஜோசியன் சொன்னானாம், `இந்தப் பெண்ணுக்குத் தாலி பாக்கியம் இல்லை!' என்று! பலரும் அஞ்சி விலக, இவன் ஒருத்தன் மட்டும், `எனக்கு இந்த ஜாதகம், ஜோசியம் இதிலே எல்லாம் நம்பிக்கை கிடையாது!' என்று பெரிய மனது பண்ணினான். பள்ளி இறுதிப் படிப்பையே முடிக்காத அவனது கல்வித் தகுதி அதிலே அடிபட்டுப் போயிற்று. அவனைப்பற்றி வேறு எதையுமே விசாரிக்கவும் தோன்றவில்லை அவர்களுக்கு.

`எத்தனை காலம் இப்படி ஒரு பொய்யான வாழ்க்கை வாழப்போகிறோம்!' என்று அவள் எண்ணாத நாளே கிடையாது.

"நான் எங்கம்மா வீட்டுக்கு போயிட்டு வரட்டுமா?"

`இருந்தா கேசவன் மாதிரி இருக்கணும். ஒய்ஃப் படிச்சவங்க! பிடிப் பிடியா சம்பாரிச்சுக்கொண்டு வருவாங்க. இவன் வாரி விடுவான்!' என்று புகழ்வதைப்போல, நாசுக்காக அவனுடைய குறைவான படிப்பையும் சம்பளத்தையும் குத்திக்காட்டும் நண்பர்களை நினைத்துக்கொண்டான் கேசவன்.

`பெரிய படிப்பு! இன்னொருத்தனா இருந்தா, கெட்டுப்போனவகூட ஒரே வீட்டிலே இருப்பானா?' என்று எண்ணமிட்டவனுக்கு, தான் என்னவோ பெரிய தியாகம் செய்வதுபோல் பட்டது. எப்படியோ, முரட்டுக் குதிரையாக இருந்தவள் அடங்கினாளே என்ற மகிழ்ச்சியும் எழுந்தது. வினயமாக, தன் உத்தரவை அல்லவா கேட்கிறாள்!

எப்போதும் காரில் அவளைக் கொண்டுபோய் விடுபவன், அதிகாரமாகப் பேசிப் பார்த்தான். "எனக்கு இப்போ லீவு கிடைக்காது. நீ பஸ்ஸிலே போய்க்க!"

அப்படியும், குரலை உயர்த்தாமலேயே, “சரிங்க. டிக்கட் எடுத்துடறீங்களா, முன்னாலேயே?” என்று அவள் வேண்டுகோள் விடுத்தது அவனது ஆண்மைக்குப் பூரிப்பாக இருந்தது.

“வாடி!” என்று வரவேற்றதோடு சரி. அவளுடைய தாய்க்கு அவளுடன் பேசக்கூட நேரம் கிடைக்கவில்லை.

“நான்தான் வேலைக்குப் போறவ. நீங்க ஒரு தடவை என்னை வந்து பாத்திருக்கக் கூடாதாம்மா?” என்று ஏக்கத்துடன் கேட்ட மகளை அதிசயமாகப் பார்த்தாள் தாய்.

“நல்லா கேட்டியே! ஒங்கப்பாவுக்கு மணிக்கொரு வாட்டி கோப்பி கலக்கிக் குடுக்கணும். குளிக்க சுடுதண்ணி வெச்சுக் குடுக்கணும். அதோட, இருக்கவே இருக்கு சமையல்!” என்றவளின் குரலில் ஆயாசமில்லை. `கணவரை ஒரு குழந்தையைப்போலப் பார்த்துக் கொள்வதுதான் தனக்குப் பெருமை’ என்பதுபோல் விகசித்திருந்தது அவள் முகம்.

விமலாவுக்குத் திடீரென ஆத்திரம் வந்தது. “நீங்க என்னம்மா, அப்பா வெச்சிருக்கிற வேலைக்காரியா? எதுக்காக இப்படி அவருக்கு அடிமையா உழைக்கறீங்க?” என்ற

மகளை அதிர்ச்சியுடன் பார்த்தாள் தாய்.

“ஒன்னைப் படிக்க வெச்சது தப்பாப் போச்சு. இதிலே என்னடி அடிமைத்தனம்? பொண்ணாப் பிறந்தவளோட கடமை இது. அப்பா எனக்குச் சோறு போட்டு, இருக்க இடம் குடுத்து, முக்கியமா சமூகத்தில ஒரு கௌரவமும் குடுத்திருக்காரில்ல!”

பாலும், சோறும் அளித்துப் பராமரிக்கும் எஜமானர் அடித்தாலும், வாலைக் குழைத்துக்கொண்டு வரும் நாய்தான் விமலாவின் மனக்கண்முன் தோன்றியது. ஒன்றும் பேசாமல் எழுந்தாள்.

“ஒனக்கு ஒரு விஷயம் தெரியுமா, விமலா?” அம்மா குரலைத் தாழ்த்திக்கொண்ட விதத்திலேயே ஏதோ ஊர்வம்புதான் என்று ஊகித்தாள் விமலா.

அம்மாவின்மேல் பரிதாபம் ஏற்பட்டது. வீட்டு வேலையையும், வம்புப் பேச்சையும் தவிர வேறு எதைக் கண்டாள், பாவம்!

“என்னம்மா?” என்று கேட்டுவைத்தாள், அசுவாரசியமாக.

“பக்கத்து வீட்டில குடியிருந்தாளே, செம்பகம்! அவ புருஷன் அவளைத் தள்ளி வச்சுட்டு,

இன்னொருத்தியோட போயிட்டான்!”
அம்மா எக்காளமாகச் சிரித்தாள்.

தன் வாழ்வே சிரிப்பாய் சிரிக்கிறது. இதில் மற்றவர்களிடம் குறை காண தனக்கு என்ன யோக்கியதை என்று தோன்றியது விமலாவுக்கு.

“இவ லட்சணம் என்னவோ! அதான், பாவம், அவனால தாங்க முடியல, தப்பிச்சுக்கிட்டு ஓடிட்டான்!”

விமலா யோசித்தாள். அந்த செம்பகம் நல்லவளாகவே இருக்கக்கூடும், அவளை மணந்தவன்தான் நடத்தை கெட்டவன் என்று ஏன் யாருக்கும் தோன்றவில்லை?

கட்டியவளைத் தவிக்க விட்டுவிட்டு, இன்னொருத்தியுடன் போனது அந்த ஆண்மகன். ஆனால், பழி அந்தப் பெண்ணின்மேலா?

வீடு திரும்பியபோது, விமலாவுக்குப் புதிய தைரியம் வந்தது போலிருந்தது.

“எத்தனை நாளைக்கு இப்படியே இருக்கப் போறீங்க?” நெடுநாட்களுக்குப் பிறகு அவள் குரல் பலமாக ஒலிக்க, கேசவன் எச்சரிக்கையானான். மாற்றான் கை பட்டபோது, அவளுடைய உணர்ச்சிகள் மரத்துப் போயிருக்குமா, என்ன! முகம் தெரியாத எவனுடனோ

காலமெல்லாம் போட்டிபோட அவன் தயாரில்லை.

தன் பயத்தை வெளிக்காட்டாது, “பின்னே? ஒன்கூடப் படுக்கணும்னு ஆசையா?” என்றான் ஏளனமாக.

அடிபட்டதுபோல் துடித்தாள் விமலா. “நீங்கதானே நடந்ததை நினைச்சுக்கூடப் பாக்காதேன்னு சொன்னீங்க?” துக்கத்தில் தழுதழுத்த குரலைக் கனைத்துக் கொண்டாள். `என்னை ஏன் இப்படி ஒரு புழுவைவிடக் கேவலமாக நடத்தறீங்க?’ என்று மன்றாட வாயெடுத்தாள்.

சட்டென உண்மை உரைத்தது. இந்தமாதிரி ஒரு சந்தர்ப்பத்துக்காகத்தானே காத்திருந்தார்!

தான் மேன்மையாக இருந்தபோது பொறாமையும், இப்போது அவமானத்தில் துடிக்கையில் ஒரு குரூரமான திருப்தியும் அடையும் இவனெல்லாம் ஒரு துணைவனா!

ஒரு முடிவுக்கு வந்தவளாக, பெட்டி படுக்கையுடன் புறப்பட்டாள்.

“ஏய்! எங்கே புறப்பட்டே, எங்கிட்டகூடக் கேக்காம?”

நிதானமாக ஒரு பார்வை பார்த்தாள் விமலா. “நான் போறேன்!” குரலில் தீர்மானம்.

அவனைத் திரும்பியும் பாராது, வாசலை நோக்கி அவள் அடியெடுத்து வைக்கும்போதுதான், நிரந்தரமாகத் தன்னைவிட்டு விலகத் தயாராகிவிட்டாள் என்ற உண்மை கடுமையாகத் தாக்க, `என் ஒருத்தன் சம்பளத்திலே எப்படி இவ்வளவு வசதியா காலந்தள்ளறது!’ என்ற அச்சம் பிறந்தது கேசவனுக்கு.

“போ! போ! நாலு பேர் சிரிச்சா, தானே புத்தி வரும்!” பெரிய குரலெடுத்து அலறினான். மாரை வலிப்பதுபோல் இருந்தது.

`யாரோ நாலு பேருக்காக நான் ஏன் போலியா வாழணும்? என்னைக் கெடுத்தவன் தப்பிச்சுட்டான். ஆனா, அவன் செய்த குத்தத்துக்குக் காலமெல்லாம் தண்டனை அனுபவிக்கிறது நானா!' இதையெல்லாம் இவரிடம் சொல்லிக் கொண்டிருப்பானேன், புரியவா போகிறது என்று தோன்ற, வாய் திறவாது, வெளியே நடந்தவள்....

"ஆ!" என்ற அலறல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

கீழே விழுந்து கிடந்தான் கேசவன், `ஐயோ!' என்ற அலறலுடன்.

மனைவிக்குரிய குணங்கள் என்று அவளையறியாமல் பதிந்திருந்த, பதிக்கப்பட்டிருந்தவை, அவளை அதிரச் செய்தன. அவசரமாகக் கணவனுக்கருகே செல்ல யத்தனித்தாள்.

ஏதோ உறைத்தது.

அவளைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர, இது கேசவனது இன்னொரு முயற்சியாக இருக்கலாம்!

இப்போது விட்டுக்கொடுத்தால், பின்பு எப்போதுமே தனியே போகும் தைரியம் தனக்கு வரப்போவதில்லை.

திரும்பிப் பாராமல் வெளியே நடந்தாள் விமலா.

# 11 நாளும் கோயிலும்

**(பெண்களின் சுதந்திர உணர்வை கடவுளாவது புரிந்துகொள்ளாவிட்டால் எப்படி?)**

“ஒனக்கு இப்போ `நாள்,’ இல்லே?” தாயாரின் குரலில் கவலை தொனித்தது.

மகள் அலட்சியமாகக் கையை வீசினாள். “இப்போ என்ன அதுக்கு?”

“இல்லே, ஹம்சா. நாளைக்குக் கோயில்ல ஆடப்போறியே..,”

மீதியைச் சொல்லாமல் விட்டாள்.
“ஆமா, எந்தக் கோயில்லேன்னு சொன்னே?”

“எங்க கிளாஸ் நடக்கிற கோயில்லதான்!”

“காமாட்சி அம்மன் கோயில்!” என்று சொல்லிக்கொண்டாள் தாய், தனக்குள்.

ஹம்சா மேலே எதுவும் பேசவில்லை. பேசப் பிடிக்கவில்லை. ஒரு பாட்டை மனதிற்குள் பாடியபடி அங்கிருந்து நகர்ந்தாள். கை, தன்னையுமறியாமல், அபிநயம் பிடித்தது.

அப்போதைக்கு அம்மாவிடமிருந்து தப்பித்துப்போனால் போதும் என்றிருந்தது அவளுக்கு. மாடியிலிருந்த தனது அறையை நோக்கிப்போனாள்.

அதுவரை அடக்கி வைத்திருந்த ஆத்திரம் மேலெழுந்தது.

`தீட்டு'என்று இன்னும் எத்தனை காலத்திற்குத்தான் பெண்களை மட்டமாகவே நடத்தப்போகிறார்கள்?

ஆதிமனிதன் குகையில் வசித்த காலத்தில், காட்டு விலங்குகள் ரத்த வாடையை முகர்ந்து குகைக்குள் வந்துவிடுமே என்று பயந்து, அக்காலங்களில் பெண்களைத்

தனியே விலக்கிவைத்திருக்கலாம். இப்போது என்ன வந்தது!

பள்ளிக்கோ, அல்லது வேலைக்கோ வெளியே போகும் பெண்கள் வீட்டில் தனித்து விலக்கி வைக்கப்படுவது வெகுவாகக் குறைந்துவிட்டது. ஆனால், கோயில்களில் மட்டும் பழைய விதிமுறைகளை மாற்றாமல், கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்!

சில கோயில்களில், `இவர்களெல்லாம் கோயிலுக்குள் நுழையக்கூடாது!' என்று ஒரு பெரிய பட்டியல் தயாரித்து, வெளியிலேயே எழுதி வைத்திருக்கிறார்கள்! மாத விலக்கு வந்த பெண்களும்,

பெருநோய் வந்தவர்களும் ஒன்றா? கையில்லாத ரவிக்கையோ, குட்டைப்பாவாடையோ அணிபவர்களுக்கு மட்டும் பக்தி இருக்கக்கூடாதா?

அவளுடைய ஆத்திரத்திற்கு முட்டுக்கட்டை போடவேபோல் தொலைபேசி அழைத்தது.

ஹம்சாவுக்குச் சட்டென்று சிரிப்பு வந்தது. யாராவது ஒரு மாணவி, `டீச்சர்! இன்னிக்கு பரத்நாட்யம் க்ளாஸ் இருக்கா?' என்று கேட்பாள்! முதலில் வரவே யோசித்தவர்களுக்கு இப்போதுதான் எத்தனை ஆர்வம்!

நினைத்துப்பார்க்கவே பெருமையாக இருந்தது அவளுக்கு.

`பரதநாட்டியம் வசதிபடைத்தவர்களுக்கு மட்டுமே எட்டக்கூடிய ஓர் உயரம்' என்ற எழுதப்படாத விதிமுறையை எதிர்த்து, ஹம்சா அந்த வகுப்பை ஆரம்பித்திருந்தாள்.

பெரிதாக இடம் எடுத்து நடத்த வழில்லை. குடிசைகளுக்குப் பதிலாகக் கட்டப்பட்ட அடுக்குமாடி வீடுகள் நிறைந்த அவ்விடத்தில் அவர்களுக்கென இருந்த ஒரு சிறு கோயில் பிரகாரம்தான் நாட்டிய வகுப்பு -- பூஜை இல்லாத நேரங்களில்.

அக்கம்பக்கத்திலிருந்த குடும்பங்களிலிருந்து மாணவிகள் வந்தார்கள் -- இலவசம் என்பதைக் கேள்விப்பட்டு. ஆனால், எதிலும் அவர்களுக்கு துடிப்போ, புதியதாக ஒன்றைக் கற்கும் ஆர்வமோ இருக்கவில்லை. எப்போதும் வாயில் விரல். நிமிர்ந்து நிற்கக்கூட தெம்போ, உத்வேகமோ இல்லாதவர்களாக இருந்தார்கள். எட்டு வயதிலேயே கூனலா! இவர்களை எப்படி வழிக்குக்கொண்டு வருவது என்று அயர்ந்தே போனாள் ஹம்சா.

எப்போதோ அம்மா சொன்ன ஒன்று நினைவுக்கு வந்தது: `சின்னப்பிள்ளைங்களுக்குத்

தாகமா இருந்தாலோ, பசியா இருந்தாலோ சொல்லத் தெரியாது. வாயிலே விரல் போட்டுப்பாங்க!’

தான் பசியே அறியாது வளர்ந்திருந்ததில் சிறிது குற்ற உணர்வுகூட ஏற்பட்டது. தன்னுடைய தோழிகள் சிலருடன் கலந்தாலோசித்து, அவர்களுக்குச் சாப்பிட எதையாவது கொடுக்க ஏற்பாடு பண்ணினாள்.

`நாட்டியம் கற்றுக் கொள்கிறார்களோ, இல்லையோ, வயிறாரச் சாப்பிட்டுவிட்டாவது போகட்டுமே!’

வெளியில் எங்கும் கிடைக்காத தோழமையும், சிரிப்பும், அறிவும் அங்கு கிடைப்பதை உணர்ந்தவர்களுக்குச் சில மாதங்களிலேயே உணவில் ஆர்வம் குறைந்துபோயிற்று.

ஆரம்பத்தில் எதையும், `எனக்கு? எனக்கு?' என்று பிடுங்கியவர்கள்கூட, `நீங்களும் சாப்பிடுங்க, டீச்சர்,' என்று உபசாரம் செய்யக் கற்றுக்கொண்டார்கள்.

சில நாட்கள், ஓரிரு பெண்கள் வகுப்புக்கு வராததன் காரணத்தை (`அக்கா சுத்தமில்லே!') யார்மூலமாவது சொல்லி

அனுப்பியபோதுதான் அந்த யோசனை எழுந்தது ஹம்சாவுக்கு.

“ஒங்க ஒடம்பைப்பத்தி ஒங்களுக்குத் தெரிஞ்சிருக்கணும். நீங்க தீட்டுன்னு நினைக்கிறது தப்பான உணவாலேயோ, ஆரோக்கியக் குறைவாலேயோ கிடையாது”.

“ஒரு பெண் கர்ப்பம் தரிக்கத் தயாராக இருக்கிறாள் என்பதைத்தான் உணர்த்துகிறது மாதாந்திர உதிரப்போக்கு. இயற்கையான ஒரு செயல்! அதற்கு ஆயிரம் தப்பு கண்டுபிடித்து..,” என்றெல்லாம் பெண்கள் மருத்துவரான சுந்தரவல்லி அந்த வகுப்புக்கு வந்து விளக்கினாள்.

“நம்ப உடம்பை, உயிரை, கடவுள் குடுத்ததுன்னு ஏத்துக்கறோம். இல்லியா? அவரோட செயலே தப்புங்கிறமாதிரி, இயற்கையா நடக்கிற இதுக்காக பயந்துக்கிட்டு, கோயிலுக்கு வராம இருந்துடாதீங்க. எவ்வளவு கஷ்டப்பட்டு ஒங்களுக்கு டான்ஸ் கத்துக்குடுக்க வராங்க டீச்சர், தெரியுமா?” என்று சந்தடி சாக்கில், ஹம்சா படும்பாட்டையும் குறிப்பிட்டாள் சுந்தரவல்லி. தன் தோழியைப் பார்த்துக் கண்ண்டித்தாள்.

அப்பெண்களின் முகம் தெளிந்தது. தமக்காகப் பாடுபடும் இரு பெண்மணிகளையும் பார்த்து நட்புடன் சிரித்தார்கள்.

“ஏன் இப்படி கூனிக்கிட்டு நடக்கறீங்க?” உரிமையுடன் அதட்டினாள் சுந்தரவல்லி.

ஒரு துணிச்சலான பெண் தங்கள் தர்மசங்கடமான நிலைமையை வெளிப்படுத்தினாள்: “எல்லாரும் எங்க ஒடம்பையே மொறைச்சுப் பாக்கறாங்க, டாக்டர்! வெக்கமா இருக்கு!” குரல் அழுகையாக வந்தது.

பிற மாணவிகளும் தலையை ஆட்டினார்கள். உதடுகள் பிதுங்கின

அலட்சியமாக் கையை வீசினாள், அந்த சிறப்பு விருந்தினர். “அதுக்கென்ன பண்றது? சாமி நமக்கு அவ்வளவு அழகான

ஒடம்பைக் குடுத்திருக்கு!" என்று புன்சிரிப்புடன் கூறியவள், தன் இருகரங்களால் மூன்று வளைவுகளைக் காட்டினாள்.

எல்லாரும் நிம்மதியும், வெட்கமுமாகச் சிரிக்க, ஒரு பெண், "இரண்டுதானே, டாக்டர்?" என்று சிரிப்புடன் வினவ, டாக்டர் யோசிப்பதைப்போல் பாவனை காட்டினாள். "நீ சொல்றது சரி. இரண்டு வளைவுகள்தான்!"

சிரிப்பு பலத்தது. இப்போது எல்லாரும் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள்.

“அந்த சமயம் ஆட முடியலே. வலிக்குது,” என்று ஒரு பெண் சுட்டினாள்.

“ஒங்கம்மாவை கருஞ்சீரகத்தை வறுத்துப் பொடி பண்ணி, மோரிலே கலக்கிக் குடுக்கச் சொல்லு. தினமும் குடிச்சா, கருப்பை வலுவாகும்”.

சொல்லக்கூடாத அந்த வார்த்தையைக் கேட்டதும் எல்லாரும் வெட்கத்துடன் சிரித்தார்கள்.

அறிவுரை தொடர்ந்தது: “ரொம்ப வலிச்சா, வெந்நீர் ஒத்தடம் குடுக்கச்சொல்லு. இந்தமாதிரி சமயங்களிலே சுருண்டு படுக்காம,

எக்சர்சைஸ் பண்ணணும். அது ரொம்ப முக்கியம்!”

அதன்பின், வீட்டில் பாட்டியோ, அம்மாவோ ஆட்சேபித்ததையும் மீறிக்கொண்டு, எந்த நாட்களிலும் கோயிலுக்கு வந்து நாட்டியம் கற்றுக்கொள்ளத் துணிந்தார்கள் அப்பெண்கள்.

நான்கு பேர் பார்க்க நாட்டியமாடும் தகுதி அவர்களுக்கு இருக்கிறது என்பதை உறுதிப்படுத்திக்கொண்ட ஹம்சா, சரஸ்வதி பூஜையன்று (அன்றுதான் டாக்டர் சுந்தரவல்லியின் உபயம்) அவர்கள் ஆட ஏற்பாடு செய்திருந்தாள். மாணவிகளுடன், அவளும்

ஆடவேண்டும் என்று கோயில் குருக்கள் விண்ணப்பித்திருந்தார்.

இப்போது அம்மா அவள் மனதைக் கலைத்துவிட்டாள்!

தொலைபேசியில் ரஞ்சனி பேசினாள், தயங்கித் தயங்கி. “டீச்சர்! எனக்கு இப்போ பீரியட். நான் ஆடலாமா?”

“தாராளமா! ஆனா, யார்கிட்டேயும் இதைப்பத்தி சொல்லிக்கிட்டிருக்க வேண்டாம், என்ன?”

ஒவ்வொரு வகுப்புக்கும் தவறாது வந்து, பெருமுயற்சியுடன் கற்ற கலை! இப்போது பல பேர் பார்க்க தன் திறமையை வெளிப்படுத்த ஒரு

தருணம் வந்திருக்கிறது. அது நழுவி விடுமோ என்ற கவலை இனி இல்லை!

“சரி, டீச்சர்!” என்ற சிறுமியின் குரலில் அலாதி நிம்மதி. “ரொம்ப பயந்துக்கிட்டிருந்தேன், டீச்சர் -- டீச்சர் என்ன சொல்வீங்களோன்னு!”

ஹம்சா சிரித்துக்கொண்டாள். “குளிச்சுட்டு வந்தா போதும். காமாட்சி புரிஞ்சுக்குவா!”

“யாரு, டீச்சர்?”

“காமாட்சி அம்மன்!”

“ஓ!” அப்பெண் புரிந்தவளாகச் சிரித்தாள்.

“தைரியமா ஆடு. அதான் முக்கியம். ஏதாவது மாத்தி, தப்பா ஆடினாலும் பரவாயில்லே. அடிச்சு விட்டுடணும். என்னைத் தவிர, வேற யாருக்கும் அது தெரியப்போறதில்லே!” என்று, பல முறை வகுப்பில் சொன்னதையே திரும்பச் சொன்னாள் ஹம்சா. “காமாட்சி அம்மனும் நம்பளைமாதிரி ஒரு பொண்ணுதானே! கோவிச்சுக்க மாட்டா!” தனக்கே தைரியம் அளித்துக்கொள்வதைப்போல் இருந்தது .

கணினியில் பதிவு செய்திருந்த பாட்டை ஒலிக்கவிட்டாள். முகத்தில் புன்னகை படர, புடவைத்தலைப்பை இழுத்துச் சொருகிக்கொண்டாள்.

தரையைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு, பயிற்சியில் இறங்கினாள் ஹம்சா.

# 12 பெண்ணியம் யாருக்காக?

ஆண்களுடன் சம உரிமை, சுதந்திரம் என்றெல்லாம் பெண்கள் பேச ஆரம்பித்தது அண்மையில் அல்ல.

170 வருடங்களுக்குமுன் பெண்கள் கல்வி கற்பதே தவறு என்பதுபோல் நடைமுறையில் இருந்ததாம். (சுமார் இருபது ஆண்டுகளுக்குமுன் கோலாலம்பூரில் நடந்த ஆசியப் பெண் எழுத்தாளர் கருத்தரங்கின்போது, ஒரு பெண்மணி வட இந்தியாவிலிருந்த அவளுடைய உறவினர் தன்

மனைவிக்கு ரகசியமாக கல்வி போதித்ததைப்பற்றி விவரித்தாள்).

மதத்தைக் காரணம் காட்டி, பெண்களுக்குக் கல்வியறிவு கூடாது என்று சட்டம் விதிக்கும் நாடுகள் இக்காலத்திலும் இருக்கின்றன. இதை எதிர்த்த பெண்ணுக்குக் கொலைத்தண்டனை விதிக்கப்பட்டதை அறிந்திருப்பீர்கள்.

எத்தனையோ காலம் பொறுத்துப்போன பெண்குலம் கல்வி கற்று, யோசிக்க ஆரம்பித்திருக்கிறது.

பெண்களுக்கான கட்டுப்பாடுகள்

`சரியாக உட்கார்!’

எந்த ஆண்பிள்ளையையாவது இப்படிக் கண்டித்திருக்கிறார்களா?

`ஆண்களுக்கு எதிரில் சரிசமமாக உட்காரக்கூடாது’. இன்னொரு எழுதப்படாத விதி.

சகோதரர்களுக்கு அளிக்கப்பட்ட சுதந்திரமும் உரிமையும் தனக்கு ஏன் கிடையாது என்று குமுறும் பெண்ணிடம், `ஊருடன் ஒத்து வாழ்!’ என்பாள் தாய்.

`என்ன இருந்தாலும் நீ ஒரு பெண்!’ என்று, பெண் உறவினர்களாலேயே சொல்லி வளர்க்கப்படும் பெண் அதை அப்படியே ஏற்கிறாள்.

எல்லாரையும் பகைத்துக்கொண்டு, தனியாக நிற்கப் பயம். ஆகவே, பிடிக்கிறதோ, இல்லையோ, பிறருடைய எதிர்பார்ப்பின்படி வாழப் பழகிவிடுகிறாள்.

நமது இதிகாச புராணங்களில் எல்லாம் வேறு சொல்லி வைத்திருக்கிறார்களே, என்ன தவறு நிகழ்ந்தாலும், பெண்மேல்தான் பழி போடவேண்டும் என்று!

பெண் ஆணின் சொத்தா?

`என் மனைவி என் மனம் கோணாமல் நடந்துகொள்பவள்!' என்று பெருமை பேசுகிறவர் அவளுக்கும் மனம் என்று ஒன்று

உண்டு என்பதை நினைக்கத் தவறிவிடுகிறார்.

மனைவி தன் உடைமைப்பொருள் இல்லை, அவளுக்கும் உணர்ச்சிகள், தனிப்பட்ட ஆசைகள் உண்டு என்று உணர்ந்து நடப்பவனே மனைவியின் அன்பையும் மரியாதையையும் பெறுகிறான்.

பெண் தனக்குக் கீழானவள், தான் உயர்ந்தவன், பெண்களை எப்படி வேண்டுமானாலும் நடத்த தனக்கு உரிமை உண்டு என்று பெருமிதப்படுகிறார்கள் பல ஆண்கள். (பத்து சதவிகிதத்திற்கும் குறைவானவர்கள்). அதனாலேயே பொது இடங்களிலும்,

அலுவலகங்களிலும் பெண்களை பாலியல் வதைக்கு ஆளாக்குகிறார்கள் – சொல்லாலும், செயலாலும்.

அப்படிப்பட்ட ஒருவன் வீட்டிலிருக்கும் மனைவியை மட்டும் விட்டு வைப்பானா? கணவன் வதைத்தாலும், மனைவி எதிர்ப்பு காட்டாது, அடங்கிவிடுகிறாள்.

நன்கு படித்த, மூன்று இளம்பெண்கள் என்னிடம் முறையிட்டது: ஆண் பேசும்போது எதுவும் பேசாது, ரசித்துக் கேட்க வேண்டும். இல்லாவிட்டால் அவன் நம்மை ஏற்கமாட்டான்.

(மாறாக, சில பெண்கள் ஓயாது கணவரைச் சாடுவதும் நடந்திருக்கிறது.

`இப்படிக் கத்திக்கொண்டே இருக்கிறாளே! எப்படிப் பொறுத்துப்போகிறீர்கள்?' என்று என் தந்தை ஒருவரை அதிசயித்துக் கேட்டதற்கு, `பெண்களுக்கு, பாவம், என்ன இருக்கிறது! ஓயாத வேலைதான்! அவர்களுடைய முழுத்திறமையையும் வெளிக்காட்ட வாய்ப்பு இல்லை,' என்ற பதில் அந்த நல்லவரிடமிருந்து கிடைத்ததாம்).

## திரைப்படங்களின் தாக்கம்

தமிழ் திரைப்படங்களில், கல்லூரி மாணவர்கள் உடன் படிக்கும் மாணவியரைக் கேலி செய்வதுபோல் பல படங்களில் பார்த்தாயிற்று. யாருமே படிக்க வந்ததாகத் தெரியவில்லை.

அதை முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டு நடக்கும் ஆண்களை நான் சந்தித்திருக்கிறேன். எதிர்த்தும் இருக்கிறேன்.

இவர்கள் இளமையான கல்லூரி மாணவர்கள் அல்லர். மேற்பயிற்சிக்காக வந்திருந்த நாற்பது வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள். தாம் `ஆண்’ என்ற

மேலான நிலையைக் காட்டிக்கொள்வதுபோல் பெண்களை வதைப்பார்கள். எல்லாரையும் அல்ல -- அவர்களை அச்சுறுத்தும் பெண்களை மட்டும்தான். கட்டுப்படுத்த ஒரு வழி.

முன்பு ஒரு கதை படித்தேன். தான் எது செய்தாலும், `என் மனைவி அப்படி செய்யச் சொன்னாள்,' என்று அலுவலக நண்பர்களிடம் கூறினான் ஒருவன். அவனை அவர்கள் ஏளனமாகப் பார்த்தார்கள்.

ஆணுக்குரிய `வீரம்' அவனிடம் இல்லையே, மனைவியை அடக்கிவைக்கத் தெரியவில்லையே என்றுதான் கேலி.

ராட்சசிபோன்ற அப்பெண்ணைப் பார்த்துவிடுவது என்று தீர்மானித்து எல்லாரும் அவன் வீட்டுக்குப் போனபோது, “அவங்களைச் சாப்பிடச் சொல்லுங்க, என்ன பிடிக்கும்னு கேட்டு வாங்கிட்டு வாங்க,’ என்று அவள் கூறியபடி இருக்க, அவர்களுக்குப் புரிந்தது, அவள் கணவனைக் கட்டுப்படுத்தவில்லை, நன்கு வழிநடத்துகிறாள் என்பது.

வித்தியாசமானவள்

`பெண்’ என்றால் நளினமானவள், ஆண் என்பவன் மீசையை முறுக்குபவன் என்பதுபோல் சைகைமூலம் உணர்த்துகிறார்கள்.

அதாவது, பெண்ணுக்கு உடலழகு முக்கியம். ஆண் என்பவன்தான் வீரமானவன்.

ஆண்களைக் கவர்வதற்காகத்தான் ஒரு பெண் தன்னை அலங்கரித்துக்கொள்கிறாள் என்பது சில ஆண்களின் தவறான கணிப்பு. பெண்களும் அப்படியே போதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

தான் அழகாகக் காட்சியளிக்கவேண்டும் என்றுதான் எந்தப் பெண்ணுக்கும் ஆசை இருக்கும். ஆனால், சமூகத்தின் வாய்க்குப் பயந்து, தம் ஆசையை அடக்கிக்கொள்கிறார்கள் பலர்.

அதன் விளைவு: தம்மைப்போல் இல்லாத பிற பெண்களின்மேல் பொறாமை எழுகிறது. அவர்களைப் பழிக்கவும் தவறுவதில்லை.

பொதுவாக எல்லாப் பெண்களையும்போல் இல்லாது, ஒரு பெண் துணிச்சலுடன் நடக்கிறாள் என்று வைத்துக்கொள்வோம். `நான் உன்னைவிடத் தாழ்ந்தவள் இல்லை, என் திறமையை வெளிக்காட்ட பிறரது ஆமோதிப்பு எதற்கு?' என்பது புரிந்து நடப்பவள் அவள்.

இம்மாதிரியான பெண்களைப் பிற பெண்களும் சாடுவார்கள்: "நீ எழுதுவதையெல்லாம் பார்த்து

உன்னை உன் கணவர் திட்டமாட்டாரா?”

பெண்கள் கல்வி கற்று, வேலைக்குப் போனாலும், ஆண்கள் அதிகமாக இல்லாத துறையைத்தான் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆசிரியையாக இருந்தால், பெண்கள் பள்ளிக்கூடம். மருத்துவராக இருந்தால், பிரசவம் அல்லது குழந்தைகள் சார்ந்த துறைதான். (இப்படிப் பிரித்து வைப்பதாலேயே கவர்ச்சி தூண்டிவிடப்படுகிறதோ?)

மாறாக, பாலர் பள்ளியிலிருந்தே ஒன்றாகப் படித்த பையனும்

பெண்ணும் நண்பர்களாகவே பழகுகிறார்கள்.

இயல்பான கவர்ச்சியை அடக்கி, நல்ல நண்பனாகவே பழகுபவன்தான் பெண்களின் மதிப்பைப் பெறுகிறான்.

## வேலைகளில் பங்கு

எத்தனைபேர் மனைவி செய்யும் காரியங்களில் தாமும் பங்கு கொள்கிறார்கள்?

பெண் வீட்டிலேயே இருந்து, வீட்டை நிர்வகித்து, குழந்தைகளையும் பார்த்துக்கொள்ள வேண்டிய காலம்தான் இன்றும்!

வெளிவேலைக்குப் போய்விட்டுத் திரும்பியதும், வீட்டிலேயும் எல்லா வேலைகளையும் செய்தாகவேண்டும், ஏனெனில் அவை `பெண்களின் வேலை’ என்று முத்திரை குத்திவிட்டார்கள்.

இரு பெண்மணிகள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

“வேலை முடிந்து வீட்டுக்குப் போனதும், சமைப்பது, குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பது என்று எல்லா வேலைகளையும் நான்தான் செய்ய வேண்டும். என் கணவர் ஒரே இடத்தில் அமர்ந்து தினசரியைப் படித்துக்கொண்டிருப்பார்.

இல்லாவிட்டால், டி.வி!” என்று கசப்புடன் ஒருத்தி கூறிவிட்டு, “அதுதான் என் கணவர்!” என்றாள் அழுத்தந்திருத்தமாக.

மற்றவள், “எல்லாக் கணவன்மார்களும் ஒன்றுதான்!” என்றாள் சலிப்புடன்.

இவ்வாறு மனத்தாங்கலுடன் இருந்தால், கணவன் மனைவியருக்குள் ஒற்றுமை இருக்குமா, குழந்தைகள்தாம் மகிழ்ச்சியுடன் வளர்வார்களா?

ஆண்கள் பெண்களுடன் கலந்து பேசினால், மற்றவரின் வேலைகளை, அவற்றின்

தன்மையை (நெருக்கடி, கடுமை), மனதில் எழும் ஆசைகளைப் புரிந்துகொள்ள முடியும்.

`ஆண் வேலை, பெண் வேலை' என்று பிரிக்காது, இருவரும் குடும்பச்சுமையை தம்மால் இயன்றவரை ஏற்றால், உறவில் நெருக்கம் ஏற்படும்.

மனைவி சம்பாதிக்கும் பணம்

மனைவி தனக்குச் சொந்தமானவள், அதனால் அவளுடைய சம்பாத்தியமும் தனக்கேதான் என்று ஒருவன் நினைத்தால், அவள் அவனுடைய அடிமையாகத்தான் தன்னை உணர்வாள்.

கதை

அப்படிப்பட்ட ஒரு கணவன் ஒரு பொது இடத்தில் என்னிடம் முறையிட்டார்: “என் மனைவி என்னிடம் கோபித்துக்கொண்டு, அம்மா வீட்டுக்குப் போய்விட்டாள். விவாகரத்து கேட்டிருக்கிறாள். அவள் தாயும், `குடும்பச்செலவுக்குப் பணம் கொடுக்காதவனுடன் எதுக்கு வாழணும்?’ அப்படின்னு தூபம் போடறாங்க. அம்மா புத்தி சொல்ல வேண்டாம்?”

தன் தவறு அவனுக்குப் புலப்படவில்லை. தான் எப்படி நடந்தாலும், மனைவி தனக்கு

அடங்கித்தான் இருக்கவேண்டும் என்று எதிர்பார்த்தான்.

இத்தகைய மனோபாவத்தால், மலேசியாவில் விவாகரத்து கோருகிறவர்கள் பெரும்பாலும் பெண்கள். அவர்களில் இந்தியர்கள்தாம் முதல் நிலையில் இருக்கிறார்கள். (சில ஆண்டுகளுக்குமுன் நான் புள்ளியல் துறையில் சேகரித்த தகவல்).

ஆளுக்கொரு நீதி

`ஆண் `அப்படி இப்படி'த்தான் இருப்பான்!' என்று அவனுடைய முறைகெட்ட நடத்தைக்கு அங்கீகாரம் அளிக்கும் சமூகம்

பெண்கள் உடன் வேலைபார்க்கும் ஆண்களுடன் பேசினாலே சந்தேகக் கண்ணுடன் பார்க்கிறது.

கதை

கணவனிடம் உடலால் வதைக்கப்பட்டு, காவல்துறையினரால் கொண்டு சேர்க்கப்பட்ட பெண்களின் காப்பு இல்லம் அது.

அங்கு நான் பேட்டி கண்ட ஒரு பெண்மணி கட்டட வேலை செய்தவள்.

“வேலை பாக்கறப்போ, `அந்த சுண்ணாம்பை இப்படிக் குடுங்க,’ன்னு நான் ஒருத்தரைக்

கேட்டேன். `அது எப்படிடீ நீ ஒரு ஆம்பளையோட பேசுவே?’ன்னு எங்க வீட்டுக்காரர் அடிச்சு நொறுக்கிட்டாரு!” என்று பொருமியவள், “அது எப்படிங்க, வேலை செய்யறப்போ பேசாம இருக்கமுடியும்?” என்று என்னையே நியாயம் கேட்டாள்.

அப்படி பல சமயங்களில் அடித்த அடியில், அவள் கால் எலும்பு முறிந்து, நொண்டி நொண்டி நடக்கிறாள்.

தன்மீதே அவனுக்கு அவநம்பிக்கை. அதனால்தான் எல்லாப் பெண்களையும் சந்தேகப்படத் தோன்றியிருக்கிறது.

ஆண்களுக்கு விதிவிலக்கு

`பெண் என்றால், தன் இச்சைக்கு உபயோகப்படுத்திக்கொள்ள மட்டும்தான்!' என்று நினைக்கும் ஆண் மனைவியிடம் நேர்மையை எதிர்பார்க்கிறான்.

பொருளாதாரச் சுமையை ஏற்க, படித்த மனைவி வேண்டும், அவளும் ஓர் உத்தியோகத்திற்குப் போய் சம்பாதித்துக் கொடுக்கவேண்டும் என்றெல்லாம் கோரிக்கை விடுக்கும் ஆண் அவள் வெளியுலகில் யார் யாருடன் பழகுகிறாளோ என்று சந்தேகப்பட்டுக்கொண்டே இருந்தால், இருவரது வாழ்க்கையுமே நரகம்தான்.

கதை

ஒரு பல்கலைக்கழக பெண் விரிவுரையாளரிடம் கணவன் கூறியது: “நீ மேற்படிப்பைச் சாக்காக வைத்து வெளிநாடு போனால், என்ன நடக்குமோ! அப்புறம் நீ என்னைக் குற்றம் சொல்லக்கூடாது”.

அதையும் மீறி, அவள் சில ஆண்டுகள் வெளிநாட்டில் தங்கிப் படித்துவிட்டு வந்தபோது, அவன் இன்னொரு பெண்ணை மணந்திருந்தான்.

தமக்கு நடந்ததை அவளைப்போன்ற சிலர் தம் மாணவிகளிடம் கூற,

அவர்கள் தாம் முன்னேறும் ஆசையை ஒடுக்கிக்கொண்டனர்.

பெண்களை அடக்கிக்கொண்டே இருந்தால், அவர்களால் மகிழ்ச்சியாக இருக்கமுடியுமா? அவர்கள் நிறைவாக இல்லாவிட்டால், கணவனை மகிழ்ச்சியாக வைத்திருப்பார்களா?

“எல்லாரும், Happy married life!’ என்று வாழ்த்துகிறார்கள். ஆனா, அது எப்படின்னுதான் யாருக்கும் தெரியலே,” என்று அலுத்துக்கொண்டான் அந்த புதுமாப்பிள்ளை.

இல்லற வாழ்க்கை என்றால் கைகோர்த்துக்கொண்டு, சினிமா, பீச் என்று சுற்றுவதுதான் என்று தாம்பத்தியத்தில் கால்வைக்கும் ஆண், பெண் இருவருக்குமே சொல்லத் தெரியாத குழப்பம்தான்.

ஒழுக்கம் என்பது பெண்களுக்கு மட்டும்தானா? அண்மையில், “ME TOO” என்ற முழக்கத்தால், ஆண்களால் வதைக்கு ஆளான பெண்கள் பகிரங்கமாக தம்மை வதைத்த ஆண்களின் பெயரை வெளியிட ஆரம்பித்தனர்.

அதாவது, நடந்ததில் தம் குற்றம் எதுவுமில்லை, என்ற தெளிவு ஏற்பட்டிருக்கிறது. (இதற்குமுன்,

பலாத்காரம் செய்யப்பட்ட பெண் குற்ற உணர்ச்சி தாங்காது, தற்கொலை செய்துகொள்வதாகத்தான் கதைகளிலும் திரைப்படங்களிலும் காட்டப்பட்டு வந்தது. அதைப் பார்த்துவிட்டு, நடைமுறையிலும் பெண்கள் அப்படியே செய்தனர்).

பாலியல் சுதந்திரம்

பெண்களின் வளர்ப்புமுறை, பாரம்பரியம் இவற்றைப் பொறுத்தது.

திருமணத்தால் மகிழ்ச்சி நீடிக்காது, `வேண்டாம்' என்றால் விட்டுவிட்டுப் போகலாம், சுதந்திரம் கிடைக்கும்

என்று நம்புகிற பெண்கள் அடிக்கடி ஆண்துணையை மாற்றுவார்கள்.

இப்படித் துணைவர்களை மாற்றிக்கொண்டே இருக்கும் பெண்களை அந்த நண்பர்களே மணக்க முன்வருவதில்லை.

`திருமணம் எதற்கு?’ என்று, தம்பதிகள்போல் வாழும் ஆண்-பெண்கள் அதிகரித்துவிட்டார்கள். இருவருக்கும் ஒத்துப்போகுமா என்று பார்க்கவாம். இருதரப்பு பெற்றோர்களின் குறுக்கீடும் இருக்காது. ஒருவரையொருவர் கட்டுப்படுத்தக் கூடாது என்பது விதி.

விவாகரத்து, ஜீவனாம்சம் என்ற அவதி கிடையாது. இருவரும் தம் விருப்பப்படி தத்தம் சம்பாதித்தியத்தைச் செலவழிக்கலாம்.

வேறு ஒரு பெண்ணுடனோ, ஆணுடனோ நெருங்கிய தொடர்பு கூடாது. இருந்தால், பிரிந்துவிடலாம்.

வெளிநாட்டில் சில ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்துவிட்டு, தன் நாட்டிற்குத் திரும்பும் முடிவுடன் அவள் இருக்க, அவன் உடன் போக மறுத்துவிட்டதால் அவர்கள் உறவு முறிந்துபோயிற்று. ஆனாலும், விட்டுப் பிரியும்போது, வருத்தம் எழுந்தது.

பெண்களால் அவதியுற்ற ஆண்களும் உண்டு.

“நான் எத்தனையோ சுதந்திரம் கொடுத்தும், என் மனைவி சரியாக நடக்கவில்லையே!” என்று என்னிடம் புலம்பினார் நாற்பது வயதினர் ஒருவர்.

திருமணத்திற்குமுன் தான் `எப்படி எப்படியோ’ இருந்ததை அவளுடன் பகிர்ந்துகொள்ள, கணவர்மேல் ஓயாது சந்தேகப்பட்டு, இருவரது வாழ்க்கையையும் நரகமாக்கினாள் அந்த பணக்காரப்பெண்.

இன்னொரு உண்மைக்கதை

தான் காதலித்த பெண் ஏமாற்றிவிட்டதால், மனநிலை சீர்கெட்டிருந்த ஓர் இளைஞனை அப்படிப்பட்டவர்களுக்கான இடத்தில் பார்க்கும் வாய்ப்பு கிட்டியது. அவன் பூட்டிய அறைக்குள்.

`பெண்ணின் உரிமை’ என்பதைத் தவறாகப் புரிந்து நடந்த இத்தகைய பெண்கள் பதினைந்து சதவிகிதத்தினர்தாம்.

# 13   நிர்மலா ராகவன்



இந்தியாவில் பிறந்து வளர்ந்தவர். தமிழ்-ஆங்கில இருமொழி எழுத்தாளர்.

1967 தொடக்கம் மலேசியாவில் தமி
ழ் இலக்கியத்துறையில் ஈடுபட்டுவருகின்றார். சிறுகதை, கட்டுரை, தொடர்கதை, வானொலி நாடகம், கலை விமர்சனங்கள் போன்றவற்றை எழுதி வருகின்றார். இவரின் ஆக்கங்கள் மலேசியாவின் பிரபல ஆங்கில மற்றும் தமிழ் இதழ்களிலும் இடம்பெற்றுள்ளன. பல மேடைகளிலும் கருத்தரங்கங்களிலும் பேசியுள்ளார்.

இந்தியர்களிடையே காணும் சமுதாயப் பிரச்சினைகளை அலசி, தமது எழுத்துக்களில் அவற்றின் தீர்வுக்கான ஆலோசனைகள் வழங்கி வருகிறார்.

இளைஞர் மனோநிலைகள் பற்றி அதிகம் எழுதியுள்ளார். நேரடிச் சமூகச் சேவையிலும் ஈடுபட்டவர்.

இவரது சிறுகதைத்தொகுப்பு “ஏணி” தமிழ்நாட்டுக் கல்லூரி ஒன்றில் இளநிலை பட்டப்படிப்புக்கு பாட புத்தகமாக அமைந்தது.

135 பரதநாட்டியத்திற்கான பாடல்களை கர்னாடக இசைப்பாணியில் எழுதி, பாடிப் பதிவு செய்துள்ளார்.

பரிசில்களும், விருதுகளும்

- "சிறுகதைச் செம்மல்" விருது (1991)

- "சிறந்த பெண் எழுத்தாளர்" விருது (1993)

- சிறந்த சிறுகதை எழுத்தாளருக்கான விருது (தங்கப் பதக்கம், மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கம், 2006)

- ஆஸ்ட்ரோ, மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய நாவல் போட்டிகளில் மூன்று முறை பரிசு பெற்றிருக்கிறார்.

- மின்னூல்கள்: தமிழ் -- 37, ஆங்கிலம் --8 (Amazon Kindle, Amazon paperback)

# 14 FreeTamilEbooks.com பற்றி

## மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்:

மின்புத்தகங்களைப் படிப்பதற்கென்றே கையிலேயே வைத்துக் கொள்ளக்கூடிய பல கருவிகள் தற்போது சந்தையில் வந்துவிட்டன. Kindle, Nook, Android Tablets போன்றவை இவற்றில் பெரும்பங்கு வகிக்கின்றன. இத்தகைய கருவிகளின் மதிப்பு தற்போது 4000 முதல் 6000 ரூபாய் வரை குறைந்துள்ளன. எனவே

பெரும்பான்மையான மக்கள் தற்போது இதனை வாங்கி வருகின்றனர்.

## ஆங்கிலத்திலுள்ள மின்புத்தகங்கள்:

ஆங்கிலத்தில் லட்சக்கணக்கான மின்புத்தகங்கள் தற்போது கிடைக்கப் பெறுகின்றன. அவை PDF, EPUB, MOBI, AZW3. போன்ற வடிவங்களில் இருப்பதால், அவற்றை மேற்கூறிய கருவிகளைக் கொண்டு நாம் படித்துவிடலாம்.

## தமிழிலுள்ள மின்புத்தகங்கள்:

தமிழில் சமீபத்திய புத்தகங்களெல்லாம் நமக்கு

மின்புத்தகங்களாக கிடைக்கப்பெறுவதில்லை. ProjectMadurai.com எனும் குழு தமிழில் மின்புத்தகங்களை வெளியிடுவதற்கான ஓர் உன்னத சேவையில் ஈடுபட்டுள்ளது. இந்தக் குழு இதுவரை வழங்கியுள்ள தமிழ் மின்புத்தகங்கள் அனைத்தும் PublicDomain-ல் உள்ளன. ஆனால் இவை மிகவும் பழைய புத்தகங்கள்.

சமீபத்திய புத்தகங்கள் ஏதும் இங்கு கிடைக்கப்பெறுவதில்லை.

**சமீபத்திய புத்தகங்களை தமிழில் பெறுவது எப்படி?**

அமேசான் கிண்டில் கருவியில் தமிழ் ஆதரவு தந்த பிறகு, தமிழ் மின்னூல்கள் அங்கே விற்பனைக்குக் கிடைக்கின்றன. ஆனால் அவற்றை நாம் பதிவிறக்க இயலாது. வேறு யாருக்கும் பகிர இயலாது.

சமீபகாலமாக பல்வேறு எழுத்தாளர்களும், பதிவர்களும், சமீபத்திய நிகழ்வுகளைப் பற்றிய விவரங்களைத் தமிழில் எழுதத் தொடங்கியுள்ளனர். அவை இலக்கியம், விளையாட்டு, கலாச்சாரம், உணவு, சினிமா, அரசியல், புகைப்படக்கலை, வணிகம் மற்றும் தகவல்

தொழில்நுட்பம் போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் அமைகின்றன.

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து தமிழ் மின்புத்தகங்களை உருவாக்க உள்ளோம்.

அவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள் Creative Commons எனும் உரிமத்தின் கீழ் வெளியிடப்படும். இவ்வாறு வெளியிடுவதன் மூலம் அந்தப் புத்தகத்தை எழுதிய மூல ஆசிரியருக்கான உரிமைகள் சட்டரீதியாகப் பாதுகாக்கப்படுகின்றன. அதே நேரத்தில் அந்த மின்புத்தகங்களை யார் வேண்டுமானாலும், யாருக்கு

வேண்டுமானாலும், இலவசமாக வழங்கலாம்.

எனவே தமிழ் படிக்கும் வாசகர்கள் ஆயிரக்கணக்கில் சமீபத்திய தமிழ் மின்புத்தகங்களை இலவசமாகவே பெற்றுக் கொள்ள முடியும்.

**தமிழிலிருக்கும் எந்த வலைப்பதிவிலிருந்து வேண்டுமானாலும் பதிவுகளை எடுக்கலாமா?**

கூடாது.

ஒவ்வொரு வலைப்பதிவும் அதற்கென்றே ஒருசில அனுமதிகளைப் பெற்றிருக்கும். ஒரு வலைப்பதிவின் ஆசிரியர் அவரது

பதிப்புகளை “யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்” என்று குறிப்பிட்டிருந்தால் மட்டுமே அதனை நாம் பயன்படுத்த முடியும்.

அதாவது “Creative Commons” எனும் உரிமத்தின் கீழ் வரும் பதிப்புகளை மட்டுமே நாம் பயன்படுத்த முடியும்.

அப்படி இல்லாமல் “All Rights Reserved” எனும் உரிமத்தின் கீழ் இருக்கும் பதிப்புகளை நம்மால் பயன்படுத்த முடியாது.

வேண்டுமானால் “All Rights Reserved” என்று விளங்கும் வலைப்பதிவுகளைக்

கொண்டிருக்கும் ஆசிரியருக்கு அவரது பதிப்புகளை “Creative Commons” உரிமத்தின் கீழ் வெளியிடக்கோரி நாம் நமது வேண்டுகோளைத் தெரிவிக்கலாம். மேலும் அவரது படைப்புகள் அனைத்தும் அவருடைய பெயரின் கீழே தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் நாம் அளிக்க வேண்டும்.

பொதுவாக புதுப்புது பதிவுகளை உருவாக்குவோருக்கு அவர்களது பதிவுகள் நிறைய வாசகர்களைச் சென்றடைய வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். நாம் அவர்களது படைப்புகளை எடுத்து இலவச மின்புத்தகங்களாக வழங்குவதற்கு

நமக்கு
அவர்கள் அனுமதியளித்தால், உண்மையாகவே அவர்களது படைப்புகள் பெரும்பான்மையான மக்களைச் சென்றடையும். வாசகர்களுக்கும் நிறைய புத்தகங்கள் படிப்பதற்குக் கிடைக்கும்

வாசகர்கள் ஆசிரியர்களின் வலைப்பதிவு முகவரிகளில் கூட அவர்களுடைய படைப்புகளை தேடிக் கண்டுபிடித்து படிக்கலாம். ஆனால் நாங்கள் வாசகர்களின் சிரமத்தைக் குறைக்கும் வண்ணம் ஆசிரியர்களின் சிதறிய வலைப்பதிவுகளை ஒன்றாக இணைத்து ஒரு முழு

மின்புத்தகங்களாக உருவாக்கும் வேலையைச் செய்கிறோம். மேலும் அவ்வாறு உருவாக்கப்பட்ட புத்தகங்களை “மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்”-க்கு ஏற்ற வண்ணம் வடிவமைக்கும் வேலையையும் செய்கிறோம்.

**FreeTamilEbooks.com**

இந்த வலைத்தளத்தில்தான் பின்வரும் வடிவமைப்பில் மின்புத்தகங்கள் காணப்படும்.

PDF for desktop, PDF for 6” devices, EPUB

இந்த வலைதளத்திலிருந்து யார் வேண்டுமானாலும்

மின்புத்தகங்களை இலவசமாகப் பதிவிறக்கம் (download) செய்து கொள்ளலாம்.

அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்பட்ட புத்தகங்களை யாருக்கு வேண்டுமானாலும் இலவசமாக வழங்கலாம்.

## இதில் நீங்கள் பங்களிக்க விரும்புகிறீர்களா?

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் தமிழில் எழுதப்பட்டிருக்கும் வலைப்பதிவுகளிலிருந்து பதிவுகளை
எடுத்து, அவற்றை LibreOffice/MS Office போன்ற wordprocessor-ல்

போட்டு ஓர் எளிய மின்புத்தகமாக மாற்றி எங்களுக்கு அனுப்பவும்.

அவ்வளவுதான்!

மேலும் சில பங்களிப்புகள் பின்வருமாறு:

1. ஒருசில பதிவர்கள்/எழுத்தாளர்களுக்கு அவர்களது படைப்புகளை “Creative Commons” உரிமத்தின்கீழ் வெளியிடக்கோரி மின்னஞ்சல் அனுப்புதல்
2. தன்னார்வலர்களால் அனுப்பப்பட்ட மின்புத்தகங்களின்

   உரிமைகளையும் தரத்தையும் பரிசோதித்தல்
3. சோதனைகள் முடிந்து அனுமதி வழங்கப்பட்ட தரமான மின்புத்தகங்களை நமது வலைதளத்தில் பதிவேற்றம் செய்தல்

விருப்பமுள்ளவர்கள்freetamilebooksteam@gmail.comஎனும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

## இந்தத் திட்டத்தின் மூலம் பணம் சம்பாதிப்பவர்கள் யார்?

யாருமில்லை.

இந்த வலைத்தளம் முழுக்க முழுக்க தன்னார்வலர்களால்

செயல்படுகின்ற ஒரு வலைத்தளம் ஆகும். இதன் ஒரே நோக்கம் என்னவெனில் தமிழில் நிறைய மின்புத்தகங்களை உருவாக்குவதும், அவற்றை இலவசமாகப் பயனர்களுக்கு வழங்குவதுமே ஆகும்.

மேலும் இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள், ebook reader ஏற்றுக்கொள்ளும் வடிவமைப்பில் அமையும்.

**இத்திட்டத்தால் பதிப்புகளை எழுதிக்கொடுக்கும் ஆசிரியர்/பதிவருக்கு என்ன லாபம்?**

ஆசிரியர்/பதிவர்கள் இத்திட்டத்தின் மூலம் எந்தவிதமான தொகையும் பெறப்போவதில்லை. ஏனெனில், அவர்கள் புதிதாக இதற்கென்று எந்தஒரு பதிவையும் எழுதித்தரப்போவதில்லை.

ஏற்கனவே அவர்கள் எழுதி வெளியிட்டிருக்கும் பதிவுகளை எடுத்துத்தான் நாம் மின்புத்தகமாக வெளியிடப்போகிறோம்.

அதாவது அவரவர்களின் வலைதளத்தில் இந்தப் பதிவுகள் அனைத்தும் இலவசமாகவே கிடைக்கப்பெற்றாலும், அவற்றையெல்லாம் ஒன்றாகத் தொகுத்து ebook reader போன்ற

கருவிகளில் படிக்கும் விதத்தில் மாற்றித் தரும் வேலையை இந்தத் திட்டம் செய்கிறது.

தற்போது மக்கள் பெரிய அளவில் tablets மற்றும் ebook readers போன்ற கருவிகளை நாடிச் செல்வதால் அவர்களை நெருங்குவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.

**எவ்வாறு ஓர் எழுத்தாளரிடம் Creative Commons உரிமத்தின் கீழ் அவரது படைப்புகளை வெளியிடுமாறு கூறுவது?**

இதற்கு பின்வருமாறு ஒரு மின்னஞ்சலை அனுப்ப வேண்டும்.

<துவக்கம்>

உங்களது வலைத்தளம் அருமை [வலைதளத்தின் பெயர்].

தற்போது படிப்பதற்கு உபயோகப்படும் கருவிகளாக Mobiles மற்றும் பல்வேறு கையிருப்புக் கருவிகளின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது.

இந்நிலையில் நாங்கள்https://freetamilebooks.comஎனும் வலைதளத்தில், பல்வேறு தமிழ் மின்புத்தகங்களை வெவ்வேறு துறைகளின் கீழ் சேகரிப்பதற்கான ஒரு புதிய திட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

இங்கு சேகரிக்கப்படும் மின்புத்தகங்கள் பல்வேறு கணிணிக் கருவிகளான Desktop, ebook readers like Kindle, nook, mobiles, tablets with android, iOS போன்றவற்றில் படிக்கும் வண்ணம் அமையும். அதாவது இத்தகைய கருவிகள் support செய்யும் pdf, ebub போன்ற வடிவமைப்பில் புத்தகங்கள் அமையும்.

இதற்காக நாங்கள் உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை பெற விரும்புகிறோம். இதன் மூலம் உங்களது பதிவுகள் உலகளவில் இருக்கும் வாசகர்களின் கருவிகளை நேரடியாகச் சென்றடையும்.

எனவே உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை பிரதியெடுப்பதற்கும் அவற்றை மின்புத்தகங்களாக மாற்றுவதற்கும் உங்களது அனுமதியை வேண்டுகிறோம்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்களில் கண்டிப்பாக ஆசிரியராக உங்களின் பெயரும் மற்றும் உங்களது வலைதள முகவரியும் இடம்பெறும். மேலும் இவை “Creative Commons” உரிமத்தின் கீழ் மட்டும்தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் அளிக்கிறோம்.

http://creativecommons.org/licenses/

நீங்கள் எங்களை பின்வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளலாம்.

e-mail : **freetamilebooksteam@gmail.com**
FB : https://www.facebook.com/FreeTamilEbooks48

நன்றி.

</முடிவு>

மேற்கூறியவாறு ஒரு மின்னஞ்சலை உங்களுக்குத் தெரிந்த அனைத்து எழுத்தாளர்களுக்கும் அனுப்பி

அவர்களிடமிருந்து அனுமதியைப் பெறுங்கள்.

முடிந்தால் அவர்களையும் “Creative Commons License”-ஐ அவர்களுடைய வலைதளத்தில் பயன்படுத்தச் சொல்லுங்கள்.

கடைசியாக அவர்கள் உங்களுக்கு அனுமதி அளித்து அனுப்பியிருக்கும் மின்னஞ்சலை **freetamilebooksteam@gmail.com** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஓர் எழுத்தாளர் உங்களது உங்களது வேண்டுகோளை மறுக்கும் பட்சத்தில் என்ன செய்வது?**

அவர்களையும் அவர்களது படைப்புகளையும் அப்படியே விட்டுவிட வேண்டும்.

ஒருசிலருக்கு அவர்களுடைய சொந்த முயற்சியில் மின்புத்தகம் தயாரிக்கும் எண்ணம்கூட இருக்கும். ஆகவே அவர்களை நாம் மீண்டும் மீண்டும் தொந்தரவு செய்யக் கூடாது.

அவர்களை அப்படியே விட்டுவிட்டு அடுத்தடுத்த எழுத்தாளர்களை நோக்கி நமது முயற்சியைத் தொடர வேண்டும்.

**மின்புத்தகங்கள் எவ்வாறு அமைய வேண்டும்?**

ஒவ்வொருவரது வலைத்தளத்திலும் குறைந்தபட்சம் நூற்றுக்கணக்கில் பதிவுகள் காணப்படும்.அவை வகைப்படுத்தப்பட்டோ அல்லது வகைப்படுத்தப் படாமலோ இருக்கும்.

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ஒரு பொதுவான தலைப்பின்கீழ் வகைப்படுத்தி மின்புத்தகங்களாகத் தயாரிக்கலாம்.அவ்வாறு வகைப்படுத்தப்படும் மின்புத்தகங்களை பகுதி-Iபகுதி-IIஎன்றும் கூட தனித்தனியே பிரித்துக் கொடுக்கலாம்.

## தவிர்க்க வேண்டியவைகள் யாவை?

இனவெறி, பாலியல்நுகர்வு, வன்முறை போன்றவற்றைத் தூண்டும் வகையான பதிவுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

## எங்களைத் தொடர்பு கொள்வது எப்படி?

நீங்கள் பின்வரும் முகவரிகளில் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

- **email : freetamilebooksteam@gmail.com**
- Facebook: https://www.facebook.com/FreeTamilEbooks

# இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் யார்?

குழு – https://freetamilebooks.com/team/

**Supported by**

- கணியம் அறக்கட்டளை - https://kaniyam.com/foundation

# 15 கணியம் அறக்கட்டளை

## தொலை நோக்கு – Vision

தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழல்

## பணி இலக்கு – Mission

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப, தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும், அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

## தற்போதைய செயல்கள்

- கணியம் மின்னிதழ் – kaniyam.com
- கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இலவச தமிழ்

மின்னூல்கள் – FreeTamilEbooks.com

# கட்டற்ற மென்பொருட்கள்

- உரை ஒலி மாற்றி – Text to Speech
- எழுத்துணரி – Optical Character Recognition
- விக்கிமூலத்துக்கான எழுத்துணரி
- மின்னூல்கள் கிண்டில் கருவிக்கு அனுப்புதல் – Send2Kindle
- விக்கிப்பீடியாவிற்கான சிறு கருவிகள்

- மின்னூல்கள் உருவாக்கும் கருவி
- உரை ஒலி மாற்றி – இணைய செயலி
- சங்க இலக்கியம் – ஆன்டிராய்டு செயலி
- FreeTamilEbooks – ஆன்டிராய்டு செயலி
- FreeTamilEbooks – ஐஓஎஸ் செயலி
- WikisourceEbooksReport இந்திய மொழிகளுக்ககான விக்கிமூலம் மின்னூல்கள் பதிவிறக்கப் பட்டியல்
- FreeTamilEbooks.com – Download counter மின்னூல்கள் பதிவிறக்கப் பட்டியல்

# அடுத்த திட்டங்கள்/மென்பொருட்கள்

- விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்
- முழு நேர நிரலரை பணியமர்த்தி பல்வேறு கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்குதல்
- தமிழ் NLP க்கான பயிற்சிப் பட்டறைகள் நடத்துதல்
- கணியம் வாசகர் வட்டம் உருவாக்குதல்

- கட்டற்ற மென்பொருட்கள், கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் வளங்களை உருவாக்குபவர்களைக் கண்டறிந்து ஊக்குவித்தல்
- கணியம் இதழில் அதிக பங்களிப்பாளர்களை உருவாக்குதல், பயிற்சி அளித்தல்

- மின்னூலாக்கத்துக்கு ஒரு இணையதள செயலி
- எழுத்துணரிக்கு ஒரு இணையதள செயலி
- தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்

- OpenStreetMap.org ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல்
- தமிழ்நாடு முழுவதையும் OpenStreetMap.org ல் வரைதல்
- குழந்தைக் கதைகளை ஒலி வடிவில் வழங்குதல்
- Ta.wiktionary.org ஐ ஒழுங்குபடுத்தி API க்கு தோதாக மாற்றுதல்
- Ta.wiktionary.org க்காக ஒலிப்பதிவு செய்யும் செயலி உருவாக்குதல்
- தமிழ் எழுத்துப் பிழைத்திருத்தி உருவாக்குதல்
- தமிழ் வேர்ச்சொல் காணும் கருவி உருவாக்குதல்

- எல்லா FreeTamilEbooks.com மின்னூல்களையும் Google Play Books, GoodReads.com ல் ஏற்றுதல்
- தமிழ் தட்டச்சு கற்க இணைய செயலி உருவாக்குதல்
- தமிழ் எழுதவும் படிக்கவும் கற்ற இணைய செயலி உருவாக்குதல் ( https://aamozish.com/Course_preface போல)

மேற்கண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை

kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

## வெளிப்படைத்தன்மை

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும் அனைவருக்கும் பொதுவானதாகவும், 100% வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும். இந்த இணைப்பில் செயல்களையும், இந்த இணைப்பில் மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும் மென்பொருட்கள்

யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், GNU GPL, Apache, BSD, MIT, Mozilla ஆகிய உரிமைகளில் ஒன்றாக வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள் யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

## நன்கொடை

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உடனே விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

Kaniyam Foundation
Account Number : 606101010050279

606 1010 100 502 79

Union Bank Of India
West Tambaram, Chennai

IFSC – UBIN0560618